

10-11
5



பொன்னி

மாதம் இருமுறை

ஆசிரியர்:
முருகு சுப்பிரமணியன்

பொருளடக்கம்

மலர் 3 NA-3 இதழ் 19

ஆகியோரின் எழுத்தோவியங்கள்

திருவள்ளுவர் ஆண்டு 1980 விலை அணா 5
ஐப்பசித் திங்கள் 25-ம் நாள் 10—11—49

ஆசை ஆசையடி!

ஆசை ஆசையடி — கொன்னே
ஆசை ஆசையடி!

ஆந்திர நாட்டைச் சார்ந்த அரசியல்
ஆர்ப்பாட்டக் காரர் பெருக்கே மிக
ஆசை ஆசையடி!

பட்டம் பதவிகளில் ஆசை வைத்தார்—அது
பலித மாகவே மாகாணம் கேட்டார்
கெட்ட உள்ளத்தி ஞலே சென்னையைக்
கேட்டார் ஆந்திர கேசரி மாரே!
ஆசை ஆசையடி!

தேடும் பதவிகளுக் கூறெனக் கருதித்
திராவிடப் பிரிவினைத் தேவை மறுத்தார்
ஆடினர் தனிமா காணம் வேண்டியே
ஆந்திரர் அனைவரும் சேர்ந்துகொண் டேதான்!
ஆசை ஆசையடி!

சென்னையை இழக்கத் தமிழர் துணிவரோ?
சிந்தையை இழந்தார் கூவினல் மசிவரோ?
என்னதான் ஆடினும் சொந்தத் தலைநகர்
இழக்கத் துணிவரோ செந்தமிழ் நாட்டவர்!

ஆசை ஆசையடி! ஆந்திரருக் கேமிக
ஆசை ஆசையடி!

— அம்மான்



மாணவர் கடமை!

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தமிழர் பல்கலைக் கழகமாகக் கருதப்பட்டுப் போற்றப்பட்டு வருவதொன்றாகும்; தமிழ் மொழியிடத்து அக்கறை காட்டும் பல் கலைக் கழகம் அது ஒன்றேதான் என்றாலும் மிகையாகாது. ஒரு தனி மனிதரின் வள்ளன்மையில் எழுந்து கல்வித் துறையில் அரிய பணி ஆற்றி வருகிறது அந்நிறுவனம்.

எனினும் நாட்டில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு உரிய மதிப்பு இன்று வரையில் கிடைத்திலது. அங்கே பட்டம் பெற்று வருவோரின் தகுதியும் குறைத்தே மதிப்பிடப்பட்டு வருகிறது. மற்ற பல்கலைக் கழகங்களோடு சமதையாக இதனை எண்ண விரும்பாதாரும் உண்டு. மதிப்பீடு அவரவர் உள்ள நிலையைப் பொருத்ததென்றாலும், இப்பல்கலைக் கழகம் குறைந்த மதிப்பீட்டின் கீழ் பெரும்பான்மையான மக்களால் எண்ணப்படுகிறது என்பது மட்டும் என்னவோ உண்மை.

இவ்வாறு குறைத்து மதிப்பிடத் தகுந்த காரணம் வேண்டுமல்லவா? அண்ணாமலை நகரில் படிப்போரெல்லாம், பட்டம் பெற்று விடுகின்றனரா? அல்லது அங்கு பணியாற்றும் பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும் தகுதி குறைந்தவர்களா? அல்லது தங்கள் பணியில் தவறி நடக்கின்றனரா? அல்லவே அல்ல. ஆனால் ஒரு குறை உண்டு. தமிழ் மொழியிடத்து இப்பல்கலைக் கழகம் மாறாத ஆர்வம் காட்டுகிறது; அதன் வளர்ச்சியிலே நாட்டம் கொள்கிறது. இந்த ஒரு குறைபாடு (!) தான் இப் பல்கலைக் கழகம் குறைந்த மதிப்பீடு பெறுவதற்குரிய காரணமேயொழிய வேறொன்றும் அல்ல.

தமிழ்ப் பற்றுக் கொண்டுள்ள காரணமாக இக்கீழ் நிலை என்றால் நீங்கள் நம்பமாட்டீர்கள்! நாட்டு நிலை அப்படி இருக்கிறது; மக்களைத் தம்பால் ஈர்த்துச்

செல்லும் பிரசார உலகம் அவர்களை அப்படியெல்லாம் நம்பச் செய்கிறது; ஆட்சியிலிருப்போரையும் 'அது உண்மை தானோ?' என்று எண்ணவைக்கிறது. ஆம். தமிழ்ப் பகைவர்கள் கையில் பிரசார சாதனங்கள் சிக்கி விட்ட ஒரே காரணத்தால் தான் தமிழ் வளர்க்கும் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் குறைந்த மதிப்பீடு பெற்று வரலாயிற்று. நிற்க.

இந்நிலை மாற வேண்டுமென்று எண்ணாதார் தமிழ் நாட்டில் இல்லை; தமிழிடத்தும் தமிழ் மக்களிடத்தும் அன்பு கொண்டுள்ள அனைவரும் அண்ணாமலைப் பல் கலைக் கழகம் மற்ற பல்கலைக் கழகங்களோடு சரி நிகர் சமானமாக விளங்கவேண்டுமென்றே ஆசைப்பட்டனர். அவ்வகையில் வெற்றியும் கிட்டிவிடும் என்ற சூழ்நிலை உருவாகிக் கொண்டு வந்தது. இப்போது அங்கு துணை வேந்தராய்ப் பணியாற்றும் டாக்டர் மணவாள ராமா நுஜம் அவர்கள் தாம் பதவியேற்ற குறைந்த கால அளவுக்குள் பல முற்போக்கான சீர்திருத்தங்களைச் செய்திருக்கிறார்கள்; குறைபாடுகளை நிறை செய்திருக் கிறார்கள்.

அவர்தம் முயற்சி முழுப்பயன் அளிக்கும் வேளையில் தான் 'அந்தக் கலாட்டா' அங்கே நிகழ்ந்தது. சென்ற செப்டம்பர்த் திங்களில், பல்கலைக் கழகம் நிறுவியவர் நாட்கொண்டாட்டம் நிகழ்ந்த போதுதான் அந்த ஆர்ப் பாட்டம் நடந்திருக்கிறது. சென்னை மேயர் திரு எஸ். ராமசாமி கொண்டாட்டத்தில் கலந்து கொள்ளவந்துள் ளார்; சிறிது நேரத்தில் விழா நடைபெறவேண்டும். அப் போது தான் மாணவர்களில் ஒரு பகுதியினர் 'புரட்சி வீரர்'களாக மாறி மாணவர் உலகிற்கே அழியாத பழி யைத் தேடித் தந்தனர். ஆம். அண்ணாமலைப் பல் கலைக் கழகம் சிறப்பை மீட்டு வரும் நிலையில் தான் 'கரி பூசும்' வேலையில் கருத்தூக் கொண்டு செயலிலும் காட்டத் துணிந்தனர் மாணவ மணிகள் சிலர்! அந்த நிகழ்ச்சி தான் என்ன?

மகளிர் விடுதியைச் சுற்றிச் சுவரெழுப்பி விட்டார் இத்துணை வேந்தர்—ஒன்று பலகலைக கழக விடுதி யினின்றும் இரவு நேரங்களில் அனுமதியின்றி வெளி யேறக் கூடாது என்று கட்டுப்பாடு செய்தார்—இரண்டு.

இந்த இரண்டு மாபெரும் குற்றங்களே மாணவர் சிலரைக் கொதிப்படையச் செய்யக் காரணமாயின; உள்ளத்திலே புகையாயிருந்து, நிறுவியர் நாள் விழாவிலே

தீயாகப் பரவிற்று. மாணவர் ஊர்வலம் தொடங்கினர்; மகளிரையும் தம்மோடு சேர அழைத்தனர். அதனைத் தடுக்க விரைந்து சென்றார் துணை வேந்தர். பின்னர் தான் கலகம் முற்றியிருக்கிறது. மாணவர்கள் தங்கள் நிலையை மறந்தனர். கோலெடுத்த கையினராய் உரு மாறினர். அவர் மீது கற்கள் விழுந்தன. அவர் சட்டையைப் பிடித்து இழுத்தனர். மேயர் தலையிட்டும் மாணவர்கள் அமைதி பெறவில்லை. இப்படிப் பன்னிரண்டு மணி நேரம் சிறைக்காவல் நிலையில் விருந்து மண்டபத்தில் துணை வேந்தர் மாணவர் புடைசூழவைக்கப்பட்டார்; தாம் அதை விட்டு நகரமுடியாதபடி தடுக்கப்பட்டார். எப்படியோ அவரை அவர்தம் மாளிகையிற் சேர்த்தனர் சில மாணவர்கள்; பின்னரும் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஓயவில்லை; சவுக்குக் கட்டைகளுடன் அவர் மாளிகை நோக்கி வந்தனர். அவரைப்போல் கொடும்பாவி செய்து கொளுத்தினர். இதுதான் அண்ணாமலை நகரில் நடந்த வெறியாட்டத்தின் வரலாறு!

எந்த நல்லறிவாளரும் இதனை மாணவர் போராட்டமென்றோ, அமைதியான அறப்போரென்றோ கூற ஒப்பார். கோரிக்கைகளின் அடிப்படையைப்பார்த்தாலும் மாணவர்கள் இக்கோரிக்கைகளை எழுப்பியதே தவறென்போம். 'அப்படி இல்லை, எங்கள் விண்ணப்பம் நேர்மையானது' என்று வாதிட்டாலும், அவர்கள் விண்ணப்பத்தை, எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ளக் கையாண்ட வழி நீதி தவறியது, எவருள்ளத்தையும் கசப்படையச் செய்வதென்போம். எங்கும் கோரிக்கை இருக்கும்; குறை இருக்கும். அண்ணாமலைப் பல்கலைக் கழகம் இவ்விதிக்குவிலக்கல்ல என்பதையும் நாமறிவோம். ஆனால் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ள எத்தனையோ வழிகள் உண்டு. அமைதியான முறையில் துணை வேந்தரைக் கண்டு தம் விருப்பத்தை வெளியிட்டிருக்கலாம்; அவர் மாறாத நிலை காட்டியிருந்தால், பல்கலைக் கழக சிண்டிகேட்டுக்கு விண்ணப்பம் செய்திருக்கலாம் அப்போதும் முயற்சி பலிக்கவில்லையானால் கல்வியமைச்சரைக் கண்டு பேசியிருக்கலாம். இத்தனை சடங்கும் முடிந்து, தங்கட்குச் சார்பாக நிலைமை மாறாவிட்டாலன்றோ, 'புரட்சி' நெறியை மேற்கொண்டிருக்க வேண்டும்! ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் நேர்மையாளர்களாக இருந்தாலன்றோ, இத்தகைய நெறிமுறை தேவை! அவர்கள் தாம் 'ஆர்ப்பாட்டமொன்றே எம் குறிக்கோள்' என்று புறப்பட்டவர்களாயிற்றே! எனவே தான் ஏதோ நெடுநாள் மனக்குறை, உட்காய்ச்சல் இந்

நிகழ்ச்சிகட்கு அடிப்படை என்று நாம் கருதவேண்டி யிருக்கிறது; மாணவர்களுக்கு எக்குறையும் இல்லை; குறையிருப்பினும் அதை நீக்கவேண்டுமென்ற ஆசை துளியும் இல்லை, அன்று ஆர்ப்பாட்டம் செய்தவர்கட்கு என்பதுதான் உண்மை! அவர்கள் தங்கள் தனிப்பட்ட மனக்குறையை, வெறுப்புணர்ச்சியை, குரோதத்தை, 'மாணவர் கோரிக்கை' என்ற திரையிட்டுத் துணை வேந்தரைப் பழிவாங்கும் முறையில் நடித்துக் காட்டினர். அவ்வளவு தான். விளக்கம் வேறு வேண்டியதில்லை

இந்த வெறியாட்டத்திற்குக் காரணமானவர்கள் இன்னும் தங்கள் 'முயற்சி'களை நிறுத்தவில்லை போலும்! கல்வியமைச்சரைக் காண்பதும், 'துணை வேந்தரை நீக்குக' என்று விண்ணப்பிப்பதும், 'அண்ணாமலை மாணவர்களின் போராட்டத்திற்கு ஆதரவளியுங்கள்' என்று வேண்டுகோள் விடுப்பதுமான பணிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். கல்வியமைச்சர் இவர்களின் உண்மை 'சொரூபத்தை' உணர்ந்துகொண்டு கண்டிப்பான முறையில் நடந்திருப்பது பாராட்டப்பட வேண்டிய தொன்றாகும்; இப்பேயாட்டத்திற்கு மாணவர்களில் மிகச் சிலரே காரணமென்றும் பெரும்பான்மையோர் அப்பழுக்கற்றவர்கள் என்றும் அறிய மகிழ்கிறோம். இப்பெரும்பான்மையோர், பல்கலைக் கழகத்தில் தாங்கள் சேர்ந்திருப்பதன் நோக்கம், அங்கு தங்கியிருக்குங்கால், மேற்கொள்ள வேண்டிய ஒழுங்கு முறை, கட்டுப்பாடுகட்கு, இயைந்து நடப்பது ஆகியவற்றை நன்குணர்ந்திருப்பது குறித்துப் பெருமையடைகிறோம். நிலைமையைச் சரிவரப் புரிந்து கொண்டு, செயத்தக்க செய்து, ஒழுங்கை நிலைநாட்ட அரும்பணி மேற்கொண்டுள்ள துணை வேந்தரைப் பாராட்டுகிறோம். மாணவர் உலகம், இந்த ஒரு நிகழ்ச்சியைப் படிப்பினையாகக் கொண்டு, தங்கள் பொறுப்புணர்ச்சியையும் கடமையுணர்வையும் வளர்த்துக் கொள்ளவேண்டுமென்று கூற விரும்புகிறோம். தமிழ்ப் பணியைத் தலைமேற்கொண்டு செயலாற்றும் அண்ணாமலைப் பல்கலைக் கழகம், வெறியாட்டங்களுக்கும், அர்த்தமற்ற ஆர்ப்பாட்டங்களுக்கும் இனிமேலும் நிலைக்களன் ஆகக்கூடாது என்ற உறுதி மேற்கொண்டே, மாணவர் தம் நடத்தையில் உயர்வு காணும் வகையில் நடந்து கொண்டு, நாட்டு மக்களின் பார்வையில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தையும் உயர்த்திக் காட்டவேண்டியது அவர் தம நீங்காக் கடமையென்று எடுத்துக் காட்ட விரும்புகிறோம்.

காலமும் கருத்தும்

நல்ல தீர்ப்பு

"திராவிட நாடு" வார இதழ் ரூ 3000 ஜாமீன் கட்ட வேண்டுமென்று சென்னை அரசினர் கட்டளையிட்டனர். அவ்வாறே அத்தொகையைச் செலுத்திவிட்டு, அறிஞர் அண்ணாத்துரை உயர்நீதி மன்றத்தில் நீதிகோரி வழக்குத் தொடுத்தார். நீதிபதிகள் வழக்கை ஆய்ந்து, அரசினர் கட்டளை நீதிக்குப் புறம்பானதென்று தீர்ப்பு வழங்கியுள்ளனர். மூவாயிரம் ஜாமீன் கட்ட வேண்டுமென்ற அரசினர் கட்டளையை ரத்துச் செய்து தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. திராவிட இயக்கத்தின் மேல் சாட்டப்படும் ஒரே குற்றச் சாட்டு "வகுப்புத் துவேஷம்" உண்டாக்குகிறார்கள் என்பதுதான். திராவிட இயக்கத்தின் நோக்கம் வகுப்புத் துவேஷம் தான் என்று அரசினராலும், மாற்றுக் கட்சியினராலும் தம்பட்டமடிக்கப் படுகிறது. திராவிட இயக்கத் தாள்கள், புத்தகங்கள் மீது நடவடிக்கை எடுக்கும் போதெல்லாம் காட்டப்படும் ஒரே குற்றச்சாட்டு இவ்வகுப்புத் துவேஷந்தான். இக் குற்றச் சாட்டு ஆதாரமற்றது என்பதைத்தான் "திராவிட நாடு" வழக்குத் தீர்ப்பு நாட்டு மக்கட்கு நன்கு விளக்குகிறது; 'நாம் வகுப்புத் துவேஷிகளல்ல! வகுப்பு நீதி வேண்டுவோர்' என்பதைத் தெளிவாக அரசினரும் மற்றையோரும் உணரும் வண்ணம் எடுத்துரைக்கிறது. இந் நல்ல தீர்ப்பு அரசினரின் போக்கை மாற்றி உள்ளதை உள்ளபடி காணும் பண்பை அவர்களிடம் வளர்க்குமென்றும் நம்புகிறோம்.

எழுத்துரிமை பறிமுதல்


'விடுதலை' பெற்றுத் தந்த நல்லவர்கள் ஆட்சியில் தான் நாம் வாழ்கிறோமா என்று ஐயுறும் நிலை பல சமயங்களில் உண்டாகி விடுகிறது. எழுத்துரிமையைத் தடுக்கும் முயற்சியில் நம் அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் நமக்கு அத்தகைய ஐயப்பாட்டையே உண்டாக்குகின்றன. 'தனிப்பட்டவர் சுதந்தரம் பெரிது' என்று அமெரிக்காவில் முழக்கமிட்டுக் கொண்டிருக்கும் நேரு ஆட்சியில்தான் இந்த அலங்கோலங்கள் நடைபெறுகின்றன. பத்திரிகைக்கு ஜாமீன் கோரிக்கை, புத்தகங்களுக்குத் தடை, பறிமுதல்—இந்த நடவடிக்கைகள் வரவர வளர்ந்துகொண்டே

இருக்கின்றன. "ஆரியமாயை" எழுதியதற்காக அறிஞர் அண்ணாத்துரை மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது; தோழர் ஆசைத்தம்பி மீதும் இத்தகைய நடவடிக்கை எடுக்கப் பட்டிருப்பதாக அறிகிறோம். "அழியட்டுமே திராவிடம்" எழுதிய தோழரை அரசாங்கம் அவர் மறைந்த பின்னும் விடவில்லை; 'அவரில்லையா? வெளியிட்டோரைப் பிடி; அச்சிட்டோர் யார்?' என்று நடவடிக்கைகள் ஒன்றன் பின் ஒன்றாக மேற்கொளளப் படுகின்றன. "உடுமலை பீரங்கி" என்னும் இதழில் "கிறிஸ்துவ மத ஊழல்கள்" எனற கட்டுரை வந்ததற்காக, ஆசிரியர், கட்டுரை யெழுதிய தோழர் விசுவநாதம், அச்சிட்டோர் ஆகியோர் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகச் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. அடக்குமுறை இன்னும் என்னென்ன கோர உருவம் எடுக்குமோ நாமறியோம்! ஆனால் ஒன்று மட்டும் உறுதி. எழுத்துரிமையைப் பறிகொடுப்பவர்கள் எந்த நாட்டிலும் செல்வாக்கிழந்ததில்லை; எழுத்துரிமையைப் பறிமுதல் செய்தவர் தாம் செல்லாக்காசாகி இருக்கின்றனர். இந்த உண்மையை அரசினர் உணர்வார்களாக.

(காங்கிரஸ் தலைவரின்)

நேர்மை

சென்னை நகரப் பிரச்னை பெரும் தலைவலியாயிருக்கிறது. மிகச்சிறு பிரச்னையைப் பூதக்கண்ணாடி வைத்துக் காட்டிப் பெரிதாக்கி விட்டார்கள் ஆந்திரர்கள். மூவர் கமிட்டி சென்னை ஆந்திரருக்குக் கிடைக்காது எனறு திட்ட



வட்டமாகத் தெரிவித்து விட்டது; மேலும் சென்னை, பம்பாய் போன்று தனி மாகாணமாக அமைய வேண்டியதில்லை; தமிழ் மாகாணத்தில்தான் சேரவேண்டுமென்றும் தெளிவாகக் குறிப்பிட்டு விட்டது. இதற்குப் பின்னும் ஆந்திரர் கிளர்ச்சி ஓய்ந்தபாடில்லை. இந்நிலையில் 'புதுக்குழப்பம்' விளைத்திருக்கிறார் காங்கிரஸ் தலைவர் டாக்டர் பட்டாபி சீதாராமையா. சென்னை நகர்க் கோரிக்கையை ஆந்திரர்கள் கைவிட வேண்டுமென்பதில் தமிழர் பக்கமிருந்த அவர், சென்னையும் செங்கற்பட்டு மாவட்டத்தில் சில கிராமங்களும் தனிமாகாணமாக அமைக்கப்படவேண்டுமென்று திடீரென்று தெரிவித்துச் சென்னையைத் தனிமாகாணமாக்கி விடவேண்டுமென்ற விஷயத்தில் ஆந்திரர் பக்கம் இருக்கிறார். இத்தகைய கருத்தை அவர் முன்பு சொன்னதுமில்லை; மேலும் இக்கருத்துக்கு நேர்மாறான கருத்தை வேறு வற்புறுத்தி வந்திருக்கிறார். என்ன காரணமோ தெரியவில்லை. திடீரென்று 'பல்டி 'அடித்துக் குட்டையைக்குழப்புகிறார் இதன் மூலம் ஆந்திரரின் நல்லெண்ணத்தையும் பெறமுடியாததோடு தமிழரின் நல்லெண்ணத்தையும் இழந்தவராகிறார். மேலும் முன்னுக்குப் பின் முரணாகப் பேசும் பண்பு காங்கிரஸ் தலைவருக்கு இயற்கை போலும் என்று எண்ணவும் இடம் தந்து விட்டார். ஆனால் தமிழர் இந்தச் சலசலப்புக்கெல்லாம் அஞ்சியவர்களல்ல; சென்னை தமிழகத்தின் பகுதியாவது உறுதி! ●

திருமணம்

புதுக்கோட்டைத் தோழர் கணேசன் – செல்லம்மாள் திருமணம் 3—11—49 வியாழக்கிழமை காலை 10-மணி அளவில் செந்தமிழ்ப் பதிப்பகம் திரு அரு. பெரியண்ணன் அவர்கள் தலைமையில் சீர்திருத்த முறையில் நிகழ்ந்தது. அவ்வமயம் தோழர்கள் சி. பி. சிற்றரசு, முருகு சுப்பிரமணியன், க. ஞானமுத்து ஆகியோர் சீர்திருத்தத் திருமணத்தின் சிறப்புகளைக் குறித்துச் சொற்பொழிவாற்றினர். தலைவர் முடிவுரைக்குப்பின் மணமகன் நன்றி கூற மணவிழா இனிது முடிந்தது.

★ ★ ★

பொதுக் கூட்டம்

திராவிட முன்னேற்றக் கழகம் புதுக்கோட்டை நகரக் கிளையின் சார்பில் முதல் பொதுக் கூட்டம் 3—11—49 மாலை 6-30மணிக்குத் திலகர் மைதானத்தில் 'பொன்னி' ஆசிரியர் தோழர் முருகு சுப்பிரமணியன் தலைமையில் தொடங்கியது. தோழர்கள் டி. கே. சீனிவாசன், சி. பி. சிற்றரசு ஆகிய இருவரும் முன்னேற்றக்கழக லட்சியங்களைவிளக்கிச் சொற்பொழிவாற்றினர். தலைவர் முடிவுரைக்குப் பின் கூட்டம் இரவு 9-மணிக்கு முடிந்தது.



''காங்கிரஸ் பிரசாரகர்களே, விழித்தெழுங்கள் தூங்கியது போதும்! உங்கள் அறிவாற்றல்கட்கு ஓய்வு கொடுத்திருந்தது, சரி. இனி உழைப்பு உங்களை அழைக்கிறது, வருக'' என்ற அழைப்புக் கேட்டுத் திரும்பினேன். நண்பன் இளங்கோ ''வணக்கம், தோழரே'' என்று என் முன் நின்றான்.

''என்ன, காங்கிரஸில் சேர்ந்துவிட்டாயா? சரி, சரி, உன் நடவடிக்கைகளைக் கவனிக்கும் போதே அப்படித்தான் தெரிகிறது''

''ஆமப்பா, ஆம். காங்கிரஸில் சேராமல் வேறு என்ன செய்யவாம்? அருமையான சந்தர்ப்பம். இச் சமயம் தவறினுல் மறு சமயம் வாய்ப்பதரிது. நான் சேர்ந்தது மட்டுமல்ல,உன்னையும் சேரச் சொல்லிச் சிபாரிசு செய்கிறேன், உன் நன்மையில் நான் நாட்டங்கொண்டிருக்கும் காரணத்தால்''

''இளங்கோ, விளங்கச் சொல்லேன். காங்கிரஸில் சேர்ந்தால் ஐந்து ஏக்கர் நிலம் தருவதாகக் கூறியிருக்கிருர்களா? அது கூடக் கிடைக்காதே இப்போது! தோழர் காமராஜர் தியாகிகளிடம் பேசும் போது ''நீங்கள் நிலம் கேட்பதை விட்டுவிடவேண்டும்''என்றுபேசியிருக்கிருரே. பிறகு என்னதான் காரணம், நீ சேர்வதற்கு?''

''உலகம் தெரியாதவன் நீ. தாலுகாவுக்கு இரண்டு பேர் வீதம் சென்னை மாகாணத்தில் 442 பிரசாரகர்கள் நியமனம் செய்யப் போகிருர்களாம்''

''எதைப் பிரசாரம் செய்ய?''

''மதுவிலக்குக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்ய''

''நல்ல வேடிக்கைதான்! ஆளவந்தார்கட்கு எத்தனை அக்கரை! ஒன்றல்ல இரண்டல்ல நானூற்று நாற்பத்திரண்டு நபர்கள் மீது அவர்கள் 'கிருபா கடாட்சம்' விழுந்திருக்கிறதே! எதிர்பார்க்காத செய்திதான்!''

''ஆம். அந்தப் பிரசாரகர்களைப் பொறுக்கி எடுக்கப்போகிருர்களாம். ஒரு கமிட்டி ஏற்படுத்தியிருக்கிருர்கள். ஆகவேதான் உடனே காங்கிரஸில் சேர வேண்டுமென்று நான் கூறுகிறேன்''

''சேர்ந்துவிட்டால் நம்மைப் பிரசாரகர்களாக எடுத்துக்கொண்டு விடுவார்களாக்கும்! எத்தனையோ ஆண்டுகளாகக் காங்கிரஸிலிருப்பவர்கட்குத்தான் அந்தச் சந்தர்ப்பமெல்லாம் கிடைக்கும். நீயும் நானும் ஆசைப்பட்டு என்னுவது? பேசாமல் உன் வேலையைப்பார்''

''அட, பைத்தியமே! விஷயமே தெரியவில்லை உனக்கு. காங்கிரஸில் பத்து ஆண்டு பதினைந்து ஆண்டு மட்டும் இருந்து விட்டால் என்ன? பேசத் தெரிய வேண்டுமப்பா, பேசத் தெரிய வேண்டும். நாம் காங்கிரஸில் சேரும் போது 'புதிய நபர்கள்' என்றாலும் நம்மைப் போல் சண்டமாருதப் பிரசாரம் செய்ய யாரால் முடியும்? அதனுல்தான் நமக்கு முதற் சீட்டு விழுமென்கிறேன்''

"இளங்கோ, விளையாட்டுப் போதும்!---அதோ, வழுதி வருகிருன். அவனைக் கேட்போம்"

"தோழரே, வணக்கம். ஏது சுற்றுப் பிரயாணம் பலமாக இருக்கிறதே!" வழுதி கேட்டான் என்னிடம்.

"ஏது கேலியா, செய்கிருய்? திரும்பத்திரும்ப இந்த ஊருக்குள் சுற்றுவதைத் தவிர உனக்கும் எனக்கும் வேறு சுற்றுப் பிரயாணம் ஏது?" என்றேன் நான்.

"உன் சுற்றுப் பிரயாணத்தைக் கேட்கவில்லை. மந்திரிகள் சுற்றுப் பிரயாணம் செய்கிருர்களே, அதைப் பற்றிச் சொல்கிறேன்" என்று விளக்கவுரைத்தான் வழுதி.

"அதுமட்டுமல்ல, வழுதி. மந்திரிகள் சுற்றுப் பிரயாணம் செய்கிருர்கள்; காமராஜர் சுற்றுப்பிரயாணம் செய்கிருர்; இன்னும் கொஞ்ச நாளில் 442 பிரசாரகர்களும் சுற்றுப் பிரயாணம் செய்வார்கள்" என்று இளங்கோ வழுதியின் கேள்விக்கு மெருகிட்டான்,

"தேர்தல் வரப்போகிறதல்லவா? அதுதான் இத்தனை சுறுசுறுப்புக்கும் காரணம். மந்திரிகளும் காமராஜர்களும் செய்யும் பிரசாரம் போதவில்லை. ஆகவேதான் 'மதுவிலக்கு' என்ற பேரால் 442 பேரைத் தங்கள் கட்சிப் பிரசாரகர்களாக நாட்டில் உலவவிடத் தீர்மானித்து விட்டார்கள்" என்றேன் நான்.

"சரி, சரி. சும்மா ஆடுமா சோழியன் குடுமி? தெரிந்து விட்டது. 18 000 பள்ளிக்கூடத்தை மூடப்போகிருர்களாம், பணமில்லையென்று. 442 பிரசாரகர்கள் போடமட்டும் பணமிருக்குமாக்கும்!" என்ருன் வழுதி.

"அவர்கள் சொந்தக்காரியமென்ருல் எல்லாம் இருக்குமப்பா, இருக்கும்" என்றேன் நான்.

"சரி, அதிருக்கட்டும். 'ஊமைப் பெண் பேசினள்' என்று ஒரு செய்தி வந்ததே பார்த்தாயா?" என்று இளங்கோ புது விஷயமொன்றைக் கிளப்பினன்,

"பார்க்காமலிருக்க முடியுமோ? யாரும் பார்க்கும்படியாக அவ்வளவு பெரிதுபடுத்தியல்லவா அதைப் போடுகிருர்கள்!" என்று ஆமோதித்தேன் நான்.

"அப்படியா, செய்தி! ஊமைகட்கு இனி யோகம்தான்! ஊமையர்களாய் இருப்போர் அங்கு சென்ருல் தீர்ந்தது அவர்கள் 'பிறவிப் பிணி' சர்க்கார் குற்ருலம் பராசக்தி அம்மன் கோவிலை 'ஊமையரைக் குணப்படுத்தும் புண்ணிய ஸ்தலமாக' விளம்பரப்படுத்திஞல் போகிறது" என்று எங்களோடு சேர்ந்து பேசினன் வழுதி.

"பொறு, பொறு, செய்வார்கள். மக்களிடையே பரவியுள்ள மூடநம்பிக்கை சிறிதும் குறையாமல் பார்த்துக்கொள்வதே தங்கள் வேலையென்று கருதுவோர் இதுவும் செய்வார்கள், இன்னமும் செய்வார்கள்" என்ருன் இளங்கோ.

"இந்துப் பேப்பரில் இந்த அதிசயம் பற்றிக் குறிப்பிட்டு ஒரு கடிதம் வந்தது, பார்த்தாயா?" என்று கேட்டேன் நான்,

"பார்த்தேன். அந்தக் கடிதத்தை எழுதியவர் ஒரு வக்கீல். படித்துப் பட்டம் பெற்றவர். 'புதுக்கோட்டை அதிசயம்' என்று எழுதியிருக்கிருர் என்ருல் பார்த்துக்கொள்ளேன்" என்று இளங்கோ மேலும் தொடர்ந்தான்.

வழுதி ஆவலோடு கேட்டுக்கொண்டிருந்தவன் "புதுக்கோட்டையி லும் ஊமைப் பெண் பேசினளா? என்ன" என்று இடையில் ஒரு கேள்வியை வீசினன்.

"ஊமைப் பெண் பேசுவது மட்டும்தானா அதிசயம்! புதுக்கோட் டைக்குப் பக்கத்தில் பேரையூர் என்ற ஊரில் கோவில் ஒன்றிருக்கிறது"


"அந்தக் கோவிலில் குளமொன்றிருக்கிறது" என்று வேடிக்கையாக நீட்டினன் வழுதி.

"அந்தக் குளத்தில் நாதஸ்வர சத்தம் கேட்கிறதாம்; சமஸ்கிருத மந் திரங்கள் ஓதுவதும் கேட்கிறதாம். ஒவ்வொரு மாசி மாதமும் இந்த அற்புதம் நடக்கிறதாம்" என்று இளங்கோ சொல்லி முடித்தான்.

"இந்த அற்புதத்தைச் சொல்லுவதோடு விட்டாரா, அவர்? அந்தப் பேரையூருக்கும் புதுக்கோட்டைக்குமுள்ள பாட்டை பழுதுபட்டிருக்கிற தாம். அதைச் செப்பனிட்டுத் தருமாறு அரசினருக்கு வேண்டுகோளும் விடுக்கிறார்" என்று நான் கூறி முடிப்பதற்குள் வழுதி "என்ன அக்கறை! என்ன அக்கறை!" என்று கெக்கலித்தான்.

"மக்கள் மூட நம்பிக்கையினின்றும் விடுபட்டு வருகிறார்கள்; அறிவு லகம் அவர்களை வேறு பாட்டைக்குத் திருப்பி வருகிறது. இச்சமயம் பார்த்து, வக்கீல்கள், மறுபடியும், மூடத்தனத்திற்கும், ஆகாத அதிசயங் கட்கும் செலுத்தும பாட்டையைச்செப்பனிட்டு,மக்கள்மறந்துவிட்ட அதிச யங்களை நினைப்பூட்டி, அப்பாட்டை வழியே அழைத்துச் செல்லப் பார்க் கிறார்கள்" என்று இளங்கோ விரிவுரை செய்தான்.

"முயற்சி செய்வார்கள்; ஆனல் தோல்விதான் காண்பார்கள். உல கம் திருந்தி வருகிறது" என்று முடிவுரை கூறினேன் நான். "வணக்கம்" என்று கூறி விடை பெற்றனர், வழுதியும் இளங்கோவும்.



இப் பொருள் குறித்துத் தொடர்ந்து கட்டுரைகள் வரும் ....

உலகப் போர் இனி உண்டா?

பதினெட்டாம் நூற்றாண்டின் போர்களெல்லாம் நாட்டுப் போர்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டின் போர்களெல்லாம் ஐரோப்பியப் போர்கள். ஆனால் இருபதாம் நூற்றாண்டு தொடங்கியதும் போர்கள் உலகப்போர் அளவாக வளர்ந்து விட்டன. இவ்வளர்ச்சி உலகத்திற்கு நன்மையா, தீமையா? அதன் விளைவு யாது?

உலகில் எப்போதுமே போரை வெறுப்பவரும் உண்டு விரும்புபவரும் உண்டு. போரால் நலமடைபவருமுண்டு, அல்லல் படுபவரும் உண்டு, ஆனால் இருபதாம் நூற்றாண்டுப் போர்களைக் கண்டு பல வகையில் மனித நாகரிகப் போக்கில் பலருக்கு ஐயம் ஏற்பட்டுள்ளது. அதன் பயனாகப் பலர் — பல அறிஞர் — போர் எதிர்ப்பாளராகவும், புதிய அன்பு நெறியாளராகவும் திகழ்கின்றார்கள். இவர்கள் குறிக்கோள் உயர்ந்தது.

அவர்கள்கோட்பாட்டை, அவர்கள் முயற்சியை யாரும் எதிர்க்க விரும்பமாட்டார்கள்.

ஆனால் அரசியல் அறிஞருள் மற்றொருசாரார் போர் இயற்கையானது என்ற பழய கோட்பாட்டை விடாமலே இருக்கின்றனர். உலக இலக்கியங்களில் போரின் வீரம் புகழப்பட்டது. போருக்குப் பின் வாங்குவது கோழைமை எனப் பட்டது. அன்பு வாழ்விலும் காதல் வாழ்விலும் ஆழ்ந்த பெண்மையுலகம் கூட ஆண்களின் போர்வீரம், பெண்டிரின் மன உரம் ஆகியவற்றைப் போற்றியது.

போர் எதிர்ப்புக்கு இன்று புத்துயிர் ஏற்பட்டிருப்பது போலவே போர் ஆதரவுக்கும் புது வலிவு ஏற்படாமலில்லை. போரால் வர்த்தகர், சிறப்பாகப் பெருவாரி வர்த்தகரும், போர்த்தளவாட வர்த்தகக் குழுவினரும் பெருத்த ஆதாயம் அடைகின்றனர். புது வர்த்தகக்களம்தேடும்தொழில் வளமிக்க நாட்டினரும் நாடு பிடிக்கும் ஏகாதிபத்தியநாடுகளும் உள்ளூறப் போரைத் தம் ஆதரிக்கும்வாய்ப்பாகஎதிர் பார்க்காமலிருக்க முடியாது.

போரால் உள்நாட்டில் ஒற்றுமை வளரும். தேசியத் தொழில் உற்பத்தி பெருகும் என்று எண்ணுபவரும் இல்லாமல் இல்லை.

இத்தகைய சூழ்நிலையில் கால் நூற்றாண்டுக்கு ஒரு பெரும் போரும் இடையே அதற்கான தூற்றல்கள் போன்ற சிறு போர்களும் மிகுவதில் வியப்பு இல்லை.

இன்று 'போர் வேண்டாம்; அது மனித நாகரிகத்தை அழித்துவிடும். உலகம் ஒன்றுபட வேண்டும். போரையே ஒழிக்கத்திட்டமிட வேண்டும்' என்று எங்கும்பேசப்படுகிறது. அறிஞரும் பேசுகின்றனர். அரசியலாரும் பேசுகின்றனர். ஏகாதிபத்தியங்களும் கூட ஏகாதிபத்திய உடுப்பைத் தங்கள் இராஜதந்திரமாகிய நாற்காலியில் மாட்டிவிட்டுப் பேசுகின்றன. இத்தனை பேச்சுக்களிலும் பத்திலொன்று உண்மை இருக்குமானால்கூட, போர் ஏற்பட வழியிராது. ஏனென்றால் இங்ஙனம் பேசுபவர் கையிலேயே அரசியல், தொழில், பிரசார ஆதிக்கம் யாவும் உள்ளன.

ஆனால் இவ்வளவையும் மீறி இரண்டு போர் நிகழ்ந்துவிட்டன. மூன்றாவது நிகழும் என்றே யாவரும் அஞ்சுகின்றனர். இது ஏன்?

முதலில் வல்லரசுகள் ஒன்றையொன்று நம்புவதில்லை. ரஷ்யாவில் அணுக்குண்டின் மர்மம் ஆராயப்பட்டுவிட்டதாமே என அமெரிக்காவுக்கு அச்சம். அமெரிக்க டாலர் எங்கும் பரவி உலக வாணிகத்தைக் கைப்பற்றுகிறதாமே என்று ரஷ்யாவுக்கு அச்சம்! மற்ற வல்லரசுகளோ யாருடன் சேர்ந்து தம் இழந்த வலிமையை மீண்டும்பெறலாம் என்று எண்ணமிடுகின்றன. சிறு நாடுகளோ எவர் பாதுகாப்பால் பிழைத்து வாழலாம் என்று எண்ணமிட்டு வருகின்றன.

இச்சூழ்நிலைகளில் போர் வராது என்று கூறுவது வீண் பகற்கனவு. இக்காலத்தில் போரின் இடைக் காலத்தில் காணும் அமைதிகூடத் தொழிலாளர் முன்பகல், பின்பகல் உழைப்பிடையே வரும் சிற்றுண்டிக்கால இடைப்பொழுதைப் போலத்தான். உழைப்புக்கு உரம் தரும் உணவை அவ்வோய்வு நேரங்களில் அவர்கள் உண்பதுபோல போர்க்காலத்திற்கு முன்னேற்பாடான காரியங்களையே யாவரும் — எல்லா நாடுகளும் அமைதிக் காலத்தில் செய்கின்றனர்.

உலகில் அரசியல், ஆட்சி ஆகியவையே போரின் அடிப்படையில் ஏற்பட்டவைதான். மனிதன் மனிதரையடக்கி மன்னனானான். என்றும் போரிட முடியாது என்று கண்ட மக்கள் வெற்றிபெற்ற 'வலியோன்' ஆதரவில் ஒன்றுபட்டனர். 'நாடு'கள் இங்ஙனம் ஏற்பட்டன. தனி மனிதர் கதை நாட்டுக்கும் ஏற்பட்டது. நாடுகள் போரிட்டு வலிமையுடைய நாடு பேரரசாயிற்று. இம்முறை உலகப் பேரரசு ஒன்றிலேயே முடியக்கூடும். அலெக்ஸாண்டர் காலமுதல் உலகப் பேரரசுக்கனாக்கண்ட

அறிஞர் அப்பாத்துரை

வர் பலர். இன்று போர் எதிர்ப்புக்கோட்டையில்கூடப் பலர் விரும்புவதும் 'உலக அரசு'தான்.

பேரரசுப் போட்டிக்கிடையே உலகில் புதிய போட்டிக்கருவிகள் தோன்றின. வாணிக, தொழில் ஆதிக்கம்போர்வெற்றியைவிட நிலையான ஆதிக்கம் தந்தன. போருக்கு வலுவும் தந்தன. எனவே தொழில் போட்டி, வாணிகப்போட்டி எழுந்தன. தொழில் வாணிகப்போட்டி எழுந்தன. தொழில் வாணிகப்போட்டிக்கான புதுப் போர்கள் எழுந்தன. தொழில் வாணிக மூதலாளிகளின் இருப்பிடமான ஐரோப்பா உலக ஆட்சியைக் கைப்பற்றவே, அவர்களிடையேயுள்ள பொருளியல் போட்டியால் ஐரோப்பியப் போர்கள் நிகழ்ந்தன.

ஜப்பான் இப் போட்டியில் கலந்ததும் போட்டி உலகப் போட்டியாய் வளர்ந்தது.

ரஷ்யாவின் சமதர்மக் கோட்பாடு இப்போட்டியை மற்றொரு மூலாதாரமான சக்தி கொண்டு எதிர்க்கத் தொடங்கி வருகிறது. இதன்பயனாக உலகப் போர் மற்றொரு மாறுபாடு அடைந்து வருகிறது. உலகம் ஒரு உலகமாகவேண்டும் என்று எண்ணுவதனாலேயே உலகப் போர் தோன்றுகிறது. அதற்கிடையே அவ் உலகம் முதலாளிகள் உலகமா,சமதர்மிகள் உலகமா என்ற ஒரு புதுக் கடா எழுந்துள்ளது.

உள்நாட்டுப் போர்களின் முடிவு தேசஒற்றுமை. நாட்டுப் போர்களின் முடிவு பேரரசு. உலகப் போர்களின் முடிவு ஒருலகம் அமைவது. வருங் காலப் போரோ உலகம் முதலாளித்துவ உலகமா சமதர்ம உலகமா என்பதற்காக.

இன்று மக்கள் சமூகத்திடையிலும் சமத்துவமும் இல்லை, சரிசம சந்தர்ப்பம் இல்லை, நேர்மையான சமநிதிகூட இல்லை. அதுபோலவே நாடுகளிடையேயும் சமத்துவமோ, சரிசமசந்தர்ப்பமோ சரிசம நிதியோ இல்லை. மேடுபள்ளமான இடத்தில் நீர் ஓடித்திருவது உறுதியாதல் போல, இச் சமத்துவங்களில்லாதபோது போர் விலக்க முடியாதது. ஆனால் நீர் ஓடித் திரிந்தபின் சரிசமமட்டம் அடைவது உறுதி. அதுபோல போர்கள் ஓய்ந்த நிலையில் சரிசமநீதியும் அதனையடுத்துச் சரிசம வாய்ப்பும் அதனைத் தொடர்ந்து சமதர்மநிலையும் ஏற்படுவது உறுதி.

போரில்லாமலே இந்நிலையை உண்டுபண்ண உதவுபவர், உதவும இயக்கங்கள், உதவும் நாடுகள் மட்டுமே உண்மையில் போரை ஒழிக்க உண்மையாய்ப் பாடுபவையாகும். ஆயினும் அவற்றை எதிர்க்கும் சக்திகள் இருக்கும் வரை அவர்களாலும் போரை ஒழிக்க முடியாது.

போரொழிக்கும் முயற்சியை விட நம் நாடு போரிலீடுபடாமலிருக்குமபடி செய்யும் முயற்சியும் போரால் தீங்குறாமலும் நன்மைபெறும்படியும்வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யும் முயற்சியுமே இப்போது வேண்டப்படுவதாகும்.

மிக வலுக்குறைந்த நாடுகளுக்கோ போரில் ஈடுபடாமல் 'தன்தேசியம்'வளர்த்து அதன் புறப்பகை, உட்பகை களை தலைதலையான செயல் ஆகும். ●

ராமலிங்கம் கையில் ஏதோ ஒரு புத்தகத்தை வைத்துப் படித்துக் கொண்டிருந்தான். பார்வை எழுத்துக்களின் மேல் அழுந்தாமல் மேலோட்டமாக விழுந்து புரண்டு கொண்டிருந்தது. கவனம் முழுவதும் அடுக்களையின பக்கமாக ஒன்றிநிற்கும் போது டடிப்பில் மனம செல்லுமா?

கல,கலவென்று குலுங்கும் கைவளையல்களின் ஒலி; பளீர் பளீரென்று தெறித்துவிழும் பேச்சுக்கள், இடையிடையே கெக்கலிக்கும் சிரிப்பு .... வெண்கலப்பாணையில் கூழாங்கற்களைக் கொட்டிக் குலுககுவது மாதிரி, எல்லாம் சேர்ந்து இனிமையான நாதமெழுப்பிக் கொண்டிருந்தான்!

ஊரிலிருந்து வந்திருந்தாள் அவனுடைய மைத்துனி. அந்தப் பெண்ணின் கோலாகலம் தான் ராமலிங்கத்தைப் பிடித்து உலுப்பிக் கொண்டிருந்தது.

"தேவி......" என்று கூப்பிட்டான.

"என்ன அத்தான்?"—தேவி உள்ளே இருந்தபடியே கேட்டாள்.

"இங்கே கொஞ்சம் வாயேன்"

தேவி வெளியே ஓடி வந்தாள். ராமலிங்கம் அவளைப் பார்த்ததும் 'குபீ' லென்று சிரித்து விட்டான்.

பிறகென்ன? நாகதாளியின் வாடையே வீசாத இடத்தில், மனோரஞ்சிதப்பூவின் மெல்லிய இதழ்களின் மணத்தை அனுபவித்துக்கொண்டே மகுடியின் நாத வெள்ளத்தில் மூழ்கிப் பிரக்ஞை மருண்டநிலையில் கிடந்தது ○ ○ ○

மனப் பாம்பு

இளமைப்பித்தன்

"ஏன் சிரிக்கிறீர்கள்? உங்களுக்குப் பைத்தியமா?" என்று கேட்டாள் தேவி.

"கண்ணாடியை எடுத்து உன் முகத்தை முதலில் பார்த்துக் கொள். பிறகு தெரியும், யார் பைத்தியமென்று...போ..."

"என் முகத்திற்கு என்னவாம்?"

"ஒன்றும்குறைச்சல் இல்லை. ஆனால்...கன்னத்தில் மாத்திரம கரிக்கோடுதான் விழுந்திருக்கிறது" என்றான்.

தேவி கிணற்றடிக்குப் போகும்பொழுது கண்ணாடியில் தன் முகத்தைஒருமுறைபார்த்துக் கொண்டாள். உண்மைதான். கரிக்கோடு சூடுபோட்டவடுமாதிரி இடது கன்னத்தில் ஊறி இருந்தது.

முகத்தை அலம்பிக்கொண்டு வந்து, "இப்போது போய் விட்டதா? அத்தான்?" என்று கேட்டாள் சிரித்துக்கொண்டே.

"கண்ணாடியிருக்கும் பொழுது முகத்தை அதில் பார்த்துக் கொண்டால் என்ன? இது ஒரு கேள்வியா?" என்று குரலில் வெதுவெதுப்புத் தட்டக் கேட்டுக் கொண்டே அடுக்களையிலிருந்து வெளியே வந்தாள் அவனுடைய மனைவி கமலம்.

"ஏன், என்னிடம் கேட்டால் அதில் என்ன தப்பு?"

ராமலிங்கம் கொஞ்சம் மிடுக்காகவே திருப்பிக் கேட்டான் கமலத்தினிடம் நெருங்கி. அவள் ஒன்றுமே பதில் சொல்லாமல் முகத்தைத் தோளில் இடித்துக்கொண்டு திரும்பவும் உள்ளே போய் விட்டாள்.

தேவிக்கு ஒன்றுமே புரியவில்லை. கொஞ்ச நேரத்திற்குள் அங்கு நடந்த நாடகத்தின புதிரை அவளுக்கு எடுத்துச் சொல்லி விளங்க வைக்க அவர்களால் முடியுமா?

"திடீரென்று அக்கா ஏன் கோபித்துக்கொண்டாள? நீங்கள் ஏதாவது சொன்னீர்களா? அத்தான்?"

தேவியின் கபடமற்ற கேள்விக்கு ராமலிங்கத்தால் கபடமில்லாத பதிலைச் சொல்ல முடியாது. மேலுக்குச் சிரித்துக் கொண்டே "அவள் குணமே அப்படித்தான் நீ போய்ச் சீக்கிரமாகச் சமையலைச் செய், தேவி" என்று சொல்லிவிட்டு மீண்டும் புத்தகத்தில் மனதைச் செலுததினான்.

●

ராமலிங்கத்திற்குத் திருமணமாகி ஆறுமாதங்கள் ஓடிவிட்டன. அப்பொழுதெல்லாம் அதாவது முப்பது நாட்கள் வரையில், கமலம் அவனுக்கு என்னென்னவோ கற்பனைகளையெல்லாம் தூண்டிவிடும் அழகுச் சிலையாக இருந்தாள்.

வெள்ளத்தின் வேகம் தணியத் தணிய விரக்தி, நூலைப் போல வாய் வார்த்தைகளில் கூடப் பின்னிக் கொண்டு வந்தது. 'மோகம் முப்பதுநாள், ஆசை அறுபது நாள்' என்று சொல்லுவார்கள் அல்லவா? அது அவன் மட்டில் பலிக்கவில்லை. 'ஆசையும், மோகமும்' ஒரே மாதத்திற்குள்ளாகவே அடங்கிப் போய்விட்டன. மிஞ்சியது வீண் மனத் தாங்கல்கள் தாம்; இருவரிடையிலும் புகை போல் மூண்டு கொண்டிருந்தன.

ராமலிங்கத்தின் போக்குக்கு, கமலத்தால் எந்த விதத்திலும் ஈடு கொடுக்க முடியவில்லை. எப்பொழுது பார்த்தாலும் அவளுக்கு வயிற்றில் ஓர் வலி நிரந்தரமாக இருந்து கொண்டே வந்தது.

'இந்தத தொட்டாற் சிணுங்கியைக் கட்டிக் கொண்டு நான் என்ன சுகத்தைக் கண்டேன்?' என்று மனம் புழுங்கித் தவிப்பதைத் தவிர அவனுக்கும் வேறு வழியில்லை. அவனுடைய மனப்பாம்பு படம் விரித்தாடும் நேரத்திலெல்லாம், கமலத்தின் வயிற்றுவலி 'நாகதாளி' வேர் மாதிரி குறுக்கே வந்து நிற்கும். அதற்காகப் பாம்பின் விஷம் குறைந்தா போய்விடும்? நச்சுப் பல் பிடுங்கி எறியப்படும் வரையில் அதன் சக்திக்குக் குறைவு ஏது?

டாக்டரிடம் அவளை அழைத்துக் கொண்டு போய்க் காண்பித்ததில் "கடினமான வேலைகள் ஒன்றும் செய்யவிடக் கூடாது. மீறினல் உயிருக்கே ஆபத்து ஏற்பட்டுவிடும்"

என்று சொல்லிவிட்டார். என்ன செய்வான் அவன்?

கொஞ்ச நாட்களுக்குக் கமலத்திற்கு ஓய்வு கொடுக்க விரும்பி, ஊருக்குக் கடிதம் எழுதிப் போட்டான். அவனுடைய மைத்துனன், தேவியைக் கூட்டிக் கொண்டு வந்து வீட்டில் விட்டுவிட்டுப் போனான்.

தேவி மணமாகாத பெண்! இது தான் கமலத்திற்குப் பெரிய வேதனையாக இருந்தது. அவள் பிறத்தியார் வீட்டுப் பெண்ணும் அல்ல; தன்னுடன் கூடப் பிறந்த சகோதரி. ஒரே தாயின் வயிற்றில், ஒரே இரத்தத்தின் உணவைக் கொண்டு வளர்ந்து வெளியே வந்தவர்கள். அப்படியிருக்க 'வேதனை' எங்கேயிருந்து முளைத்தது!

சிறிது நேரங்கூடத் தேவியை ராமலிங்கத்தினிடம் போய்ப் பேசுவதற்கு விடமாட்டாள்

எப்போது பார்த்தாலும், 'வெடுக்வெடுக்' கென்று எரிந்து விழுவாள் அவள் மேல்.

தனியாக இருக்கும் பொழுதோ, கொஞ்சலும் குலாவலும் எல்லை கடந்து நிற்கும்

ராமலிங்கமோ இவர்களுக் கிடையில்கிடந்து புழுப்போலத் துடித்துக் கொண்டிருந்தான். ஒரு புறம் நோய் கொண்ட மனைவி. மறுபுறம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் அழகுப் பெண் தேவி. ஒன்றிலிருந்து மகுடியின் நாதம் பொங்கிப் பொழிகிறது. அதைக் கேட்கக்கேட்க 'மனப் பாம்பிற்கு' ஒருவித இன்ப மயக்கம் புரை ஏறிப் படம்விரிக்கிறது. உடனே 'நாகதாளி'யின 'நெடி' படர்ந்து எடுத்தாடிய 'படம்' 'தொப்' பென்று கீழே விழுந்து போய்விடுகிறது!

சேச்சே! எவ்வளவு மோசமான வாழ்க்கை! இன்பத்திற்கு இழைத்த தீங்குதான் என்ன? எதற்காக இப்படிப் பழி வாங்க வேண்டும்?

●

"இன்றைக்கு ஞாயிற்றுக் கிழமை எங்களைச் சினிமாவிற்கு அழைத்துக் கொண்டு போனால் என்ன?"

புத்தகத்தை மூடி எறிந்துவிட்டுத் திரும்பிப் பார்த்தான் ராமலிங்கம். கமலமும், அவளுக்குப் பின்னால் தேவியும் நின்று கொண்டிருந்தார்கள்.

"உடம்பு சரியில்லாதது சினிமாவுக்குப்போகக்கூடாது" என்றான் அமைதியாக; அவனுடைய வார்த்தைகளைக் கேட்டதும் தேவியின் முகம் 'சட்' டென்று மாறிவிட்டது" கமலம் மாத்திரம் இதழ்க் கடையில் ஒரு புன்சிரிப்பைத் தவழ விட்டாள்.

சிறிது நேரத்திற்கு முன்னால் ஏற்பட்ட கோபத்திற்கு அது மாற்று மருந்தோ என்னவோ! கமலம் அவன் பக்கத்தில் வந்து அமர்ந்தாள். தேவி, கதவில் முழங்கையை ஊன்றி முகத்தைத் தாங்கிய வண்ணம் நின்று கொண்டிருந்தாள். முன்பு அவர்களிடையில் நிலவிய கோபம் எங்கே பறந்து சென்றதென்பதை உலகமறியாத சிறு பெண்ணால் ஊகித்து அறிந்து கொள்ளுவது கஷ்டம் தான்.

"ஒரு நாளைக்குப் பார்ப்பதால் ஒன்றும் குடிமுழுகிப் போய் விடாது. சொல்லுங்கள், போகலாமா?"

கமலம் அவன் தோளைப் பிடித்துக் குலுக்கியபடி கேட்டாள்.

"உம்...போகலாம்!" என்று சொல்லிவிட்டுத் தேவியைக் கடைக் கண்ணால் பார்த்தான். சுருங்கிய முகம் மெல்ல மெல்ல விரிந்து கொண்டிருந்தது.

அன்று ஏதோ புதுப்படம். திரளான கூட்டம். 'டிக்கட்' கிடைக்காமல் பலர் திரும்பிப் போய்க் கொண்டிருந்தார்கள்.

ராமலிங்கம் எவ்வளவோ முயன்றும் டிக்கட் கிடைக்காது திண்டாடிக் கொண்டிருந்தான். நேரமாக, ஆகக் கமலத்திற்கும் தேவிக்கும் ஏமாற்றமே அதிகரித்து வந்தது. கடைசியில் வெறுங்கையுடன் திரும்பி வந்த ராமலிங்கம் "சரி, திரும்பிப் போகவேண்டியது தான் வீட்டுக்கு" என்றான். மூவரும் அங்கிருந்து புறப்பட்டார்கள்.

"இரண்டாவது ஆட்டத்திற்காவது..." என்று இழுத்தாள் கமலம்.

"நிச்சயம் டிக்கட்கிடைக்கும்" என்று முடித்தாள் தேவி. இரு பெண்களும் ஒன்று கூடிய பிறகு அவனால் என்ன செய்ய முடியும்?

அவர்களை இரண்டாம் காட்சிக்கு அழைத்துக் கொண்டு போய்ச் சேர்ந்தான். மிக மிக மட்டமான படம். கேவலமான உணர்ச்சிகளை வெகு எளிதில் தூண்டிவிடும் அளவுக்கு அதில் காதல் காட்சிகள் நிரமபியிருந்தன!

ஆட்டம் முடிந்து வீடுவந்து சேர்ந்தார்கள். வழியில் கேட்ட 'விமரிசனங்கள்' காது கொடுத்துக் கேட்க முடியாதவை! வேதனையை விலை கொடுத்து வாங்கிக் கட்டிக் கொண்டவர்கள் மனதாரத் திட்டிக் கொண்டே போனார்கள்.

ராமலிங்கம், வீட்டிற்கு வந்து வெகு நேரம் வரையிலும் தூங்

முதற் செய்தி!

"வழக்கம்போல் 'பொங்கல் மலர்' உண்டா?" என்று ஒரு நண்பர் கேட்டிருக்கிறார். "பொங்கல் உண்டல்லவா? பொன்னி பொங்கல் மலரும் உண்டு. எதிர்பார்ப்பதற்கிணங்க, முன் இரண்டு மலர்களையும் விடச் சிறப்பான முறையில் வெளியிட ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன" என்று அறிவிக்க விரும்புகிறோம்.

'பொன்னி' பொங்கல் மலர் — 1950
பற்றிய முதற் செய்தி இது!

காமல் கமலத்துடன் பேசிக் கொண்டே இருந்தான். தேவி கூடத்தில் படுத்து நன்ருகத் தூங்கிக் கொண்டிருந்தாள். அவனுடைய மனப்பாம்பு நெளிய ஆரம்பித்தது. அது தேவியின் படுக்கையைச் சுற்றி வளைய, வளைய வலம் வந்தது. பிறகு, அவள் இளமை தவழும் வனப்புள்ள உடலின் மேல் தன் முகத்தை வைத்துக் கொண்டது. உடல் மாத்திரம் கமலத்தின் பிடிப்பில் துவண்டு கிடந்தது.

கமலம் என்றுமில்லாதபடி அவனை அணைத்துக் கொண்டிருந்தாள். இது நெடுநாளைய பசியா அல்லது படம் பார்த்ததனுல் வந்த கோளாரு என்று அவனுக்கே விளங்கவில்லை.

"கமலம்! உடம்பைப் பத்திரமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும். பிறகு துன்பப்படுவது நீதானே" என்ருன் ராமலிங்கம். அவன் சொல்லிமுடிப்பதற்கும், வயிற்றில் அவளுக்கு வலி கிளம்புவதற்கும் சரியாக இருந்தது!

"ஐயோ...அப்பா..."

"என்ன கமலா?"

"வயிற்றில் வலி வந்து விட்டது!"

"சொன்னுல் கேட்கிருயா? இரண்டாம் ஆட்டத்திற்குப் போய் வீணுகக் கண் விழித்து விட்டு......"

டாக்டர் கொடுத்த மருந்தை எடுத்து அவளுக்குக் கொடுத்துப் படுக்கையின்மேல் கிடத்தி விட்டு வெகு நேரம் வரையில் அவள் பக்கத்திலேயே உட்கார்ந்திருந்தான். கமலம் வலி தெரியாமல் கொஞ்சம் கொஞ்சமாகத் தூங்க ஆரம்பித்தாள்.

விளக்கை அணைத்துவிட்டுப் படுக்கப் போனுன். மனதிற்குள் ஓர் இனிய நாதம் கேட்டது. திரும்பவும் 'மனப்பாம்பு' ஆட ஆரம்பித்து விட்டது. இருட்டோடு இருட்டாய் ஒன்றி, யோசித்தான்.

யோசித்து யோசித்து என்ன பலன்? கால்கள் கூடத்தை நோக்கி நடந்தன. அதற்கு முன்பாகவே அவளிடம் ஊர்ந்து போய்விட்டது அந்தப் பாழும் 'மனப்பாம்பு'

பிறகென்ன? நாகதாளியின் வாடையே வீசாத இடத்தில் மனோரஞ்சிதப் பூவின் மெல்லிய இதழ்களின் மணத்தை அனுபவித்துக் கொண்டே, மகுடியின் நாத வெள்ளத்தில் மூழ்கிப் பிரக்ஞை மருண்ட நிலையில் கிடந்தது.

●

மூன்று மாதங்களுக்குப் பிறகு ஒரு "சுபயோக சுபதினத்தன்று" தேவியின் திருமணம் நடந்தேறியது. தன் மைத்துனியின் கையை எவனே ஒருவன் பிடித்துக் கொண்டு மணப் பந்தலில் நிற்பதை ராமலிங்கம் உற்றுப் பார்த்தான்.

அவனுடைய காலில் விழுந்து 'தேவி' வணங்கினுள் அவளுடைய விழிகள் கண்ணீரில் நீந்திப் புரண்டு கொண்டிருந்தன.

"கற்பின் எதிரே, கதிரோனும் நடுங்குவனே" என்ற பாட்டு ஒலிபெருக்கியில் முழங்கிக் கொண்டிருந்தது.

கதிரோன் நடுங்குவது ஒரு புறம் இருக்கட்டும்; ராமலிங்கம் என்னவோ தன் மைத்துனியை ஆசிர்வதிக்க நடுநடுங்கித் தான் போனுன்.

வணக்கம்!

○

'பொன்னி' 72-பக்கங்களுடன் வருகிறது என்று சென்ற இதழில் அறிவித்திருந்தோம்; அதனை வரவேற்று ஏராளமான கடிதங்கள் வந்துள்ளன. மகிழ்ச்சியடைகிறோம்.

அவ்வாறே 72-பக்கங்களில் இந்த இதழ் வெளிவந்துள்ளது. மொத்தம் ஐந்து சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன.

அறிஞர் அப்பாத்துரையார் "உலகப்போர் இனி உண்டா?" என்ற விவாதக் கட்டுரையைத் தொடங்கி வைத்துள்ளார்,

சிறுவர் அரங்கம் "சீர்திருத்தச் சிங்கத்"தை அறிமுகப்படுத்துகிறது. சிறுவர் சிறுமியர் இனி அத்தானின் கதை விருந்தைத் தொடர்ந்து பெறலாம்.

'சுவைமிக்க கவிதைகள் இல்லையே!' என்ற குறை இந்த இதழிலிருந்து நீங்கிவிடும். தோழர் மு. அண்ணாமலை, சி, திருநாவுக்கரசு ஆகியோரின் கவிதைகள் சுவை நிறைந்தன.

வழிப்போக்கன் இத்தடவை 'மதுரை எம்பயர் தியேட்டருக்கு' வாசகர்களை அழைத்துச் செல்கிறார்.

தில்லை வில்லாளன் துரோகி, விசு. திருநாவுக்கரசு தீட்டும் சிலப்பதிகாரக்காட்சிகள், வளரும் இலக்கியம், பொதுமேடை, செய்திப்பாட்டு, வம்புமடம் வழக்கமாய் இடம்பெறும் பகுதிகளாகும்.

கலையுலகம் இனி ஒவ்வொரு இதழிலும் வெளிவரும்.

அடுத்த இதழிலிருந்து நம் இயக்கப் பேச்சாளர்களின் ஒவ்வொரு சொற்பொழிவு வெளியிட எண்ணியுள்ளோம். மற்றும் அவ்வப்போது அன்பர்களின் விருப்பத்தை அறிந்து மாறுதல் செய்யக் கருதுகிறோம். 'பொன்னி'யிடத்து மாறா அன்பு பூண்டு அதுவளர உதவும் அனைவருக்கும் எம் நன்றி.

ஆசிரியர்

கலையுலகம்

அபூர்வ சகோதரர்கள்

“கார்ஸிகன் சகோதரர்கள்” என்னும்பிரபல ஆங்கிலப் படத்தைத் தழுவி எடுக்கப் பட்டதாகும் இந்த அபூர்வ சகோதரர்கள்! இப்படததை மிகவும் நல்ல முறையில் தயாரிக்க மிகவும் பிரயாசைபபட்டிருக்கின்றார் எஸ். எஸ். வாசன்! அதுவும் பதினாலாயிரம் அடிக்குளளாக மக்களுக்குப் பிடிக்கும் வகையில் ஆரம்பத்திலிருந்து கடைசிவரையில் கதையின விறுவிறுபபுக் குன்றாமல் படததைத் தயாரிதது வெற்றியும பெற்றிருக்கிறார். மேனாட்டுப் படங்களுக்கு ஈடாகத் தமிழ்பபடங்களையும் தயாரிக்கவேணடுமென்னும் வாசனின் முயற்சி பாராட்டக்கூடியதாயிருபபினும், அப்படங்களை அப்படியே காப்பி அடிப்பதை யாருமே வரவேற்கமாட்டார்கள்! இம்மாதிரிக் காப்பி அடிக்கும் பழக்கம் நம் தமிழ்ப்பட உலகில் முன்னேறிக்கொண்டே போகிறது!

ஆறுபேர்கொண்ட ஜெமினி கதை இலாகாவால் படத்தின வசனம் எழுதப்பட்டிருக்கிறது. இத்தனை பேர்கள் சேர்ந்து அலசி அலசிப் படத்திற்கான வசனத்தை எழுதியிருந்தும், அவ்வளவாகச் சோபிக்காதது வருந்தத் தக்கது! சில இடங்களில் அம்மாமித் தமிழையும் புகுத்தியிருக்கிறார்கள்! படத்திற்குவேண்டிய பாடல்களை இருவர் சேர்ந்து இயற்றியிருக்கின்றார்கள். ஒன்றாவது மக்களின் மனதைக் கவருவதாயில்லை.

எடுத்ததற்கெல்லாம் நடனமாகக்காட்டிப் படம் பார்ப்பவர்களின் பொறுமையைச்சோதித்திருக்கின்றார்கள்! இம்மாதிரி அளவுக்கு மீறி நடனக் காட்சிகளைப் புகுத்துவதால் மக்களுக்கு வெறுப்புத் தோன்றிவிடுகின்றதென்பதை இனியாவது படத் தயாரிப்பாளர்கள் உணர்வார்களாக.

ராதா, நாகேந்திரராவ், பானுமதி ஆகிய மூவரின் நடிப்புத்தான் தலைதூக்கி நிற்கின்றது.

ராதா, தான் இழந்தபெயரை மீண்டும் அடைந்திருக்கின்றார் இப் படத்தின் மூலம்! விஜயன், விக்ரமன் ஆகிய இரு வேடங்களில், சாமர்த்தியத்துடனும், உணர்ச்சியுடனும் நடித்து நல்லபெயரெடுக்கின்றார். தீயோன் மார்த்தாண்டனாக நடிக்கும் நாகேந்திராவின் அனாயாசமான நடிப்பு ரசிகர்களினமனத்தை ஒருங்கே கவர்ந்துவிடுகிறது! இப் பாகத்தைவேறெவரும் இவ்வளவு திறமையாக நடித்து ரசிகர்களின பாராட்டுதலைப் பெற முடியாது! காஞ்சனாவாக வரும பானுமதியின நடிப்பு நாளுக்குநாள் மெருகேறிக் கொண்டே வருகிறது! இவரின் அலாதிக் குணம் தான் ஏற்கும் பாத்திரத்தோடு ஒன்றி நடிப்பதேயாகும்! தன்

மனத்தில் தோன்றும் எண்ணங்களை வெகு லாவகமாக முக பாவத்திலேயே காட்டி விடுகின்றார். இவர் வேலைக்காரியாக மாறி வீட்டைவிட்டு வெளியேறும் கட்டம் ரசிக்கப் படவேண்டிய தொன்றாகும். டாக்டராகவரும் ஜி. பட்டுவின் நடிப்பு கடைசிவரையில் அப்பழுக்குக் கூறமுடியாத வகையில் இருக்கின்றது.

காட்சி அமைப்புக்கள் அவ்வளவு ஒன்றும் பிரமாதமில்லை. ஒலிப்பதிவு சில இடங்களில் என்னவோபோல் இருக்கின்றது! காமிராக்காரர் மிகவும் கஷ்டப்பட்டு உழைத்திருக்கிறார்! ராதா இரட்டையர்களாக நடிக்கும் காட்சிகளிலெல்லாம், மிகவும் அதிசயிக்கத்தக்க முறையில் படமெடுத்திருக்கின்றார்! படத்தில் ஆங்காங்கு சில சில்லறைக் குறைகள் இல்லாமற் போகவில்லை. இரட்டைக் குழந்தைகளுடன் டாக்டா சுரங்கக் கதவைத் திறந்துகொண்டு வெளியேறினதும், அக்கதவு மூடப்பட்டதாகக் காட்டப்படவே யில்லை.

காட்டில் வாழ்ந்த விக்கிரமன் மருதையின்மூலம் வாட்சண்டை கற்றுக்கொள்ளுகிறான்! ஆனால் நகரத்தில் வசித்த விஜயன் யாருடனும் வாட்சண்டை பழகியதாகத் தெரியவில்லை. இருபபினும் திடீரென்று மார்த்தாண்டனின் காரியதரிசி ஜம்புவுடன் வாட்சண்டை போடும்போது, இவர் யாரிடமப்பா இந்த வாட்சண்டையைக் கற்றுக் கொண்டார் என்று கேட்கத் தோன்றுகிறது!

வைரவியாபாரி (விஜயன்) மார்த்தாண்டனிடம், வைர மாலையை விலைபேசுமிடத்தில் கையாளப்படும் உரையாடல்களும், வியாபாரியின் நடிப்பும் மிகையாகக் காணப்படுகின்றன! என்னதான் காஞ்சனா தெரிந்தவளாக இருந்தாலும், அவள் கழுத்தில் விஜயன் வைரமாலையைக் கட்டுவது கொஞ்சமும் பொருத்தமில்லை! மாலையைக் காஞ்சனாவிடமே கொடுத்துக் கட்டிக்கொள்ளச் சொல்லியிருக்கலாம்.


படத்தின் முடிவில் விக்கிரமன் மார்த்தாண்டனிடம குத்துப்பட்டு வீழ்ந்தபோது விஜயனையும் அவ்வுணர்ச்சி தாக்கியதாகக் காட்டியிருக்க வேணடும், விஜயன் சவுக்கடிபட்டபோது விக்கிரமனை அவ்வுணர்ச்சி தாக்கியதைப் போல! கதையின் முடிவு மக்களின் சிந்தனைக்கே இடந்தராதவகையில் முடிவுறுகின்றது! விக்ரமனின் சமாதியைக் காட்டுவதுடன் படத்தை முடித்திருக்காமல், பத்துப்பேர்களைக் கொண்டு தெருக்கூத்துப்போன்றதொரு நடனத்தைக் காட்டியிருப்பது தேவையற்றது.

"உணர்ச்சி மிக்கதையுடன் கூடிய உன்னத சித்திரம்" என்று பிரமாதமாக விளம்பரப் படுத்தி காப்பி அடித்த படத்தைக்காட்டி மக்களை ஏமாற்றுவதைவிட, சமூகத்திற்கும், நாட்டு மக்களுக்குமநலன் தரத்தக்க நல்லதொரு சமூகப் படத்தைக் காட்டி மக்களின் நன்மதிப்பைப் பெற்றிருக்கலாம் ஜெமினி என்பதே என் எண்ணம்.

—சி. கே. இராதாகிருஷ்ணன்

குழந்தை உள்ளம்

தே. நாராயணன்



குக்கிராமமான மங்களபுரி இவ்வளவு தூரம் பிரசித்தமடைந்ததற்குக் காலஞ்சென்ற ஜெமீன்தார் பைரவமூர்த்தி ராஜாதான் காரணம். அவருக்கு நிறைய ஜனக்கட்டு உண்டு. எனவே, அத்தனை பேரும் அடைந்து கிடக்கும்படி மங்களபுரியில் 'சுகுணவிலாஸ்' மாளிகையைக் கட்டிவைத்தார். அவர் என்னவோ தன் வாழ்நாள் முழுவதும் வாசஞ் செய்தது பட்டணத்திலேதான். மாதத்தில் இரண்டு மூன்று தடவைகள் தன் பரிவாரங்களுடன் வருவார். இந்த இரண்டு மூன்று தடவைகளுக்காகத் தன் செல்வாக்கால் மங்களபுரியைச் சிறு ரயில்வே ஸ்டேஷனாக்கினார். அவரது கோரக் கொலைக்குப் பின், மங்களபுரி சோபையிழந்தது. அவருக்குப் பின், அவரது நினைவு என்றென்றும் நிலைத்து நிற்கும்படி 'சுகுண விலாஸ்' மாளிகையும், அந்த ரயில்வே ஸ்டேஷனுந்தான் இருந்தன. ஆனால் சுகுண விலாஸ் இருப்பதும் இல்லாதிருப்பதும் ஒன்றுதான். ஜெமீன்தாரின் ஆவி 'சுகுண விலாஸ்' மாளிகையில் அலைவதாகக் கூறி உறவினர்கள் இடத்தைக் காலிசெய்துவிட்டு இரண்டு வருடமாகப் பூட்டியே போட்டிருந்தனர்.

அன்று மங்களபுரியில் ஒரே மப்பும்மந்தாரமுமாக இருந்தது. காலையில்பிடித்துத் தூற்றல் மாலை 4-மணி வரையிலும் பிசுபிசுத்துக்கொண்டிருந்தது. ஆனால் பட்டணத்திலிருந்து வந்திறங்கியவர்கள்மட்டும் தங்கள்வேலையில் கண்ணுங்கருத்துமாயிருந்தனர். பெட்டி, படுக்கைகளைத் தூக்கிக்கொண்டு மங்களபுரியின் கரடுமுரடான பாதை வழியே சென்ற அவர்களை, கிராம மக்கள் வேடிக்கையாகப் பார்த்தனர். இரண்டு வருடத்திற்குப் பின் 'சுகுண விலாஸ்' கதவு இன்றுதான் திறக்கப்பட்டு, சுத்தம் செய்யப்பட்டிருந்தது. நிறையச் சாமான்களுடன் ஒரு லாரியும், 'வாக்ஸால்' வண்டியும் விலாஸின் எதிரே நின்றன. பட்டணத்திலிருந்து வந்தவர்களெல்லாம் 'சுகுண விலாஸி'ல் நுழைந்தனர்.

இதையெல்லாம் எதிர் வீட்டிலிருந்து பார்த்துக்கொண்டி

ருந்த ரங்கனுதனுக்கு எதுவுமே விளங்கவில்லை. விலாஸிலோ ஆவி நடமாட்டம்; ஆகவே எவரும் குடி வரமாட்டார்கள். இவர்களெல்லாம் ஜெமீன்தாரின் உறவினருமில்லை. அப்படியானுல், இவர்கள் யார்?... இப்படி ஊகம் பண்ணிக்கொண்டிருந்த ரங்கனுதனுக்கு, ரயில் வரும் நேரம் நினைவுக்கு வரவே, சைக்கிளை எடுத்துக்கொண்டு கிளம்பினுன்.

ஜெமீன்தார் பைரவமூர்த்தி ராஜாவின் நினைவாக இருக்கும் மங்களபுரி ரயில்வே ஸ்டேசன், இதுவரையிலும் ஆறு ஸ்டேஷன் மாஸ்டர்களைப் பார்த்துவிட்டாலும், ஏழாவதாக வந்திருக்கும் ரங்கனுதன் மற்றவர்களை விட வயதில் இளையவன். படித்துவிட்டு உடனே ரயில்வேயில் புகுந்தான். இப்போது 24-வயதில் அவனெரு ஸ்டேஷன் மாஸ்டர்! மங்களபுரியில் உத்தியோகம் பார்த்துக் குடும்பம் நடத்துவதென்பது, ஸ்டேஷன்மாஸ்டர் ரங்கனுதன், அவன் மனைவி மீனு, அவர்களது செல்வமான இரண்டரை வயது கூட நிரம்பாத ஆனந்தி — இந்த மூன்று உயிர்கள் தான்! மற்றவர்களெல்லாம் வயலையும் வரப்பையும் நம்பி வாழ்பவர்கள். ரங்கனுதனுக்கு இந்தக் கிராமத்தில் பொழுது போக்குவது கடினமாயிருந்தாலும், மனைவி மீனுவும், படுசுட்டியான ஆனந்தியும் அதை நிறை செய்தனர். சகலமும் துறந்த துறவி, இரு பசுமாடுகளுடன வாழ்க்கை நடத்துவதுபோல, ரங்கனுதன் இந்தக் கிராமத்தில் காலத்தைக் கழித்தான். அதாவது உத்தியோகப் பிடிப்பொரு பக்கம்; கிராமத்துத் தனிவாழ்க்கையின் விரக்தியொரு பக்கம்.

இந்த நிலையில், ரங்கனுதன் ஒரு இயந்திரமாகிவிட்டான். ரயில் வரும் வேளைகளில் ஸ்டேஷனில் காத்துக் காத்துக்கிடப்பது, மீதி நேரத்தில் வீட்டில் ஆனந்தியுடன் கொஞ்சுவது என்பதுதான் அவனது அன்ருட வேலைத் திட்டம், இதில் மாறுதலே ஏற்படாது, இதுவரையிலும் ஏற்பட்டதுமில்லை.

ஆனுல், இன்றுபாராதமுகங்களைப் பார்த்ததும் ரங்கனுதனிடம் தொடர்புணர்ச்சி தலைதூக்கியது. ஸ்டேஷனில் வேலையே ஓடவில்லை. வேலையை வேகமாக முடித்துக்கொண்டு, வீட்டிற்குத் திரும்பி வந்ததும், ஆனந்தியைத் தூக்கிக்கொண்டு சுகுண விலாஸிற்குப் போனுன். பீடியைச் சுண்டி இழுத்துக்கொண்டிருந்த கிருதா மீசைக்காரனெருவன் 'வாக்ஸால்' வண்டியருகே நின்றுகொண்டிருந்தான்.

"ஏனய்யா? நீங்களெல்லாம் எந்த ஊர்?" என்று கேட்டான் ரங்கனுதன்.

"பட்டணமுங்க" என்ருன் டிரைவர்.

"பட்டணமா? ஏது இந்தப் பக்கம் இவ்வளவு பேரும் வந்திருக்கிறீர்கள்?"

"நாங்க சினிமாக்காரங்க. சுந்தரம் ஸ்டுடியோ முதலாளி நாச்சிமுத்து செட்டியாரை நீங்க கேளவிப்பட்டிருப்பீங்களே! அவரது கம்பெனிதான் இது. 'மலைக் கள்ளன்' என்ற ஸ்டண்ட் படம் எடுத்துக்கிட்டிருக்கிருர். அந்தப் படத்துக்காக, நல்ல காட்டிலே கார் கவிழும் சீன் எடுக்கவேண்டி

ருக்கு. இந்தச் சீன் தான் கதைக்குக் கடைசி கட்டம். ரொம்ப முக்கியமான தாம். அதனாலேதான் செலவைப் பார்க்காமே செட்டியார் இவ்வளவு ஆட்களையும் சாமான்களையும் இந்தஊருக்குக்கிளப்பி வந்திருக்கிறார். வேலை முடியக் குறைந்தது பத்துநாளாவது ஆகும்போலிருக்கு. அதனாலே தான இந்த ஜெமீன் தார் வீட்டை வாடகைக்கு அமர்த்தியிருக்கு'' என்று கர்வக்களைப்புடனபேசினான் கிருதா டிரைவர்.

ரங்கநாதன் பேசிக்கொண்டிருக்கும்போதே, அவன் அணைப்பிலிருந்த ஆனந்தி, காரில் கையைவைத்து எதையோ சுரண்டிக் கொண்டிருந்தாள். இதைப் பார்த்த ரங்கநாதன் "அம்மாடியோ! ஊராளூட்டுக் காரடி! இந்த ஐயா அடிப்பாரம்மா'' என்று அதட்டினான்.

"போங்கய்யா! இதென்ன பூவா பிள்ளை தொட்டாக் கசங்கிப் போக. இந்தக்காருக்கு வாழ்வு இன்னும் இரண்டு நாளோ மூன்று நாளோ. இப்படி தொடச்சிவைச்சிருக்கிறது தான் சுக்கு நூறாகப் போகப் போகுதே'' என்றான் டிரைவர்.

"ஏன்?'' என்று ஆவலுடன் கேட்டான் ரங்கநாதன.

"அது தாங்க கார் விபத்துப் படம் பிடிக்கணுமனு சொன்னேனல்ல, அது தான. 'மலைக் கள்ளன்' படத்திலே மலைக் கள்ளனாக வருகிறவன் இந்தக் கார்லே போவான். போலீஸ் வெறட்டும். பெரிய துப்பாக்கிச் சண்டை நடக்கும். கடைசியாக் கார் கவிழ்ந்து விழுந்து, மலைக் கள்ளன் இறந்துபோவான்... இதுதான் கதை. அதுக்குத் தான் இந்தக் காரு'' என்று அலட்சிய மனோபாவத்துடன சொன்னான் டிரைவர். அவனது கிருதாவையும், அவன் சுருள் சுருளாக விட்டுக்கொண்



டிருந்த புகையையும் கண் கொட்டாது பார்த்துக்கொண்டிருந்தாள் ஆனந்தி அவளுக்கு அது ஒரு விளையாட்டாகவிருந்தது. கைகளைவிரித்துக்கொண்டு அவனிடம் தாவினுள். கிருதாக்காரன் நாள் முழுவதும் என்னதான் இயந்திரத்துடன் பழகிக்கொண்டிருந்தாலும், அவனுக்கும் சிறிது உணர்வு இருந்தது. ஆனந்தியை வாங்கிக்கொண்டான். ஆனந்திக்கு ஆனந்தம் தாங்க முடியவில்லை. இதற்கிடையில் ரங்கனுதனும் டிரைவரும் சினிமா உலகத்தைப்பற்றி ஏதேதோ பேசிக்கொண்டிருந்தனர். டிரைவர் கையிலிருந்த ஆனந்தி எதையோ சுட்டிக் காட்டி, 'பாப்பா!' என்று வாய் குளறக் கூப்பிட்டுக்கொண்டே காரின்மீது தாவினுள்.

டிரைவர் விஷயத்தைப் புரிந்துகொண்டான். ஆனந்தியின் உருவம்பட்டுக் காரின் மேற்புறத்தில் அவளது நிழல் விழுந்திருந்தது.

"ஐயா! பொண்ணு மகாக் கெட்டிக்காரி. இங்கேபாருங்க பாப்பாவைக் கண்டுபிடிச்சிருக்கு" என்று சிரிப்புடன் டிரைவர் சொன்னதும், அதில் ரங்கனுதனும் பங்கெடுத்துக் கொண்டான். ஆனந்தி அந்த நிழலைத் தன் சிறுகைகளால் எட்டிபபிடிக்க முயன்றுகொண்டிருந்தாள். டிரைவரால் அவளைக் கட்டுப்படுத்த முடியவில்லை ரங்கனுதன் அவளை வாங்கிக்கொண்டு, "கண்ணு! அது பாப்பால்லம்மா! உன் அக்கா" என்றுசொல்லி, டிரைவரிடம் விடைபெற்றுன். ஆனந்தியோ அவனது தோளிலிருந்து தாவித்தாவி விழுந்தாள்.

சினிமாக்காரர்கள் ஊர் வந்து ஒருவாரமாகிவிட்டது. தினம் குறைந்தது ஐந்தாறு தடவைகளாவது ரங்கனுதன் ஆனந்தியுடன் 'சுகுணவிலாஸி'ற்குப் போய் டிரைவருடன் பேசுவான். அது சமயமெல்லாம ஆனந்தி காரில் தென்படும்நிழல் அக்காவைப்பார்த்து, விளையாடுவாள்; சிரிப்பாள்; கொண்டுபோகும் பிஸ்கட்டைச் சாப்பிடக்கொடுப்பாள்; சாப்பிடாதது கண்டு விழுந்து விழுந்து அழுவாள். இதையெல்லாம கவனித்துக் கொண்டிருக்கும் ரங்கனுதனும் டிரைவரும் சிரிப்பார்கள். ஒரு வாரத்திற்குள் ரங்கனுதன் — டிரைவர் உறவுக்குமேல், ஆனந்திக்கும் வாக்ஸால் அக்காவுக்கும அதிகமான உறவு ஏற்பட்டுவிட்டது. ஆனந்தி வீட்டிலிருக்கவே சம்மதிப்பதில்லை, அபபா வரவேணடியதுதான் பாக்கி. உடனே எதிர்வீட்டு வண்டிக்கு தூக்கிப்போகுமாறு அடம் பிடிப்பாள். அப்பா இல்லாத சமயம டிரைவர் மாமா இருக்கவே இருக்கிறுர். எனவே, கணநேரமேனும 'வாக்ஸால்' அககாவின்றி இருக்க முடியாத நிலைக்கு வந்துவிட்டாள் ஆனந்தி.

வாரமொன்ருகியும் இன்னும் படமெடுத்தபாடில்லை. வானம ஒரே கம்மலாக இருந்தது. 'மூட்' (*Mood*) இடங்கொடுக்காததால், படமெடுக்கும் திட்டத்தை ஒரு வாரம் வரை ஒத்திப்போட்டாகிவிட்டது. போட்டநிகழ்ச்சிநிரல்படி படம்பிடிக்கும வேலை முடிய இன்னும் இரண்டுமூன்று நாட்கள் தான் இருக்கின்றன. அதற்குள் கார்விபத்து சீன் படமெடுத்தாக வேண்டும். எந்த விதத்திலாவது எட்டாம் நாளன்ருவது

படமெடுக்க உறுதி கொண்டு விட்டார் முதலாளி செட்டியார். எட்டாவது நாளன்று காலை, காமெரா, நடிகர்கள், வாக்ஸால் வண்டி சகிதம் சினிமாக்காரர்கள் மங்களபுரி காட்டிற்குப் புறப்பட்டார்கள். இதையெல்லாம தன் வீட்டிலிருந்தே பார்த்துக் கொண்டிருந்தாள் ஆனந்தி. தன் நிழல் அக்கா வண்டியுடன் போவது பிடிக்காவிட்டாலும், தன் சிநேகிதரான டிரைவரைநம்பியோ,என்னவோ கண்ணீர் விடாமலிருந்தாள்!

உண்மையிலேயே, சுந்தரம் ஸ்டுடியோக்காரர்களுக்கு மங்களபுரி 'அவுட்டோர்' சீன் இவ்வளவு வெற்றி தந்திருக்குமென்று யாருமே நினைக்கவில்லை. மலைக் கள்ளன் காரிலிருந்து கவிழும் சீன் அவ்வளவு இயற்கையாக அமைந்து விட்டது. அந்தக் காட்சியால் 'வாக்ஸால்' வண்டிக்கு ஏற்பட்ட சேதத்தை தவிர, மற்ற விதத்தில் ஏகப்பட்ட மன மகிழ்ச்சி-செட்டியாருக்கு. ஒருவாறு வந்த வேலையும் முடிந்தது. இன்னும் இரண்டு நாட்கள் கழித்துப் புறப்படலாமென்று செட்டியார் கூறிவிட்டார். பட்டண வாசிகளுக்கு இரண்டு நாட்கள் ஓய்வுகிடைத்தது. ஆனால், 'வாக்ஸால்' வண்டிக்கு இனி என்றுமே ஓய்வுதானே? அப்படியொன்றுமில்லை! 'பாடி' முழுதும் நொறுங்கிப் போயிருந்தது. இஞ்சின் மட்டும் பழுதில்லை. மற்றபடி 'வாக்ஸால்' உருமாறிப் போயிருந்தது. 'மலைக் கள்ள'னுக்குக் கிடைக்கப் போகும் அமோக வெற்றியில் 'வாக்ஸாலு'க்கும் பங்கிருக்கிறதென்று எண்ணியோ என்னவோ, முதலாளி செட்டியார் அதற்குப் பழைய மதிப்பு கொடுத்தே மாளிகையின் முன் எப்போதும் போல நிறுத்தி வைக்க விட்டிருந்தார்.

காலையில் தன் 'வாக்ஸால்' அக்காவை வழியனுப்பிய ஆனந்தி, மாலைவரையில் அவளது வரவுக்காகக் காத்திருந்தாள். அக்காஏறிப்போன வண்டி வந்ததற்கும். அவள் அப்பா வருவதற்கும் நேரம் சரியாயிருந்தது. மாமூல்படி, அப்பாவுடன் எதிர் வீட்டிற்குச் சென்றார்கள். கிருதாக்கார டிரைவர் வேலைமிகுதியால், களைத்துப் போய்க் காரின்முன் உட்கார்ந்திருந்தான். காரின் உருமாறுதல் ரங்கனுதனுக்கு எந்த விதமான திகைப்பையும் தரவில்லை. இந்தக்காரின் நஷ்டம். எவ்வளவோ ஆயிரக் கணக்கான பணத்தை அள்ளித் தரப்போகிறது என்றுதான் அவனுக்குத் தெரியுமே? ஆனால், ஆனந்தி? அவள் அக்காளைத் தேடினாள். மேலும் கீழும் பார்த்தாள். காணவில்லை. தன் பளபளப்பை இழந்த 'வாக்ஸால்' தன் சொட்டை விழுந்த எந்தப் பாகத்திலிருந்தும் ஆனந்தியின் அக்காளைப் பிரதிபலிப்பால் காட்டமுடியவில்லை. ஆனந்தி அதற்காக அயரவில்லை. தன் கொஞ்சு மொழியால் 'அக்கா' என்று பல தடவைகள் கூப்பிட்டாள். டிரைவரும் ரங்கனுதனும் காலையில் படமெடுத்ததைப்பற்றி மெய்மறந்து பேசிக் கொண்டிருந்தனரே தவிர, அக்காளைக் காணுது துடிக்கும் ஆனந்தியின் உள்மனதை அவர்களால் உணர முடியவில்லை. அவர்கள் பேசிமுடிய வெகுநேரம் பிடித்தது. ஆனால், ஆனந்தியோ, அக்காளைக் கார்

முழுதும் தேடினாள். சிறிது மழைத் தூற்றல் விழுந்தது. ஆனந்தியைத் தூக்கிக் கொண்டு ரங்கநாதன் வீட்டிற்குப் புறப்பட்டான். ஆனந்தி கையைநீட்டி, 'அக்கா! அக்கா!' என்று பலங்கொண்டமட்டும் கத்தினாள். விளையாட்டாக, "அக்கா செத்துட்டாடி" என்றான் ரங்கநாதன. இதைக்கேட்டதும், ஆனந்தி அளவுக்கு மீறினாள். தன் அப்பாவைக்கிள்ளினாள்; அடித்தாள். ரங்கநாதனுக்கும் கோபம்வந்துவிட்டது. பலமாக இரண்டு முதுகில் போட்டு, படுக்கையில் கொண்டுபோய்ப் போட்டான். படுத்த ஆனந்தி விம்மி விம்மி அழுதுகொண்டே கண்ணை மூடிவிட்டாள்.

இரவு மணி ஒன்பதிருக்கும். குழந்தை ஆகாரமின்றி படுத்துவிட்டதே என்று மீனா ஆனந்தியைத் தூக்கினாள். உடம்பு அனலாகத் தகித்தது. கை வைக்கமுடியாதபடி கனல் காற்று வீசியது. நல்ல காய்ச்சல். ரங்கநாதனும் விடிந்ததும் குணமாகிவிடுமென்று அசட்டையாக இருந்துவிட்டான். மறுநாள் காய்ச்சல் 106 டிகிரி வரைஏறினதே தவிர, குறையவில்லை. பகலுக்குப்பின் ஜன்னி பிறந்து விட்டது. "அக்கா! அக்கா!" என்று திணறிக்கொண்டே பேத்தினாள். கிருதாக்கார டிரைவரின் கண் திருஷ்டிபட்டு விட்டதென்று, ரங்கநாதன் மீது சிடுசிடுத்தாள் மீனா. ரங்கநாதன் நிலையோ பரிதபமாயிருந்தது. நாளைபகல் வரையில் குழந்தை சமாளித்து விட்டால் அதற்கு மேல் பார்க்கலாம என்று தட்டிக் கழித்தார் வைத்தியர்.

பத்தாவது நாளும் விடிந்துவிட்டது. வந்த காரியமும் முடிந்து விட்டது. ஓய்வும் எடுத்தாய் விட்டது. இனிப் புறப்படவேண்டியது தான். 'வாக்ஸால்' ஓடும் நிலையில் இருந்ததால், அதைப் பட்டணத்தில் கொண்டு வந்து சேர்க்கும் பொறுப்பு கிருதாக்கார டிரைவர் தலையில் விழுந்தது. காலையில் ஆனந்தியைப் பார்த்த பின்பு, இந்த நிலையில் விட்டுப் போக மனமில்லைதான் டிரைவருக்கு. 'கவனமாப் பாருங்க' என்று மட்டுமே அவனால் சொல்லமுடிந்தது.

சுந்தரம் ஸ்டுயோ முதலாளி நாச்சிமுத்து செட்டியார், தன் படத்தின் கடைசிக் கட்டத்தை வெற்றிகரமாகப் படம் பிடித்துக் கொண்டும், எதிர்கால லாபத்தை எண்ணிக் கொண்டும், தன் பரிவாரங்களுடன் பட்டணத்திற்குப் புறப்பட்டார். அவருடன், இனி ஆனந்தி காணமுடியாதபடி அவளது அக்காளை மறைத்து வைத்துக் கொண்ட வாக்ஸாலும் புறப்பட்டது.

ரங்கநாதன் வீட்டில் ஒரே கூக்குரல். உள்ளிருந்து அழுகை பீறிட்டு வந்தது. ஆனந்தி தன் 'வாக்ஸால்' அக்காளைத் தேடிக் கொண்டு புறப்பட்டு விட்டாள். அவளது மீளாப் பிரிவை அறிவிக்க, இளம தமபதிகள போட்ட அழுகுரல், 'வாக்ஸால்' அக்காவுக்கோ, கிருதாக்கார டிரைவருக்கோ கேட்டிருக்குமோ என்னவோ? ஆனால், இந்தப் பரந்த உலகில் அந்தக் குழந்தை உள்ளத் துடிப்பை அறியமுடிந்தவர்கள் ஒருவருமே இல்லையா? ஆனந்திக்குப் பின், இந்த உலகத்தில் பாசம் என்ற பொருளை விலை வீசித்தான் தேடவேண்டுமா?

ஆறுமுகம் அலறினார்!

''அப்பனே! முருகா! என்னைக் கைவிட்டுவிடாதே! உன்னை நம்பித் தான் பதினோராயிரத்தை இதிலே கொட்டியிருக்கேன்! நீதான் காப் பாத்தனும்'' ஆறும்நம்பர் அபினிக் கடை முதலாளி அப்பாத்துரை மனமுருக வேண்டினார் இப்படி, ஆறுமுகனை!

மூன்று கலரில், உரப்பான—ஆனால் உயர்ந்த ''ஆர்ட்''தாளில், ஜெர்மனியில் அச்சான ''ஆறுமுகன்'' அருமை பக்தனின் அலறலைக் கேட்டுக் கொண்டிருந்தான்.

''அப்துல்லா போனவாரம் கொண்டுவந்த சரக்குப் போலாகா தப்பா இது, அது 'அரைதம்' அடிப் 'தறகுள் அதரம் பதறுமே அட்டதிக்கும் ஆடுமே. ஏன்? ரங்கன் அடிச்சு வந்தானே அதுக் கென்னவாம்! 'ரங்கு' இல்லை. ஆனாலும் பஸ்ட் கிளாஸ்''

''இதெல்லாம் என்னப்பா சொகம்! அந்த அருள்சோதிச் சாமி கொடுத்திச்சு பாரு! ஆஹா! அதைப் பத்திச்சொல்றதிண்ணா...'' இப்படி ஒரு மாஜிசாமியார்.

''சிலோன்லெல்லாம் எப்படிண்ணா......'' இப்படி ஆரம்பித்தார் அனுபவசாலி ஒருவர்....

சிறுகிடங்கு. பிய்ந்த ஈச்சம் பாய்களால் ஆனதோர் மறைப்பு. மூலையில் மூன்றடி உயரமுள்ள முக்காலி. வெகு விரைவில் வேலை நிறுத்தம் செய்ய விருக்கும் 'லாந்தர்' விளக்கு. கள்ளிப் பலகைப் பெட்டிமேல் கணக்குப் புத்தக ஏடுகள் சில.

ஜன்னலின் ஓட்டுச் சுவரின் மீது ''மோனத்தவம்'' புரிகிறாரே அவர் தான் அப்பாத்துரை.

அனைத்துக்கும் மேலே—அவன்—யாருமில்லை ''யானை முகத்தோனின் மூத்தோன் ஆறுமுகனின்'' படம்!

பரம்பரையாக அபினி வியாபாரம் அப்பாத்துரைக்கு. இந்த ஆண்டு ஏகப்பட்ட போட்டி. பழம் பெருமையை விட்டுக் கொடுக்காமல் பதினோராயிரம் சொல்லிக் கடை ஏலம் எடுத்தார்.

இருக்காதா அச்சம்?

இலாபம் இல்லை யென்றாலும், ''கையைக்கடிக்காமல்'' இருக்க வேண்டுமே! ஆகவே அவர் அனுதினமும் ஆறுமுகனை வேண்டியதில் அர்த்தம் இருந்தது. ஓரணாச் சரக்கு ஒடுங்கி-ஒதுங்கி விழவைக்கும் ஒருவனை! ஒரு தோலா ஏறினால் ஒருமணி நேரம் ''அசந்து'' இருப்பான் ஒருவன்.

அவன் அத்தனை அனுபவசாலி. இப்படி ரகங்கள் பலப்பல

இவையனைத்தும் ''இலைமகாத்மியம்''

ஆம்! அபின்! அது அளவிலாத ஆட்களை அடிமை கொண்டது!

மனிதனை மர மாக்கி—சத்தற்ற சக்கை யாக்கி—நீங்காத அடிமைக்கு ஆளாக்கி விடும்! பின் அவனை வரவேற்பது சாக்காடு ஒன்றே!

ஆனால்...? அப்பாத்துரை உண்ட அபின்!...

மதமாச்சாரியம்! மகேசுவர மான்மியம் — இவையனைத்தும் ஆறுமுகம் பேரால் நடக்கும் அபின் அதிகாரம் தானே!

ஆறுமுகம் இதை யெண்ணும் போது அலறினார். அண்டையி லிருந்த அம்மை கதறினாள்!



இன்பம் இன்பமே!

இன்பம் இன்பமே!
செழுங்கார்ப் பருவம் முல்லைக் காட்டில்
இன்பம் இன்பமே!

இளமை மான்கள் இன்துணைப் பிணையோ
டழகாய் ஆடும்! அவற்றே டெங்கும்
மறிகளும் உகள, அருவிகள் அதிரும்
முல்லைக் காடு முழுதும் அழகே (இன்பம்

பாம்பினை அனைய பார்ப்பதற் கினிய
கூரிய காந்தள் குவிமொட் டுக்கள்!
முல்லை சிரித்தன! முழங்கின மேகம்!
எல்லை யில்லா எழிலோ வியமே! (இன்பம்

கானம் அரங்கு; வானம் முழங்க
வண்டு யாழாகக் கைஎன வளர்ந்த
காந்தள் தானசைந் தம்மயில் ஆட்டம்
போற்றும் அழகே புதுமை! புதுமை! (இன்பம்

கொன்றை மலர்ந்தன பொன்போன் றழகாய்!
மழையால் செழித்து மாலை போன்றும்
மடலாய் மடவார் குழல்போன் றெங்கும்
காய்த்திடும் கொன்றை காணவும் இன்பம் (இன்பம்

— சி. திருநாவுக்கரசு

வாராய் நெஞ்சே!



பெண்ணொருத்தி உனைமறந்தாள் என்ப தற்கா
பேச்சற்று மூச்சற்றுக் கிடந்தாய் நெஞ்சே!
மண்மீதில் பெண்ணினமே மறைந்த துண்டா!
மடநெஞ்சே எதற்காக மயங்கு கின்றாய்?
ஒண்டொடியின் உடல்மீதும் ஆசை யில்லை.
உயிர்ப்பாசம் உயிர்ப்பாசம் என்கின் றாயே!
கண்சுழலக் கஞ்சாவைத் தின்று விட்டுக்
கவியெழுதும் கவிஞனைப்போல் ஆய்விட் டாயே!

அவனியொரு நாற்சந்தி ஆகும்; வந்த
ஆட்களெலாம் வழிப்போக்கர் ஆவர்; அங்கே
எவரெவரோ வருவார்பின் பிரிந்து போவார்
என்றெல்லாம் பண்டாரம் பாடு வானே!
தவறாமல் அதையெல்லாம் கேட்டி ருந்தும்,
தையலின்மேல் பாசத்தைச் சேர்த்த தென்னே!
உவர்க்கடலில் வீழ்ந்தாயோ! ஊனம் நீங்கி
உயிர்வாழ மாட்டாயோ ஏழை நெஞ்சே!

அவள்மட்டும் அழியாத சிலையா என்ன?
அவள்போனால் ஆயிரவர் மாத ருண்டே!
துவள்கின்ற சிற்றிடையும் துள்ளும் மார்பும்
தூங்குகின்ற பனிச்சிரிப்பும் சூடும் பூவும்
அவனியிலே கிடைக்காத சரக்கா என்ன!
அதற்காக வோஇங்கே அயர்ந்து போனாய்!
இவர்ந்துவரும் நாட்கேற்ப உனைத் திருத்தி
இன்பத்தைப் பருகுதற்கு வாராய் நெஞ்சே!

— மு. அண்ணாமலை



உயர்திரு உல்லாசம் அவர்களுக்கு

17. எம்பயர் தியேட்டர்

மதுரையில் யாத்திரை கோஷ்டியினர் பார்க்கவேண்டிய இடங்கள் என்று திருமலை நாயக்கர் மஹாலையும், மாரியம்மன் தெப்பக்குளத்தையும் ரயில்வே போர்டார் அடிக்கடி விளம்பரம் செய்யத் தவறுவதில்லை. மீனாட்சியம்மன் கோவிலைப்பற்றி அவர்கள் விளம்பரம் செய்வதை விட்டுவிட்டனர். அதை விளம்பரப்படுத்துவதற்காகவே வைதிக ஒலிபரப்பிகளும், குஞ்சுகோட்டான் காவேரிக் கழிசடைகளும் இருந்து வருகின்றன. சாரிசாரியாகத் 'திருப்பதிகள்' வருவதும், பக்தர்கள் கை பட்டுப்பட்டுத் தேய்ந்துபோன கலைகளைக் கண்டு மகிழ்வதும், தீராத நோயைத்தரும் தீர்த்தம் பெற்றுத்திரும்பிச் செல்வதும் நித்திய நிகழ்ச்சிகள்! இடையில் பாஷை தெரியாது பரிதவிக்கும் பண்டரிநாதர்களும், அவர்களுக்குப் பாதை காண்பிக்க யிலடியில் வரவேற்புத்தூவும் 'பாதிமூர்மார்க்கெட்டுகளை''யும் சொல்லப்புகுந்தால் மதுரையே ஒரு ''பாக்தாத்நகரமோ'' என்று ஐயுறவேண்டி வரும். எனவே இத்தோடு அந்தப்பயங்கர உண்மைகளுக்குச் சிறிது இருட்டடிப்புச் செய்துவிட்டு நான் எடுத்துக் கொண்ட 'எம்பயரை' உங்களுக்குக் காட்டுகிறேன்.

யாத்திரீகர்கள் எதைப் பார்க்க மறந்தாலும் மதுரை 'எம்பயர் தியேட்டருக்கு' விஜயம் செய்ய மறக்கக் கூடாது என்பது என் தாழ்மையான வேண்டுகோள். அப்போது தான் நான் கண்ட ''வடுவூர் சாமர்த்தியத் திருடர்''களை நீங்களும் கண்டு நன்றாக ரசித்து ஆனந்திக்கமுடியும். உல்லாசங்கள் கஷ்டப்படுவதில் எனக்கு அவ்வளவு மகிழ்ச்சி!

எம்பயர் தியேட்டர், கோயிலுக்கு வடமூலையில் நல்ல ஜனப்புழக்கமுள்ள சிங்கார முச்சந்தியில் இருக்கிறது. அந்தத் தியேட்டருக்குப் படம்

பார்க்கச் செல்பவர்கள், அவர்களை கற்ற அரிச்சந்திரப் புளுகுகளை யெல்லாம் நண்பர்களிடம கூறி ஏமாற்றமுயலுவது சர்வ சாதாரணம. 'எம்பயர் தியேட்டருக்குப் போகிறேன்' என்றதும் மதுரை வாசிகள் ஏறிட்டுப் பார்ப்பது வழக்கம். அதன் பிறகு அவர்கள் நம்மோடு வைத்திருக்கும் உறவும், நட்பும ஒரு தினுசாக மாறிவிடும். எனவே ஒரு "ஏற்பாடு" செய்து கொண்டுதான் அந்தச் சினிமாவுக்குப் போகத் துணிய வேண்டும். அநேகர் "கபே டிலெக்ஸ்" வரைக்கும் போகிறேன் என்று சாமர்த்தியமாகப் புளுகுவார்கள். பாதிப்பொய்யும பாதி உண்மையும் கலந்து பேசும் ஒப்பற்ற "சக்கரவர்த்திகள்" இவர்கள். அந்தத் தியேட்டருக்கு அருகிலே கபே டிலெக்ஸ் இருக்கிறது. அது வரைக்கும் போகிறேன் என்று கூறிச் செல்வது, எவ்வளவு நாணயமான நாகரிகமான பேச்சு!

மற்ருெரு ரகம் மதுரைக்குக் கடைசியிலிருக்கும் ஒரு இடத்தைக் குறிப்பிட்டுவிட்டு மணியடித்ததும் உள்ளே நுழைந்துவிடுவார்கள். இன்னுஞ் சிலர் நம முன்ஞலேயே, "எம்பயர் தியேட்டருக்குச் செல்பவர்கள் அத்தனே பேரும் சொரணேயற்ற எருமைகள்! எண்ணி இருபது பவுண்டு இரத்தத்தை அங்குள்ள 'அஹிமசை' மூட்டைப் பூச்சிகள் இறக்குமதி செய்து கொண்டாலும் எறும்பு கடித்தது—எலுமபு வளைந்தது என்று எண்ணிப் பேசாமலிருப்பார்கள்"-என்று காரசாரமாகப் பேசுவார்கள். மறுதினம் அந்தப் பிரமுகர் முந்தின இரவு 'எறும்புக்கடி' வீக்கத்திற்காக வெந்நீர் ஒத்தடம் போட்டுக் கொண்டு இருப்பார், இவ்வளவும் எம்பயர் தியேட்டரைப் பற்றி என் 'நண்பர்கள்' கூறும் குற்றச்சாட்டுக் கடலிலிருந்து தெறித்த சில திவலைகள்!

மூன்று மாதங்களுக்கு முன்புதான் தியேட்டர் முன்பாக அலங்காரப் பந்தலிட்டு ஆடம்பர விளக்குகள் ஜொலிக்க எம்பயர் தனது சில்வர் ஜுபிலியைக் கொண்டாடிறது. அடுத்து இரண்டு மாதங்கள் கேட்டில் நான்கு விதமான பூட்டுகள். நான்குவிதமான பூட்டுகளும் நானகு பிரமுகர்கள் தங்களுக்குத் தரவேண்டிய பாக்கிக்காகத் தனித்தனியே தேடிக்கொண்ட தற்பாது காப்பு!

நாம் தனித்து மானேஜர் மணியைக் கேட்டால், அவர் பதில் விரிவாகச் சொல்லமாட்டார். "இதற்குத்தான் பணம் கேட்கிருர்கள். இது என் சொந்தப்படம்" என்று மூலையில் குவித்து வைத்திருக்கும் பிலிம் சுருள்களைக் காண்பிப்பார். சினிமா பிலிம் மலைபோல ஒருபுறம் மானேஜர் அறைக்குள்ளிருக்கும். அங்கு ஒரு மூலையில் என் நண்பர் 'ஆபரேட்டர் ஆறுமுகம்' குப்பையைக் கிளறிக் கொண்டிருப்பார். சலூன் குப்பையைக் கிண்டுவதைவிட அதிகப் பொறுமையும் சாமர்த்தியமும் இதற்குத் தேவை என்பது மானேஜருக்குத் தெரியும். அதற்கு எந்த வகையிலும் பொருத்தமானவன் தான் ஆறுமுகம்.

"இது என்ன சார் குப்பை!"

"என்னப்பா குப்பைங்கிறே. இதானப்பா மாயமலை, மண்டோதரி பரிணயம், தேகா ஜாயகா, அணுக்குண்டு வீரன்-

இன்னும் பல ரீபப்ளிக் சீரியல் படங்கள்" என்று கூறிவிட்டு இதைக் கொண்டே நான் இன்னும் இருபது புதுப்படங்களை இங்கேயே சிருஷ்டித்து விடுவேன் என்று கூறிப் பெருமைப் படுவார். அவர் பெருமையில் நானும் பங்கெடுத்துக்கொள்ள வேண்டுமென்பது அவர் ஆசை. பாவம்! உலகை ஏமாற்றத் தெரிந்தவர்—நன்றாக வாழட்டும்,

மானேஜர் மணி படங்கள் ஒப்பந்தம் செய்வதெல்லாம் இராத்தல் கணக்கேயொழிய அடிக் கணக்கே அவரிடம் பேசக் கூடாது. படம் என்றிருந்தால் போதும். காது அறுந்தவைகள், இன்னும் சில தினங்களுக்குள் அக்கதி அடையப் போகும் நிலையிலுள்ளவை என்று பதம் பிரித்துப் பக்குவமாகப் படம்வாங்குவதில் கைதேர்ந்த "கருணைக் கிழங்கு" வியாபாரி அவர். கூடைக்காரியைக் கூட்டிக் கொண்டுதான் பிலிம் கம்பெனிக்குப் போவார். மணி வருகிறார் என்றால் காதறுந்தவைகளுக்கு நற்கதி பிறந்து விட்டது என்று, 'ஒட்டு மீசை' பிலிம்ஸ் புரோப்ரைட்டர்கள் புளகாங்கிதம் கொள்வார்கள். நிறுத்துப் பார்த்துப் பத்து அல்லது பதினைந்து ரூபாய்க்குள் இரண்டு மூன்று கூடைப் படம் கொண்டுவருவார்.



ஒருவர்:- ஆளைப்பார்த்தால் ரொம்ப "டீட்"டாக இருக்கிறான் சார்! நல்ல வெள்ளை வேட்டி, சட்டை போட்டிருக்கிறான். இருந்தும் அடுத்தவர் பையில் கைவிட்டுப் பர்ஸை எடுத்திருக்கிறான் சார், பாருங்களேன்!

மற்றவர்:- அப்படியானால் அவன் சுத்த அயோக்கியன்தான்!

ஆறுமுகம் கத்தரிக்கோலும் மைககிராஸ்கோப்பும் கையுமாக நிற்பான். ஆராய்ச்சிப் படலம் ஆரம்பமாகும். மாலை 6-மணிக்குள் 12000 அடி நீளத்தில், ஒரு இரத்தப் பிசாசு அல்லது ஒரு பயங்கர யுத்தம், 26 பாகங்கள் கொண்ட ஆண்டி—பப்ளிக் (*Anti Public*) சீரியல், மதுரைக்கு முதல் தடவை, அபூர்வ மயிர்க்கூச்செரியும் சண்டைகள்நிறைந்த ஸ்டண்ட் படம் தயாராகி விடும். இட்டத்தோடுதான் ஆறுமுகம் இந்த விஷப்பரீட்சையில் இறங்குவது வழக்கம். படம் ஆரம்பமாவதற்குமுன் வேக வேகமாக ஒரு சிலைடு தயாரிப்பான், ஜவான்கள் புடைசூழப் படம் ஆரம்பமாகும்.


முதலில் அந்த ஸ்லைடு (ஆறுமுகத்தின் தந்திர 'விளக்கம்') திரையில் காட்டப்படும். "இடையிலே படம் அறுந்து விழுந்தாலும், சவுண்டு குறைந்தாலும் சத்தம் செய்பவர்களை (போடுபவர்களை அல்ல) கண்டிப்பாக, போலீஸிடம் ஒப்புவிக்கப்படும்"

ஸ்லேடுப்படி கொஞ்ச நேரம் "ஆக்ஸ்டு 15" தரச் செந்தலே களை சில சில்லரைச்செலவிலே கதவோரத்திலே நின்று கொண்டிருக்கும். மணி திரைக்கு முன் நின்று கொண்டே ஆரம்பிக்கும்படி சமிக்ஞை கொடுப்பார். கொஞ்ச நேரம் ரோட்டு என்ஜின் ஊர்ந்து போகும் சத்தமகேட்கும். அதுபுரொஜக்டரின் ஆரம்ப சத்தம் என்று முனிசிபல் கமிஷனருக்குத் தெரியாது. தெரிந்தால், இப்படி மதுரை மக்களைப் பேயறைந்தாற்போல் திணறவைக்கும் சத்தம் எழுப்பிய குற்றத்திற்காக எம்பயர் தியேட்டரையே இருபது வருடம் சஸ்பெண்டு செய்து விடுவார்.

ஜவான்கள் எதற்கென்று நீங்கள்நினைக்கிறீர்கள். சரியாப்போச்சு. அவர்கள் இல்லாவிட்டால், படம் திரையில் ஒடுவதற்குப் பதிலாகப் பறந்து கொண்டிருக்கும 'ஆக்டர்' குதிரையை விரட்டும போது நமக்கு ஏதோ 'பிளேயிங் ஸ்காட்டிஷ்' (*Flying Scottish*) மணிக்கு 250மைல் வேகத்தில் பறந்து போவது தெரியுமே தவிர வேறு ஒரு எழவும தெரியாது. இந்த எமபயர் தியேட்டர் புரொஜெக்டர்கள் வாலிப முறுக்கு உள்ளவைகள். சந்தோஷம் தாங்கமுடியாமல் குதிகக ஆரம்பித்துவிடும். காதறுந்த படத்தைக் கட்டி அழும்போது இந்தக "கழுதைகளும" குதிக்க ஆரம்பித்து விட்டால் அப்புறம படம்காண்பித்த மாதிரி தான்—ஜனங்களும் எருமை போல இருந்து ரசித்த மாதிரிதான. எனவே தான் மணி இந்த "ஜவான்-ஏற்பாடு" செய்தார்.

அவர்கள் உருண்டு திரண்ட கல்தூண்கள்! இருப்புத் தடியால எண்ணி இருநூறு அடி அடித்தாலும் ஒரு உலுப்பு உலுப்பிவிட்டு நேராக நிமிர்ந்து கனைப்பார்கள். அவர்கள்வேலை மிஷினை இறுக்கிக் கட்டிப்பிடித்துக் கொள்வது. அவர்களின் குரங்குபபிடியிலிருந்து தப்பவே முடியாது எனபது தான் ஆறுமுகத்தின அசைக்கமுடியாத நம்பிக்கை. அவனும கால் கடுக்கப் படம் முடியும் மட்டும் நின்று கொண்டேயிருப்பான். கையில் ஒரு மாதிரியான கோணியூசி வைத்துக்கொண்டு படம் திரையில் பாதிமேலும், பாதி கீழுமாகக் காட்சியளித்துத்தரை மகாஜனங்கள் அதைச் சீட்டி மூலம் ஞாபகப் படுத்தும் போது அந்த ஊசியைக் கொண்டு படத்தை உயரத் தூக்கிவிடுவான. 'சவுண்டு' எனறு ஊடே சத்தம் எழும். அதைத்தொடர்ந்து செந்தலேகளின் லத்திக் கம்பு நர்த்தனமாடும் சதங்கை ஒலி--அதனால் ஏற்படும் எலும்பொடியும் இசை இன்பத்தில், அந்த மோகன—வாதனை லாகிரியில் மக்கள் மயங்கிக் கிடப்பார்கள்.

இவ்வளவு உயர்ந்தரகப் பண்புகளுக்குப்பிறப்பிடமாகத் திகழும் எம்பயரில் ஒருநாள் சாதாரணக் காற்று ஒரேமுகமாக வீசியதால் கட்டிடத்தின் மேல்மாடி கொஞ்சம இளைப்பாறுவதற்காகக் கீழே சத்தம் போடாமல் இறங்கிவிட்டது. அனறு தான அஸ்திவாரம பலமில்லை என்பதை எடுத்துச் சொல்வதற்காக வந்த ஆபீஸர் படம் பாதிவரை பார்த்துச் செல்லும்படி கட்டாயப படுத்தப்பட்டார். பாதியோடு, அவரும் மாடிப்படிகளில் இறங்



கணவன்:- எலே, தடிச்சோம் பேறி! என்டா எருமை மாதிரி நிக்கிறே? சித்த இங்கே வந்து அந்த 'ஸ்விட்'சைப் போடேண்டா! ஒரே புழுக்கமா யிருக்குது!

கும் சிரமமில்லாமல் உட்கார்ந்த படியே கீழே இறங்கி, நேரே ஜெனரல் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டார்.

சினிமாவை மூடிவிடும்படி முனிசிபாலிட்டி, தயவு தாட்சண்யம் பாராமல் ஒரேயடியாக உத்தரவு போட்டு விட்டது. மணி கொளும்புக்குப் போகிறதாக என்னிடம் கூறினார். நேற்றுக் கும்பகோணத்தில் பார்த்ததாக என் நண்பர் ஆறுமுகம் கூறுகிறார். ரசிகர்களைப் போலவே 'ரசிகத்தன்மை'யும இருப்பதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது?

ஆறுமுகம் வெஙகடாசலபதி கட்டிங் சலூனுக்கே மறுபடியும் போய்விட்டான. அந்தக் 'கூடைத்தட்டு' பிலிம்களுக்குக் கூடப் பணம் கொடுக்கவில்லையாம். அதற்குப் பணமும் வேண்டுமாம். அதற்காகத்தான் அந்தத் 'தர்மவான்கள்' தனித்தனிப்பூட்டுகள் போட்டிருக்கிறார்கள். எம்பயர் தியேட்டர்! அன்னக் காவடிகள், அசல் ஒன்னும் நம்பர் களவாணிகள், முழியிருக்க முடிச்சையவிழ்க்காமல். முதலடிக்கும் சந்தனத் தேவன்கள் பலர் சந்தித்துச் சரசமாடும் கூடம் எமபயர் தியேட்டர்! கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த சிறு பிள்ளைகள் புகைபிடிக்கப் பழகும் பயிற்சி மன்றம், இந்தச் சினிமா ஒன்றுதான.

பெண்களுக்கென்று தனியிடம் இடையாது. அச்சய, மடம, நாணம் முதலியவற்றைப் பார்சல் செய்துவிட்டு, ஆண்களோடு சரி நிகர் சமானம் ஆகிவிட்ட, பெண்கள வேண்டுமானல் வரலாம்.

இங்கே எல்லோரும் சமம். பெரியவர்கள், சிறியவர்கள், நீ, நான் என்ற வித்தியாசமே, கிடையாது.'நெருப்புக் கொடுங்கள்' என்று நாணயமாகக் கேட்பான. நாணயமாக மூக்கால்வாசி வில்ஸ் சிகரெட்டைக் கொடுத்துவிட்டு விழித்துக் கொண்டிருப்பார் நெருப்புக கொடுத்தவர். அந்த எச்சிற்கலை இந்த 'வில்ஸ் நாணயத்தை' ருசி பார்த்துக் கொண்டிருக்கும். சிகரெட் வேண்டுமென்றால் அப்புறம சீக்ரெட்டாக (*Secret*) தான் அவனிடம் கேட்க வேண்டும். இல்லையேல் மானம் (இருந்தால்!) பறிபோய் விடும.

இது மட்டுமல்ல. அங்கு பேசும் சொற்கள்! மரியாதைச்

சொற்கள் தமிழிலேயே கிடையாது என்று யாரேனும் துணிந்து நிரூபணம் செய்ய முயன்றால் அதற்குத் தக்கதோர் இடம் இந்த "எம்பயர்"

வளர்பிறையும் தேய்பிறையும் வழக்கம் போல எம்பயருக்கு உண்டு. லஞ்ச 'ஊழல் கமிட்டி' ஒருபுறம் மும்முரமாக வேலை செய்து கொண்டிருக்க, எம்பயர் தியேட்டருக்கு மறுபடியும் லைசென்ஸ் கிடைத்து விட்டது; மாட்டிய இரும்புப் பூட்டுகள் மீண்டும் திறக்கப் பட்டன. அதிகாரிகள் அதன் புதிய உருவத்தைக் கண்டு மிகவும் திருப்தியடைந்து விட்டார்களாம்!

மணி கெட்டிக்காரன் தான். எம்பயர் தியேட்டரின் லைசென்ஸ் 'ரத்து' என்றவுடன் எம்பயரை இம்பீரியல் டாக்கீஸ் ஆக மாற்றினான். இடிந்து விழுந்த பாகத்தை அப்படியே திருப்பதி வேலை செய்து விட்டு ஒரு மூவர்ணக் கொடியை ஏற்றினான்; மூன்று நாட்கள் கமிஷனரின் பங்களாவைக் 'காவல்' காத்தான். காரியம் முடிந்து விட்டது.

மறுபடியும் எம்பயர் (இல்லை! இமபீரியல்) தனது பிரயாணத்தைத் தொடங்கி, தனது கோல்டன் ஜூபிலியை வெற்றிகரமாக முடித்துக் கொண்டது.

அதற்கு இவ்வூர் பிரபல வஸ்தாத் 'சச்சிதானந்த சாகரம்' தலைமை வகித்து அதிக இரைச்சலில்லாமல், "லெதர் பேஸ்" என்னும் ஒரு 'மதுரைக்கு முதல் தடவை'யை, ஆரம்பித்து வைத்தார்.

என்னமோ எம்பயரும், மணியும், ஆறுமுகமும் இன்னமும் பயமற்று மதுரையில் வாழ்ந்து தான் வருகிறார்கள். எம்பயர் நின்று விட்டால் ஒரு இருநூறு பேர்களுடைய இதயத் துடிப்பர்வது நின்று போய்விடும். அவர்கள் எம்பயருக்காகவே பிறந்தவர்கள், எம்பயருக்கு எது வந்தாலும் அவர்களுக்கும் வந்த மாதிரி தான். அவர்களுக்காகவாவது எம்பயர் தியேட்டர் இன்னும் கொஞ்சம் பேர்களின் குதூகலத்தைக் கெடுத்துக் கொண்டிருக்கட்டும். ஆனால்.........

படத்தொழில் மூலம் பாமர மக்களுக்குக் களிப்பூட்டுவதற்காக ஓய்ந்த நேரத்தில் உல்லாசங்கள் அடைவதில் ஆயிரத்தில் ஒரு பங்கு இன்பம் பெறுவதற்காகத்தான் சினிமாத் தியேட்டர்கள் உள்ளன என்ற நிலைமையை மறந்து, மக்களை மடையர்களாகக் காசைக் கொட்டி அழுதுவிட்டு இப்படிக் கழுதைகளிலும் கேவலமாக நடத்தும் போக்கை வெறுக்கவில்லை என்பதற்காக இந்தப் "புளிமண்டி — கூடைக்களி" வேலைகளில் ஈடுபடும் மணிகள் நிச்சயம் ஒரு காலத்தில் வருந்தப் போகிறார்கள் என்றுமட்டும் கூறிக் கொள்ள ஆசைப் படுகிறேன்.

வணக்கம்

வழிப்போக்கன்.



ஒன்பதாம் அத்தியாயம்

இருட்டறை!

ஆரம்பத்தில் வெள்ளையர்கள் தளராது போரிட்டார்கள் தான்......எனினும நாலா பக்கங்களிலும சூழ்ந்து வந்த எதிர்ப்பு அனலைக்கண்டு பயந்தே விட்டார்கள். ஆகவே தான் பின்வாங்கி ஓடவும திட்டமிட்டனர். அந்த முயற்சியும வீணாகவே சாணடைந்தனர். இரண்டு நாள் போராட்டத்தோடு எதிர்ப்பு மடிந்து விட்டது.

வெள்ளையர்கள் தோற்றார்கள். கிடைத்தவர்கள் அத்தனை பேர் கரங்களிலும் விலங்குகள் பூட்டப் பெற்றன. கைதிகளைப் பெருமிதத்துடன் பார்த்தான் ஸிராஜ்.

“முடீன்! இவர்களைத் தக்கதோர் இடந்தேடி அடைத்து வையுங்கள்; விடிந்ததும் விசாரிப்போம்” என்றான். பிறகு தனது கூடாரத்திற்குச் சென்று விட்டான். போரினால் ஏற்பட்ட ஓயாத உழைப்பு அவனுக்கு அன்று நிம்மதியான உறக்கத்தை அளித்தது. அவன் கொஞ்சமும் அசையாமல் தூங்கிக் கொண்டிருந்தான். முடீனும் தன் கீழ்த் தளபதிகளில் முதல்வனான அஜிஸ்கானை அழைத்துக் காவலில் அந்தக் கைதிகளை வைக்கச் சொல்லிவிட்டுப் போய் விட்டான்.

வீரர்களுக்கு அந்தக் கட்டளையைத் தெரிவித்து விட்டு ஏதோ, அவசர வேலையாக வெளியேறி விட்டான் அஜிஸ்! கைதிகளைப் பத்திரப் படுத்த ஒரு அறை தேடினார்கள், உண்மையில் கிடைக்கவில்லை.

ஐயோ... ... அவசரத்தினால் எவ்வளவு பயங்கர விளைவுகள் நடந்து விடுகின்றன! “அஞ்சற்க, அபயந் தந்தோம். உங்களுக்கு எத்தகைய இன்னலும் இழைக்க இடந்தரோம்” என்று சுபேதார் சொன்னபோது அந்தக் கைதிகள் பெருமூச்செறிந்தனர் —ஓரளவு திருப்தியுடன்! இந்த நாட்டுக்

கண்ணியப் பேச்சு, அந்த வெள்ளைக் கைதிகளுக்குக் கொஞ்சம் நம்பிக்கை கொடுத்தது!......... ஒரு துளி மகிழ்ச்சி அவர்கள் உள்ளத்தில்......அந்தோ காலமும் சூழ்நிலையும் அவர்கள் எண்ணத்தில், மகிழ்ச்சியில் மண்ணை வெட்டிக் கொட்டி விட்டன!

ஏன்...? அவர்களை அடைக்க ஒரு இடம் கண்டுபிடித்தனர்—கடைசியாக! பதினெட்டு அடி நீளம், பதினன்கு அடி அகலம் கொண்டது. மூன்று பக்கங்களில் காற்ருே வெளிச்சமோ வரமுடியாது! நான்காவது பக்கதில் இரண்டு சாளரங்கள்—அதில் பலமான இரும்புத் தூண்கள்......ஒரு பக்கத்தில் இருண்ட தாழ்வாரம் உண்டு. இந்த இடத்தையே தெரிந்தெடுத்தனர்.

இந்த இடத்தை வெள்ளையர்கள் இராணுவக் குற்றவாளிகளை அடைக்கப் பயன் படுத்தினர், அந்த அறையில்—அறையா அது, நரகம் என்று கூறுகிருர்களே அது உண்மையாக விருந்தால் அதுவாகத் தானிருக்க வேண்டும்!

எத்தனை பேரை அந்த இருட்டுக்குள் தள்ளுவது? பட்டி மாடுகளா......அவர்கள்! அந்த இருட்டுக் குகையில் நூற்றுநாற்பத்தாறு உயிர்கள்—ஆண், பெண், குழந்தை... .. அதில் பெரும்பாலோர் வெள்ளையர்களே! அந்தக் கொடுமைக் கூடாரத்தில் ஆட்டு மந்தையை மடக்குவது போல அடைத்து விட்டனர். வேண்டுமென்ரு......இல்லை, இல்லை—வேருெரு இடமும் கிடைக்காமையினுல்!

அங்கு காற்றுமில்லை, ஒரே நெருக்கம்! என்ன செய்வார்கள்? அவர்கள் காவலாளிகளிடம் கெஞ்சினர், கருணைக்காக மன்ருடினர். பிறகு வேறு முறையுங் கையாண்டனர். கொஞ்சம் பேர்களையாவது வேறு இடத்திற்கு மாற்றி விட்டால் அவர்கள் நிம்மதியாக இருந்திருப்பார்கள்.

“ஆயிரம் பொன் தருகிருேம்...” என்ருன் கைதிகளிலே ஒருவனுன ஹால்வெல்.

“எதற்கு?” என்ருன் காவல் காத்த சிப்பாய்.

“இருப்பவரிலே சிலருக்கு வேறு இடத்தில் சிறை அமைத்துக் கொடுங்கள். எங்களைத் தப்பிவிட அனுமதிக்க வேண்டாம்......இந்தச் சிறு உதவி செய்தால் போதும்” மீண்டும் விளக்கினுன் அதே கைதி.

“முடியாது!”

கண்டிப்பாக மறுத்து விட்டனர் சிப்பாய்கள் இருவரும். பிறகு பலமுறைவேண்டியும் சிப்பாய்கள் செவிடராயினர்! கைதிகள் தாங்கள் தரும்தொகையை இரட்டித்தனர்! சிப்பாய்கள் காதைத் தீட்டிக்கொண்டனர்; நாவிலே நீர் ஊறிற்று, கைகள் தாமே நீண்டன!

ஆனுல்......சுபேதாரின் உத்தரவில்லாமல் எதையும் செய்ய முடியாது, செய்யவுங் கூடாது? உத்தரவு வாங்குவது அவ்வளவு கடினமும் அல்ல. இடம் போதவில்லை யென்று காரணங்காட்டி மிக எளிதில் அனுமதி பெற்று விடலாம். ஐயோ......சுபேதார் தூங்குகிருர் நிம்மதியாக! அவர் தூக்கத்தைக் கலைக்க இந்த நாட்

டில் யாருக்கு உரிமையுண்டு... தைரியந் தானிருக்கிறது! ஆகவே அவர்கள் படும்பாட்டைப் பார்த்தும் குருடராகி, அவர்களின் துயரக்குரலைக்கேட்டும் ஊமைகளாகி விட்டனர்!

இரவு கரைந்தது! ஒரே வெப்பம்,... தாகம்! குழந்தைகள் நாவரண்டு வீறிட்டுக் கதறின! பெண்கள் மயக்கம் அடைந்தனர். இந்த கோரக் காட்சியைப் பார்க்கவும் சகிக்காமல் கண்களை மூடிக் கொண்டனர். புழுக்கம் தாங்க மாட்டாமல் உள்ளுக்குள்ளிருந்தவர்கள் ஒருவரை யொருவர் மோதிக் கொண்டு சாவோரத்தை யடைந்தனர். சிலர் நாக்கை நீட்டி நீட்டித் தாகம் எடுப்பதைக் காண்பித்தனர். தொண்டை வரண்டதால் சிலர் துவண்டு விழுந்தனர். விழும்போது ஒருவர் மேல் ஒருவர் அடிபட்டுச் சாய்ந்தனர். சொட்டுச் சொட்டாகக் காவலாளிகள் நீரைப் பெய்தனர். அந்தத் துளி நீரையும் அவர்கள் நாக்கால் கக்கிக் குடித்தனர்! சிலர் பிணமாயினர். மற்றவர்களோ அவர்களில் சிலர் மரித்தார்களே என்று அழவில்லை. கொஞ்சம் இடங் கூடக் கிடைத்ததே என்று பிணங்களைப் பரப்பி அவைகளின் மீது நின்றனர்... நிலைமை அப்படி......அவர்கள் என்ன செய்வார்கள்? பரிதாபம்; சிலர் மூளைக் கோளாரால் கண்டபடி உளறினர். பலர் அந்த நிலைமைக்கு வந்து கொண்டிருந்தனர். காவலாளிகளைக் கண்டபடி வைதனர். தங்கள் ஆத்திரந் தீர வாயில் வந்தபடி திட்டித்தீர்த்தனர். அவர்கள் துப்பாக்கியின் 'பாசக்கயிற்று' முனையைக் காட்டினர்.

அந்தப் பயங்கர இருட்டறை சிரித்தது இருட்டில்.........இரவும் இந்தக் காட்சியைப் பார்க்கமுடியாமல் ஓடிவிட்டது!

பத்தாம் அத்தியாயம்

விசாரம்!

காலை வந்தது. இரவு எழுதியனுப்பிய இழவுச் சேதியைச் சொன்னது. கேட்டுத் திடுக்கிட்டான் ஸிராஜ்.

கைதிகளைக் கொண்டு செல்லக் கதவைத் திறந்தனர். வெள்ளைப் பிணங்கள் பொலபொலவெனச் சாய்ந்தன. அவைகளை அப்புறப் படுத்தவே அரை மணிக்கு மேலாகி விட்டது. எஞ்சியவர் இருபத்து மூவர்! அறுபத்து மூவர் போல இவர்கள் ஒரு துறையில் எண்ணிக்கையால் குறிப்பிடப்பட வேண்டியவர்கள்! அவர்கள் நடைப்பிணங்களாக இருந்தனர், நாளடைவில் அவர்களின் தோழர்கள் சென்ற திக்கை நோக்கி நடப்பர் என்று தெரிந்தது திட்ட வட்டமாக! வாள் முனையில் வெட்டி வீழ்த்து வானேன், தாமே சாகட்டும் என்று முன் கூட்டியே திட்டமிட்டு இந்த வேலை செய்தார்களா? ஒரு நாளும் இல்லை!

ஸிராஜ் — உத் - தெளலா இதைக் கேட்டதும் கலங்கி விட்டான். மனம் மயங்கினான், கனல் கக்கியே பழக்கப் பட்ட



ஆனாலும் ஸுபேதாருக்குத் துக்கம் மாறவில்லை. அவன் ஏக்கமே உருவாக அமைந்துவிட்டான்.

"பட், பட், பட்..." கைதட்டும் ஒலி.

"மகாராஜ்" என்று பணியாள் வணங்கினான்.

"உடனே அஜீஸ்கானை அழைத்து வா" என்று முடின கட்டளையிட்டான்.

"அவர் ஊருக்கு வெளியே சென்றுள்ளார்" என்று விடை தந்தான் மீண்டும் வந்து!

"சரி, காவல்காத்த சிப்பாய்களை அழைத்து வா" சுபேதாரின் கட்டளை.

நடுக்கத்துடன் இருவர் வந்தனர். பயந்துகொண்டே பணிந்தனர்.

"வீரரே, வீண் பழியை என் மீது சுமத்திவிட்டீர்கள். அவர்கள் விரோதிகள் தாம்—வெட்டி வீழ்த்திக் களத்திலே கத்தியும் கையுமாக நின்றிருந்தீர்களானால் உங்களுக்கு விருதுகள் அளித்திருப்பேன்"

"தக்க இடம் கிடைக்கத் தவக்கப்பட்டதால்......"

"அதோ நூற்று இருபத்து மூன்று பிணங்களும் நம்மைப் பார்த்துச் சிரிக்கின்றன. ஆம். சிரிக்காமல் என்ன செய்யும்? நான் ஆயிரமாயிரம் பிணங்களைத் துவைத்துக்கொண்டு ஓடிப் போரிட்டிருக்கிறேன். பிணங்களின் மீது நின்று கொண்டு வாளைவீசியிருக்கி

கண்களில் புனல்............சுபேதார் உண்மையிலே இடிந்து விட்டான் இந்தப் பயங்கரச் சேதியைக் கேட்டு! முகலாய வம்சத்தின் ஆட்சியில் ஒரு பெரிய இரத்தக்கோடு கிழித்து விட்டார்கள்; அசட்டுத்தனத்தால் அழியாப் பழியை உண்டாக்கி விட்டார்கள்!

"முடின், என்ன காரியம் செய்து விட்டீர்கள்? பத்திரப் படுத்துங்கள் என்றால் உயிரைக் குடித்து விட்டீர்களே!"

"மன்னிக்க வேண்டும் அவசரத்தில் நடந்து விட்டது"

"நமது அவசரம் நூற்று இருபத்து மூவரின் பிணங்களைக் கொட்டிவிட்டது. கைதிகளைக் கொன்றோம் கருணையின்றி...இது நீதியா?"

"சென்றதை யெண்ணி வருந்துவானேன்? விசாரிப்போம். விவரம் கிட்டும்"

றேன். ஆனால் இந்தப் பிணங்களோ என் இதயத்தில் புதைக்கப்பட்டு விட்டனபோலும்! இதயம் தாழ்கிறது. அப்படியே தாழ்ந்து விடும் போலிருக்கிறது"



"பாதிப் பேரையாவது இடம் மாற்ற வேண்டினர்"

"தவறிவிட்டதுஏன்?"

"அப்பொழுது இரவு..."

"இரவாயிருந்தால்.....?"

"உத்தரவு பெற..."

"என்னைக் கேட்டிருக்கலாமே!"

"தாங்கள் அயர்ந்து..."

ஆம். சுபேதார் நிம்மதியாகத் தூங்கிவிட்டான். அவனது தூக்கம் அவர்களுக்கு அழியாத தூக்கத்தைக் கொடுத்துவிட்டது. அந்தப் பயங்கர மரணக் கதை அவன் மனத்திலே மறைந்து மக்கிப் போகட்டும், எதிரிகளிடம் எப்பொழுதும் போலவே நடக்க வேண்டும் ... இப்படி மனதிலே எண்ணிக்கொண்டு எஞ்சியிருந்த இருபத்து மூவரையும் அழைத்துவரும்படி கட்டளையிட்டான். காவலாளிகள் வெளியேறினர்.

பதினோராம் அத்தியாயம்

விசாரணை!

கைதிகள் ஒவ்வொருவராக வந்தனர்.

"என் பெயர் ஹால்வெல். தாங்கள் படைத்த நரகத்திலிருந்து தப்பி இன்னும் உயிருடனிருக்கிறேன்."

ஸுராஜ் கொஞ்சமும் வருத்தப்படுவதாகக் காட்டிக் கொள்ளவில்லை.

"காவலாளிகள் நீர் தந்தனர் சொட்டுச் சொட்டாக ... காரணம் நாங்கள் அதற்காகப் போட்டியிட்ட கோரக்காட்சியைக் கண்டு ரசிக்க! ஒளி காட்டினர் சாளரத்தின் வழியாக, நாங்கள் அவர்கள் கருணை வெள்ளத்தில் பிணங்களாக மிதப்பதைக் காண!"

"அடுத்தகைதி...?"—அவன் சொன்னான்.

"அடைத்த அறையின் அளவு தெரியாமல் நூற்று இருபத்து மூன்று உயிர்களை

வாங்கி விட்டீர்களே! இது அடுக்குமா?"

இப்படிக் கைதிகள் ஒவ்வொருவராக விசாரிக்கப்பட்டனர். ஒவ்வொருவரின் ஒப்பாரியும் கேட்க மிகவும் இரக்கமாகத்தானிருந்தது! ஆனாலும் ஸூராஜ் தனது கம்பீரப் பார்வையை மாற்றவில்லை.

அப்பொழுது அஜிஸ் உள்ளே நுழைந்தான்... இதுவரை எங்கு சென்றிருந்தான்? என்ன செய்து கொண்டிருந்தான்?... அது மிகவும் முக்கியமான கண்டுபிடிப்பு வேலை!

அஜிஸ் எப்படியும் அமீன் சந்தைக் கண்டுபிடித்துவிட வேண்டுமென்று கிளம்பினான். முடினும் உத்தரவைப் போட்டிருந்தான். ஆகவே கல்கத்தாவின் எல்லைக் கோடுகளிலெல்லாம் திரிந்தான்.

ஒரு காளி கோயில்......அதனுள் சிரிக்கும் குரல்......அவனுக்குப் பழகிய பழைய குரல்! உடனே ஒளிந்துகொண்டான் அஜிஸ்.

"நம் திட்டத்தின் ஒரு முனை வெற்றியடைந்துவிட்டது ...... வெள்ளைக்காரர்கள் வீழ்ச்சியடைந்தனர். இன்னொரு பக்கம்.........முகலாயச் சவக்குழி தோண்டப்பட வேண்டும்......

அதுவும் முடிந்துவிடும் வெகு விரைவில்... ஹி, ஹி, ஹி ...!"

இப்படி அந்தக் குரல் ஒலி பரப்பியது. அவனது வழக்கமான சிரிப்பும் கலந்துகொண்டது. வெள்ளையர் வீழ்ச்சியைக் கண்டு மகிழ்ச்சியால் அவன் ஊதி உப்பிப்போனான், உடனே அஜிஸ் உள்ளே நுழைந்தான். காலடியோசை கேட்டவுடன் சிலையோடு ஒண்டிக் கொண்டான். அவனா விடுவான்? அவனைச் சிறையிட்டான், கைகளில் விலங்குகளை மாட்டி இழுத்து வந்தான்......

சுபேதாரிடம் இரு வீரர்கள் அவனை இழுத்து வந்தார்கள். யார் அவன? அமீன்சந்த்!

"மகாராஜ், இவன் தளபதி அஜீஸ் அவர்களால் கைதியாக்கப்பட்டவன்" என்றனர்.

உடனே அஜீஸ் ஆரம்பித்துவிட்டான் அவனது வண்டவாளங்களை......சுபேதார் நெற்றியைச்சுளித்துக்கொண்டான்.

"அஜிஸ் அமீன்சந்தை எப்படிக் கைது செய்தீர்?"

"நகருக்கு வெளியே அலைந்தபோது களைத்துவிட்டேன். களைப்புத்தீர ஒரு இந்துக்கற் கோயிலில் தங்கினேன். அது காளி கோயிலாம். இந்த ஏமாளி ஏதோ உளறினான். சந்தேகப்பட்டேன்"

"அமீன்சந்த், இதுவரை உம் மீது இருந்த நம்பிக்கைகுறையவில்லை"

"சுபேதார்ஜி, நான் நிரபராதி!"

அஜிஸ் ஆத்திரத்தோடு கூவினான்.

"இவன் துரோகி.....கொஞ்சம் அமைதியாகக் கேட்டால்

துரோக புத்தியை அம்பலமாக்குவேன்!"

"அஜிஸ்...ஆத்திரம் வேண்டாம். தக்க சமயத்தில் இவனை நாம் சுபேதாருக்கு உண்மை உருவிலே அறிமுகம் செய்வோம் — சாட்சியோடு ஆதாரத்தோடு!"

அப்பொழுது வந்த முடீன் நடந்துகொண்டே சமாதானம் பேசினான்.

"அமீன்சந்த். நீர் நிரபராதியென்றால் ஒளிவானேன்?"

"போரைப் பார்க்கவும், அந்தக் கோரக் காட்சியில் கிளம்பும் பயங்கரக் கூவலைக்கேட்கவும் நடுங்கும் கூட்டத்தவன். ஆகவே ஒளிந்தேன்...ஒளியாமலிருந்திருந்தால்தான் நீங்கள் சந்தேகிக்கவேண்டும்"

"கிஷோனிதாஸ் எங்கே?"

"நான் அறியேன், வங்கத்தின் தங்கமே!"

அஜிஸ் மீண்டும் குறுக்கிட்டான — மற்றொரு புதியசெய்தியைச் சொல்ல!

"சுபேதார்ஜி, கிஷோனிதாஸும், இன்னொரு மாதும் ஒருவரையொருவர் தழுவிப் பின்னியபடியே கடற்கரையில் பிணமாகக் கிடந்தனர்!"

"அகமபாவிக்கு ஏற்ற பரிசு" என்றான் முடீன்.

மீண்டும்சுபேதார் தொடர்ந்து பேசினான்.

"அமீன்சந்த், உமது பேச்சில் நஞ்சிருக்கிறது. உமது மூச்சிலே விஷவாடை வீசுகிறது. உமது கண்களிலே கணத்திற்குக் கணம தோன்றி மறையும் அச்ச அலைகள் உம்மைக் காட்டிக் கொடுத்துவிட்டன!"



முகவரி

"தேவா, அச்சம் குற்றத்தால் அல்ல-போர்க்கொடுமையைப் பார்த்ததால்!"

"நாம் உம்மைக் குற்றவாளியென்று தீர்மானிக்கிறோம்"

அமீன்சந்துக்கு அளித்ததண்டனை...வெறும் சொத்துப் பறிமுதல்தான்! அந்தத் துரோகிக்கு இது போதுமா? அவன் இனனமும் சரியாகச் சுபேதாருக்கு அறிமுகமாகவில்லை. அந்தத் தீர்ப்பைக் கேட்டதும் 'ஐயோ...' என்று பதறினான். பயங்கர இருட்டறை கொட்டை விழி விழித்தது. ஸுராஜ் ஹுக்காபபுகையை மெதுவாக இழுத்து இழுத்துவிட்டுக்கொண்டிருந்தான். அவன் முகம் மிகவும் வாடியிருந்தது. நூற்று இருபத்து மூன்று பிணங்களை அடுக்கியிருந்தனா. அதன் பக்கத்தில் எஞ்சிய இருபத்துமூவர் அழுதுகொண்டிருந்தனர்...அமீனசந்த, அந்தப் பயங்கரத் துரோகி... இபபடி நிகழ்ச்சிகள் மனத்திரையின் பட்டுத் தெறித்தன! ஸுராஜ் கண்களை மூடினான்.

இரண்டாம் பாகம் முற்றிற்று

சீர்திருத்தச் சிங்கம்

அத்தான்



குழந்தைகளே! ஒரு பூனை ஒரு காட்டை அரசாண்டு வந்த கதையை நீங்கள் எங்கேனும் படித்திருக்கிறீர்களா? படித்திருக்க மாட்டீர்கள். ஆனால் வெகு காலத்திற்கு முன்பு 'பரதங்காடு' என்ற காட்டை 'ருத்திராட்சப் பூனை' என்ற ஒரு கிழட்டுப் பூனை அரசாண்டு வந்தது. இவ்வளவிற்கும் அந்தப் பூனைக்கு, கையில் செங்கோலுமில்லை, துப்பாக்கியுமில்லை, ஆனால் ஒரே ஒரு ஜெபமாலை மட்டும் இருந்தது. ஜெபமாலையைக் காட்டி மற்ற மிருகங்களைத் தந்திரமாக ஏமாற்றிப் பூனை ஆட்சி செய்து வந்தது. யானை, புலி, சிங்கம், கரடி முதலிய அத்தனை மிருகங்களும் பூனையின் ஆட்சிக்குக் கட்டுப்பட்டு நடந்தன. "தான் கடவுளின் தூதாக இந்த உலகத்தில் வந்திருப்பதாகவும், தன் சொற்படி கேட்பவர்கள் சொர்க்கத்திற்குப் போவார்களென்றும், தன் சொற்படி கேளாதவர்கள் நரகத்திற்குப் போவார்களென்றும்" பூனை பிரசாரம் செய்து வந்தது. பிறகு கேட்பானேன்! நரகத்திற்குப் போவதற்கு யாரேனும் ஆசைப்படுவார்களா? பூனை தன் இஷ்டம் போல வைத்தது சட்டமாக வாழ்ந்து வந்தது.

பூனை செய்துவந்த இந்தச் சூழ்ச்சியை ஒரு சிங்கம் கொஞ்சம் கொஞ்சமாகத் தெரிந்து கொண்டது. அதற்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. ஒரு பூனை, வலுவுள்ள மிருகங்களையெல்லாம், ஒரு ஜெபமாலையைக் காட்டி அடக்கி ஆண்டு வந்ததை நினைக்க நினைக்க அதற்கு வெட்கமாயிருந்தது. மிருகங்களையெல்லாம் ஒன்றுகூட்டிப் பூனையின் குட்டை அம்பலமாக்கிற்று.

ஏராளமான சிங்கக் குட்டிகளும், புலிக்குட்டிகளும் பெரிய சிங்கத்தின் தலைமையில் ஒரு புது அரசியலை ஏற்படுத்தின. பெரிய சிங்கத்திற்குச் 'சீர்திருத்தச் சிங்கம்' என்று பெயரேற்பட்டது. பெயருக்கேற்றபடி பல சீர்திருத்தமான காரியங்களைச் செய்து வெற்றி பெற்ற சிங்கத்தின் புகழும், ஆட்சியும் நாளுக்கு நாள் நாட்டிலே செல்வாக்குப் பெற்று வந்தன.

அதிகாரத்தின் ஆசை, ஆட்சியின் மோகம்—சிங்கத்தின் புத்தியை மயங்கச் செய்தது. ஜெபமாலையைக் காட்டிப் பூனை ஊரை ஏமாற்றியதைப்போல, 'சீர்திருத்தம்' என்ற பெயரைச் சொல்லி மற்ற மிருகங்களை அடக்கி ஆள நினைத்தது அந்தக் கிழட்டுச் சிங்கம். யதேச்சதிகாரப்பித்து தலைக்கேறியது. 'தான் செய்வதெல்லாம் சீர்திருத்தம் தான்' என்ற அளவிற்கு அதனுடைய எண்ணங்கள் மாறிவிட்டன.



சிங்கத்தின் ஆட்சியின் கீழுள்ள மிருகங்களுக்கெல்லாம் சிங்கத்தின் போக்குப் பிடிக்கவில்லை. அந்த மிருகங்களெல்லாம் ஒன்று கூடிச் சிங்கத்தை, ஆட்சியைச் சிந்தித்து நடத்தும்படி நயமாக வேண்டின; பயமுறுத்திப் பார்த்தன. ஒன்றும் பலனளிக்கவில்லை. "நான் வைத்தது தான் சட்டம். நான் செய்வது சரியாயிருந்தாலும் தப்பாயிருந்தாலும் உங்களுக்குக் கேட்பதற்கு அதிகாரம் கிடையாது. நான் உங்களுக்கெல்லாம் ராஜா" என்று இறுமாப்புடன் சிங்கம் பேசிற்று.

பழைய பூனையின் தோழர்களெல்லாம் கேலியாகப் பேச ஆரம்பித்தன. ஊர் சிரிக்க ஆரம்பித்தது.

சிங்கத்தின் கீழுள்ள மிருகங்களெல்லாம் சிங்கத்தின் ஆட்சியை வெறுத்து வெளியேறின. "வேண்டியவர்களாக இருந்தாலும், வேண்டாதவர்களாயிருந்தாலும் தவறு செய்தால் தவறுதான்" என்று இதுவரை பிரசாரம் செய்துவந்த மொழிகளுக்கு இலக்கியமாகிச் சிங்கத்தின் தவறைக்கண்டித்தமிருகங்களின் தைரியத்தைக் கண்டு காட்டுமிருகங்களெல்லாம் ஆச்சரியமடைந்தன. எதிரிகளுக்குக்கூடப் பயமேற்பட்டது. அறிவுள்ளபுலிக்குட்டியின் தலைமையில் புது அரசியல் ஆரம்பமாயிற்று. காட்டுமிருகங்களெல்லாம் வாழ்த்தி மலர் சொரிந்தன!



மனப்புண்

தில்லைக் கலைமணி

மனிதன் எதிர்காலத்தில் நடப்பவற்றை யோசித்துப் பார்க்கும் தீர்க்கதரிசியாக இருந்தால் அவனுக்கு இவ்வுலகில், இன்ப துன்ப வாடையே கிடையாது. வெறும் 'ஜடப்' பொருள் தான்! இந்த உண்மையை அறிந்திருந்தும் சிலர் எதிர்காலப்போக்கைப் பெரிதும் அறிந்து கொள்ளவே விரும்புகின்றனர். இது தவறெனறு கூறவரவில்லை. என் வரையிலும் நான செய்த முட்டாள்தனத்துக்கு இது அவசியம் எனறே கூறுவேன.

பிரபல துணி வியாபாரியாயிருந்தாலென்ன? பணத்தின் மேலே படுத்துப் புரண்டால் தான் என்ன? 'மனப்புண்' ஏற்பட்டுவிட்ட பின் மனிதனால் எப்படி நிம்மதியாக இருக்க முடியும்? உடல் மேல் உள்ள புண்ணுக்காவது மருந்திடலாம; உள்ளப் புண்ணுக்கு என்ன செய்வது?

எல்லோரும் கூறுகிற காரணத்தையே தான் நானும் கூறினேன். வீட்டைப் பார்த்துக் கொள்ள ஆள் இல்லை. குழந்தை குமுதாவும் துணையின்றியிருக்கிறாள் என்றுதானே கூறி மறுமணப் பேச்சைத் துவக்கினேன். மனதில் உள்ளூற ஆசை துடித்துக் கொண்டிருந்தாலும வெளியே கூற மாட்டார்கள் அல்லவா வயோதிக மாப்பிள்ளைகள். அது போலவே தான் நானும் உள்ளொன்று வைத்துப்புறமொன்றுபேசினேன். பேச்சுப் பயனளிக்காது போகவில்லை, செல்லாக் காசாகவுமில்லை.

எப்படியோ பணத்திற்குப் பாவையை விலை பேசி மணக் கோலத்தில் அந்த அறியாச் சிறுமியை உரிமையோடு கைப் பற்றினேன். வயது ஐம்பது ஆனால் தான் என்ன; இளமை மருந்துக்குக் கூடத்துளியேனும் இல்லா விட்டால்தான் என்ன?

மனம் எழும்பிக் குதித்து இன்பக்கனவு பல கண்டது. புதுமண வாழ்க்கையின் வாடை மண நாளிலேயே பலமாக வீசத்தொடங்கியது. கட்டுத்தளர்ந்திருந்த உடல் புது முறுக்கேறுவது போல ஒரு பிரமை. அங்கிருந்த ஒவ்வொரு இளைஞனின் தோற்றத்தோடும் என்னை ஒப்பிட்டுப் பார்த்துக்கொண்டேன. கடந்த காலத்தை முன்னே தள்ளி, என்னை இளைஞனாக்கிக் கொண்டேன். சட்டைப் பையில் சீப்பு, சிறு கண்ணாடி முதல் 'குட்டிக்கூரா பேஸ் பவுடர்' வரை இடம் பெற்றிருந்தது எனக்கு மட்டுந்தான தெரியும். சொல்லப்போனால் என பத்து வயது மகள் குமுதாவைக் கூட மறந்துவிட்டு மண வாழ்க்கையில் புதிதாகப் புகும் மாப்பிள்ளை என்றே நமபினேன. ஆனால் வாழ்க்கையெனும் உலைக்கூடத்தில் நான முன்பே

ஒரு தரம் உருக்கப்பட்ட இரும் பென்பதைமறந்தேபோனேன்.

மகிழ்ச்சிப் பெருக்கு என் கண்களை மூடிக் கருத்தையும் உளுத்துப் போகச் செய்து விட்டது. ஆனால் அவள்...... நான் அறிய முடியுமா?

மாமனார் வீட்டில் மருவுண்ணல் சடங்கு முடிந்தது. தங்கத்தை நான் அழைத்துக் கொண்டு புதுமனைபுகும் விழா. தங்கத்தின் பெற்றோர்கள் பரம ஏழைகள். எவ்வளவோ தங்கள நிலைமையையும் கூறித் தங்கத்தை எப்படி வைத்துப்படைக்க வேண்டுமென்பதையும் கூறி மனுச் செய்து கொண்டார்கள். தந்தையைப் போலப் பார்த்துக் கொள்ளவேண்டுமென்றார்கள்.

எனக்குச் 'சுரீர்' என்றது. ஆனாலும் மன வுணர்ச்சியை வெளியில் காட்டிக்கொள்ளாது மூடிவைத்து விட்டேன். தங்கம் ஒவ்வொருவரிடமிருந்தும் விடை பெற்றுக் கொள்ளத் தொடங்கினாள்.

என்மனம் புதிய உற்சாகத்தில் வீழ்ந்து கிடந்ததால் அவள் கண்ணீர்க்கோலத்துடன் விடை பெற்றதைப் பிரிவு கருதி என்று என மனம் பெருமைப் படுத்திக் கொண்டது.

'நாழியாகிறது' என்று கூறி என்னையே நான் அவசரப்படுத்திக் கொண்டேன். உள்ளே சென்ற தங்கம் சிக்கிரம் வராது நாழிவளர்த்தவே, துள்ளும் உள்ளத்துடன் தலையை உள்ளே நீட்டி அவளைத் தேடினேன்.

உள்ளே நான் கண்டது என்ன? தங்கம் தன் அத்தானுடன் அழுதுகொண்டிருந்ததைக் கண்டேன்.

சுந்தரம் தங்கத்தின் தாயோடு பிறந்தவன். சிறு வயதிலிருந்தே தங்கத்தின் வீட்டிலேயே வளர்ந்தவன். இவ்வளவு தான் எனக்குத் தெரியும்.

மீதித் தொடர் கதையை இப்போது புரிந்துகொண்டேன்.

"தங்கம் வருந்தாதே! நம் காதல் ஏழ்மையின் இன்னலுக்கு இலக்காகி விட்டது. பணம் வயோதிகன் உருவிலே வந்து உன் வாழ்வைப பலி கொண்டுவிட்டது. 'பணம் என்றால் பிணமும் வாயைத் திறக்கும்' என்ற பழமொழி இருக்கும்போது மாமா என்ன செய்வார்? இரு உள்ளங்களின் ஒருமித்தகாதலை அவர் எப்படி அறியமுடியும்? இனிச் சென்றதை நினைத்து என்ன பயன்? இனி அந்தக்கிழக்கோட்டானிடமிருந்து விடுதலை பெற முடியுமா?பாழாய்ப்போன இந்துசமுகந்தான் அதற்கு இடம் தருமா? 'விதி' யென்று கூறுகிறார்களே, அதையாவது நினைத்து ஆறுதலடை, போ, போ அவன் ஏதாவது நினைத்துக் கொள்ளப் போகிறான........." அவன் அவளை அணைத்துத் தட்டிக் கொடுத்துச் சமாதானம் செய்து அனுப்பினான்.

"எத்தனையோ ஈக்கள் கட்டிய கூடு ஒருவன கண்பட்டு உடைந்துவிடுமாய" பின்னிப் பின்னி மனதிலே எழுப்பிய கோட்டையெல்லாம் உடைந்து தூள் தூளாகச் சிதறியது. காணுமிடமெல்லாம், கண்ணாடியாகக் காட்சியளித்தது. ஒவ்வொன்றிலும் என் உருவம் கோர நகை புரிந்தது. நெற்றி

யின் சுருக்கக் கோடுகள் வளைந்து வளைந்து நெளிந்தன. எண்ணக் கூண்டு காலியாயிற்று. கற்பனையா? அது எப்படி என்றது மனம். எல்லாம் சேர்ந்து என்னைக் "கிழவன், கிழவன்" என்று ஏளனம் செய்தன. ஐம்பது நூறாகிக் கூனிக்குறுகி, மரணப் படுக்கையை உதறிப் போடுவதாக எண்ணம். பயங்கரமான கொந்தளிக்கும் கடலில் என்னைப் போட்டு மூழ்கடித்துக் கொண்டிருந்தேன். எங்கேயோ சிறுகீறல்.........அது வரவரப்பெரிதாகி மனம் புண்பட்டுவிட்டது என்பதை உணர்த்தியது.

அவளும் நானும் வந்துசேர்ந்தோம்! எந்த நிலையில்...அவளோர் மௌனப்பதுமை! நானோர் மோன மூர்த்தி!

குமுதா ஓடிவந்து 'அப்பா' என்று கட்டித்தழுவினாள். குனிந்து கண்ணில் தளும்பிய நீரைத் துடைத்தேன், சீப்பும் கண்ணாடியும் கீழே விழுந்து சிரித்தன. காலால் இடறிவிட்டு நடந்தேன்.

ೋ ೋ ೋ

மாலை கடையிலிருந்து வீட்டிற்கு வந்தேன். குமுதா வந்து என் முன் நின்றாள்.

"என்ன அம்மா?" என்றேன்.

"சின்னம்மா இந்நேரம் அழுது கொண்டிருந்தார்கள்" என்றாள்.

"ஏன் அழுதாள்?" என்றேன்.

"உங்களுக்கு மகள் போன்ற அவளை மனைவியாகக் கொண்டு வந்து விட்டீர்களாம்" என்றாள்.



பையன்:- ஐயா அரைவீசை! சீனி கொடுங்க...........

கடைக்காரர்:- ?..........!

"ஆம் குமுதா உண்மை தான் அது! அழவேண்டியதும் நியாயம் தான்."

"என்ன இருந்தாலும் அப்பா அவள் எனக்கு அக்காள் போலத் தான் இருக்கிறாள், நீங்கள் அவளை மணந்திருக்கக் கூடாது" என்றாள்.

என் 'மனப்புண்' மகளால் மருந்திடப்பட்டு மறைந்து விட்டது.

ஓடினேன் "தங்கம்" என்றேன். "இந்து சமூகம் எப்படியிருந்தால் என்ன? இதோ உனக்கு விடுதலை நான் தருகிறேன். உன் காதலனை சுந்தரத்துக்கே உனை மறுமணம் செய்து வைக்கிறேன்" என்றேன்.

அவள் விழித்தாள். அவள் அறிவாளா என் "மனப் புண்ணை?"

வளரும் இலக்கியம்

காதல் (ஆண்டு மலர்)

அழகிய மூவர்ண முகப்புடன் காதல் ஆண்டு மலர் மலர்ந்திருக்கிறது. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களின் வாழ்த்துடன துவங்கி, ஆஸ்தான கவிஞர், கவிமணி, நாச்சியப்பன், பால சுப்பிரமணியன், சுத்தானந்தர் ஆகியோரின கவிதைகளுட னும், அரு. இராமனுதன், அகிலன், சுகி, ஆறுமுகம் முதலிய வர்களின் கதைகளுடனும் மலர் சிறந்து விளங்குகிறது. பக்கத்துக்குப் பக்கம் வண்ணமையிட்டு மலர்முழுதும்கலர்மயமாக வெளியிட்டிருக்கிருர்கள். கவிமணி அவர்களின் "புத்தி தடுமாறுதேயடா" என்ற அழகிய கவிதையும், அகிலன், சுகி, இராமனுதன் ஆகியோரின் கதைகளும் மலருக்குரிய சிறப்பை நல்குகின்றன.

ஓவியங்களில் போதுமான கவனம செலுத்தப்படவில்லை யென்பது நமதுகருத்து. இந்த ஒரு குறைமட்டும் இல்லாதிருந் தால்காதல் ஆண்டுமலர், மலர் வரிசையில் முதலிடம பெறுவ தற் குரியதாகும். வரும் இதழ்களில் இக் குறையை நீக்குவார்களென்று நம்புகிருேம். விலை ரூ1-4-0 காதல்காரியாலயம், கண்டோன்மெண்ட், திருச்சி.

குண்டூசி (ஆண்டு மலர்)

கண்ணுக்கினிய முறையிலே குண்டூசி மலர் தயாரிக்கப் பெற்றிருக்கிறது. சினிமா விசிறிகளுக்குப் படைக்கும் நல்ல மலர் என்றே இதைப் பாராட்டலாம். சினிமா நட்சத்திரங்கள் பலரின் மூன்றுநிற, ஒரேநிறப் போட்டோக்கள் பலவும், வாசகர்களின உள்ளத்தைக் கவர்வன. சின்னபபா, வசுந்தரா தேவி ஆகிய இருவரின் வாழ்க்கை வருணனை வெளியாகியிருக்கிறது. ரசிகர்களும், நட்சத்திரங்களும் என்ற கட்டுரை நகைச்சுவையாக இருக்கிறது. இன்னும் வழக்கம் போல் பல பகுதிகளுடன் விளங்குகிறது. விலை ரூ. 1–8–0 குண்டூசி 25, கிடங்குத் தெரு. சென்னை—1.

லோகோபகாரி (மலர்)

'லோகோபகாரி' மிகப்பழைய பத்திரிகை. அதன் ஆசிரியர் பாரதியாருடன் நெருங்கிப் பழகியவர் என்ற பெருமையுடையவர். அம்முறையிலே, அவரிடம் புதுமைக் கருத்துக்களை மக்கள் எதிர்பார்ப்பது இயற்கையே. ஆனல் 'லோகோபகாரி' பழமைக்கிருப்பிடம் என்பது அதில் வெளிவரும் கட்டுரைகளைப் பார்த்தாலே தெரியும். கோகோபகாரியில் ஒரு படம் வெளியிட்டிருக்கிருர்கள். எல்லோரும் கண்ணுடிபோட்டு வைத்துக் கொள்வதற்காக! என்ன படம் தெரியுமா? பட்டாபிராமன் படம்தான். தோழர் சாமி சிதம்பரனுரின் கட்டுரை

கதை, கவிதைகள் மலரை நிறைத்திருக்கின்றன. விலை ரூ. 1. லோகோபகாரி, கிடங்குத் தெரு, சென்னை 1.

கல்கண்டு (மலர்)

நிறையக் கதைகள், துண்டுத் துணுக்குகள், வண்ணப் படங்கள் இவற்றுடன் கண் நிறைந்த மலராகக் கல்கண்டு வெளிவந்திருக்கிறது. குழந்தைகளுக்கு அருமையான விருந்து. முதல் கட்டுரை சோம்பேறித்தனம், பேதம், நாத்திகம் இவற்றை அசுரர்கள் என்று குறிப்பிடுகிறது. இது போன்ற உவமைகள் குழந்தையுள்ளத்தை மூட நம்பிக்கையில் எளிதில் படியவைத்து விடும். எனவே இத்தகைய உவமை காட்டும் முறையைத் தவிர்ப்பது நன்று. விலை ரூ. 1. கல்கண்டு, வேப்பேரி, சென்னை.

பாலர் மலர் (மலர்)

அழகிய கதைகள், எளிய கவிதைகள், நல்ல படங்கள இவற்றுடன் பாலர்மலர் வெளிவந்திருக்கிறது. வேடிக்கைச் சித்திரங்கள், துண்டுத்துணுக்கிகள், வண்ணப்படங்கள் இதழைச் சிறப்பிக்கின்றன. விலை ரூ. 0—8—0. பாலர்மலர் நிலையம், புதுக்கோட்டை.

வாடாமலர்

இம்மாதப்பத்திரிகையின் முதலிதழ் வரப் பெற்றோம். வேடிக்கைக் கட்டுரைகளும், கதைகளும், பக்கத்துக்குப் பக்கம், படத்துடன் கூடிய விகடத் துணுக்குகளும் நிறைந்து விளங்குகின்றன. ஓவியர் ரெஸாக்கின் கைவண்ணத்தால் மலர் அழகுபெறுகிறது. கலியுகக் கவிராயரின் நாடோடிப் பாட்டு நன்றாக இருக்கிறது. விலை 6 அணு வாடாமலர்ப் பதிப்பகம், தியாகராய நகர், சென்னை —17.

பாடுவார் முத்தப்ப செட்டியார்

(வரலாறு)

ஒன்றரை நூற்றாண்டுக்குமுன் வாழ்ந்து வந்த முத்தப்ப செட்டியார் என்பவர் நல்ல கவிஞர். அவர், ஜெயங்கொண்டார் சதகம் முதலிய புராணக் கற்பனை நிறைந்த பாடல்கள் பாடியிருக்கிறார். அவரைப் பற்றி நகரத்து வணிகப் பெருமக்களிடையே வழங்கிவரும் கட்டுக் கதைகளை, உண்மையென நம்பி, இளவரசன் நா. நடராஜன் என்பவர் அக்கதைகளைத் தொகுத்து வெளியிட்டிருக்கிறார். இதை வரலாறு என்பதை விடப் 'புராணம்' என்றால் பொருத்தமாக இருக்கும். விலை ரூ 1—4—0 மன்னவன் வெளியீடு கீழச்சிவல்பட்டி— இராமநாதபுர மாவட்டம்.

இன்ப நினைவு

ஒருவனைக் காதலித்த ஒருத்தி வேறொருவனை மணந்தாள். மணந்த கணவன் மங்கையின் உள்ளத்தையும் ஏக்கத்தையும் அறிய இயலாமல் மனம் வெறுத்து நாட்டுத் தொண்டுக்குப் புறப்படுகிறான். காதலனே நாட்டுத் தொண்டை இலட்சியமாகக் கொண்டு, காதலைப் புறக்கணிக்கிறான். காதலனுக்கு நல்லவளாகத் தோன்றிய அவள் கணவனுக்குப் புரியாத புதிராக அழகுள்ள நஞ்சாகத் தோன்றுகிறாள். கடைசியாகப்

புதிருக்கு விடைகாணும்போது அவள் இறந்துபோய் விடுகிறாள். இவ்வாறு முடியும், இளமைக் கனவின் துன்ப முடிவுதான் 'இன்ப நினைவு'. அகிலனின் தெளிவான நடையுடன் கதை அழகாகச் செல்கிறது. அழகிய பதிப்பு. விலை ரூ 1. பழனி பிரசுரம், மணிக்கூண்டு, புதுக்கோட்டை.

ஜி. டி. நாயுடு (வரலாறு)

கோவை கோபால் பாக் மாளிகைக்கு ஒருமுறை சென்று வந்தவர்களெல்லாம், "இத்தனை அரும்பொருள்களும், அவற்றைப் படைத்து இயக்கும் ஆற்றல் வாய்ந்த அறிஞர் ஒருவரும், ஆணவ அரசாங்கத்தால், உயிருடன் அழிக்கப் படுகிறார்களே" என்று வருந்தாமல் திரும்புவதில்லை. தென்னாட்டுத் தொழில் விஞ்ஞானி ஜி. டி. நாயுடு அவர்கள் முப்பது ஆண்டுகளுக்கு முன் ஒரு மோட்டார் ஓட்டியாக இருந்தார். அவருடைய விஞ்ஞான அறிவும், இயந்திரங்களோடு பழகிய அனுபவமும், இடைவிடாத முயற்சியும் அவரை இன்றைய உயர் நிலைக்குக் கொண்டுவந்தன. ஆனால் அரசாங்கத்தின் வருமான வரி இலாகாவின் காரணமற்ற ஆணவ அதிகாரப்போக்கு அவரைச் செயலற்றவராக்கிவிட்டது. அந்த அறிஞரின் வாழ்க்கை சுவைநிறைந்தது. தோழர் டி. எம். முத்து சுருக்கமாக எழுதி வெளியிட்டிருக்கிறார். விலை 12 அணா. திராவிட மணிப்பதிப்பகம், தெப்பக்குளம், திருச்சி.

ஜனநாயகமா?

ஜனநாயகம்—ஜனநாயகம்என்ற சொல்லை வைத்துக்கொண்டு மக்களைத் துன்பப்பிணைப்பில் ஈடுபடுத்திக்கொண்டிருக்கும் இன்றைய அரசாங்கத்தின் தவறான போக்கையும், தேர்தல் கால வாக்குறுதிகள் தண்ணீரில் எழுதிய எழுத்துக்களாகப் போன போக்கையும் எடுத்துக் காட்டுகிறது இந்நூல்! ஆசிரியர் கி. மனோகரன். விலை 6 அணா. தீச்சுடர் நிலையம் சிறுகனூர்—திருவானைக்காவல் வழி.

அறிவின் கேள்வி

சிந்தனை சந்தேகிக்கிறது என்ற கோரநாதனின் கட்டுரையொன்றும், அறிவின் கேள்வி என்ற வின்வுட்ரீட்டின் கட்டுரை ஒன்றும் அடங்கிய புத்தகம், கடவுட் கொள்கையை முறியடிக்க வல்ல கட்டுரைகள். விலை 3 அணா. தீச்சுடர் நிலையம் சிறுகனூர், திருவானைக்காவல் வழி.

வள்ளுவர் காமம்

இது வள்ளுவர் காலம். வள்ளுவரைப்பற்றி என்ன எழுதினாலும் செல்லுமென்ற நிலை வந்துவிட்டது. இப்புத்தகத்தில் 12-குறள் விளக்கக் கட்டுரைகள் —சிலகதை வடிவில்— நாகரிகமற்ற பல சொற்கூளங்களுடன் சுவையற்ற போக்கில் அமைந்துள்ளன. எழுதியவர் ஒளிர் மணி. திராவிட மணிப் பதிப்பகம் — தெப்பக்குளம் — திருச்சி. விலை 6 அணா.

நா. வேத்தரசன்

பாழடைந்த பள்ளி வாயில்

பத்திரிகைகளில் வந்த கதைகளின் தொகுப்பு. ஆசிரியர் ரசூல். விலை 12 அணா. அறிவு மலர்ப் பதிப்பகம். கோவிந்தக்குடி P. O. தஞ்சை.



19. வஞ்சியிலிருந்து வடநாடு செல்லல்

சேரவேந்தனாகிய செங்குட்டுவன் பேராற்றங் கரையை விட்டகன்று பரிவாரங்களுடன் வஞ்சிநகரிலே வந்து புகுந்தான்.

வஞ்சி நகரத்தின் மணிமாட வீதியிலே பெருமிதமாய் அசைந்து வரும் முரச யானையின் மீதமர்ந்த வள்ளுவன், சேர வேந்தர் படை சூழ வடநாடு செல்வதை இடி எனப்பேசிக் கடலென முழக்கி அறிவித்து வருகிறான். வஞ்சிநகரத்து வஞ்சியரும் அவர் வாழ்வின்பத் துணைவரும் பிற ஆடவரும அணி அணியாய் நின்று அதை ஆர்வமாய்க் கேட்டனர். தோள் தினவெடுத்த மறவரும, வாளுக்கு உணவு வந்தது என வாகை சூடும வீரரும் கேட்டனர். எக்களிப்பு எய்தினர்.

நான்கு வீதியும்வந்து ஒன்று கூடும் சதுக்கத்தில் முரசயானை வந்து நின்றது. அதன் மீதமர்ந்த வள்ளுவன்

வாழ்க எங்கோ
மன்னவர் பெருந்தகை
ஊழிதோ றூழி
உலகங் காக்கென
வில்தலைக் கொண்ட
வியன்பேர் இமயத்தோர்
கற்கொண்(டு) பெயரும்
எம் காவலன்; ஆகலின்,
வடதிசை மருங்கின்
மன்னர் எல்லாம்
இடுதிறை கொடுவந்து
எதிரீ ராயின்
கற்கடம் பெறிந்த
கடும்போர் வார்த்தையும்
விடர்ச்சிலை பொறித்த
வியன்பெரு வார்த்தையும்
கேட்டு வாழுமின்!
கேளீராயின்
தோள்துணை துறக்கும்
துறவொடு வாழுமின்
தாழ்கழல் மன்னன்
தன்திரு மேனி
வாழ்க
சேனை முகம்!

என்று முடித்தான். தம்மரிய மன்னரை வள்ளுவன் முதலிலும் வாழ்த்துகிறான். முடிவிலும் வாழ்த்துகிறான். இந்த இருவகை வாழ்த்துக்குமிடையிலேதான் அவன் அறிவிக்க வேண்டிய செய்திகள் அடங்கி இருக்கின்றன.

சேர வேந்தர் இமயம் நோக்கி வரும் எண்ணத்தை எடுத்துக் கூறுகிறான்.

கற்பரசியாகிய கண்ணகியார்க்குக் கல்லெடுத்துக் கங்கையிலே நீராட்டி வர நினைப்பதைத் தெளிவாய்த் தெரிவிக்கிறான். "அவ்வாறு வரும்போது வடவரசர் இத்தமிழரசரின் தலைமையை ஏற்பதற்கடையாளமாகத் திறை சுமந்து எதிர் வந்து காணுக" என்கிறான். "காணத்தவறினால் அவனது சினத்தின் முன்னே சிரழிந்துசிதறுண்டு போவீர்கள்" என அறிவுறுத்துகிறான்" இதை வலியுறுத்த அவன் கடலோடு பொருது கொண்டவெற்றியையும் மலையோடு (இமயமலை) மலைந்துகண்டகொற்றத்தையும் கேட்டு அறிந்துகொள்ளுங்கள்" என்று எச்சரிக்கை செய்கிறான். அவ்வாறுஅறியவும் மாட்டீர்களானால் மனைவியை வெறுக்கும் தவத்தினை மேற்கொள்ளுங்கள் என்று கூறிமுடிக்கிறான்.

இருந்த இடத்திலிருந்து முழக்கிய இம்முரசொலி இமயம் வரை சென்று எதிரொலித்தது ஆம். அழும்பில் வேள் என்ற அமைச்சன்கூறியபடி தலைமறைவாய்த் திரியும் ஒற்றர்கள்மூலம் வடநாடுமுழுதும் பரவிவிட்டது.

சேர வேந்தர்க்கு நாடு பிடிக்கும் ஆசையோ, அங்கு ஆட்சி செலுத்தும் எண்ணமோ எள்ளளவும் இல்லை என்பதை வள்ளுவன் அறிவித்த வார்த்தைகள் காட்டுகின்றன. ஆனால் ஈடு இணையற்ற, தலையாய வீரத்திற்குத் தகுதியான திறைப்பொருளை விரும்புவதாய்க் கூறிமுடிக்கிறான். இதனால் வள்ளுவன் குமரியிலிருந்து இமயம் வரை தலைமைக்குத் தம்மினும் உயர்ந்த ஒரு அரசரில்லைஎன்றஎண்ணத்தைக்காட்டக் காணுகிறோம்.

அரண்மனையின் வெளியிலே முரசுமுழங்கி அடங்கியது. அடங்கிய அதேசமயத்தில் அரசன் உள்ளத்திலேஒருஎண்ணம் குமுறி எழுந்தது. சேரன் செங்குட்டுவன் தன் அரசாண்மை தோன்றப் படை வீரர் தலைவர்களை நோக்கினான். அவன் வாயுடையது தம் வாழ்வென்று எண்ணும் அவ்வீரர்கள் ஆவலும் ஆர்வமும் நிறைந்து மலர்ந்த முகத்தினராய் அவன் சொல்வதை எதிர்பார்த்து நின்றனர்.

இமையத் தாபதர்
எமக்கீங் குணர்த்திய
அமையா வாழ்க்கை
அரைசர் வாய்மொழி
தம்பால் ஒழிகுவதாயின்
ஆங்கஃது
எம்போல் மன்னர்க்கு
இகழ்ச்சியுந் தருஉம்

புண்ணியத் துறைகளிலே நீராடுதற்பொருட்டு இமயமிருந்து இங்கு வந்த முனிவர் சிலர் கனகன், விஜயன் என்னும் இரண்டு ஆரிய அரசர்கள் தமிழ் வேந்தரை இழிவாகப் பேசினதாகக் கூறினர். தமிழக வேந்தர்களது ஆற்றலை அவர்கள் அறியார்கள் போலும் என்றபோது உணர்ச்சிவயப்பட்ட சேனைத் தலைவர்கள் ஏககாலத்தில் 'ஆம் ஆம்' என்றனர். மேலும் தொடர்ந்து சேரன் பேசினான். பலமில்லாத வாழ்க்கையை உடைய அவ்வரசர்கள் கூறியது நம்மிடத்தே தங்கியிருந்தால் அது நம்மைப் போன்ற வேந்தராகிய சோழ, பாண்டியர்க்கும் இகழ்ச்சியைத் தந்ததாகும். தமிழ் நாட்டிலுள்ள ஒரு தனி அரசனை இகழ்ந்தாலும் அது தமிழகமுழுவதை

யுமே இகழ்ந்ததாகும். எனவே:

வடதிசை மருங்கின்
மன்னர்தம் முடித்தலைக்
கடவுள் எழுதவோர்
கற்கொண்டு அல்லது
வறிது மீளும்என்
வாய்வா ளாகில்
செறிகழற் புனைந்த
செருவெங் கோலத்துப்
பகையரசு நடுக்காது
பயங்கெழு வைப்பில்
குடிநடுக் குறூஉங்
கோலேனாகென

கண்ணகியார்க்கு எடுத்து வரும் கல்லைக் கங்கையில் நீராட்டிக் கனக விஜயர் முடித் தலையிலே ஏற்றி இங்கு சுமந்து வரச் செய்வேன். செய்யேனாயின் நான் பகையரசரைப் போரில் ஒடுக்காது குடிமக்களை ஒடுக்கிய கொடுங்கோல் அரசனுக்கு ஒப்பாவேன் என்ற கடுஞ்சினத்தில் பிறந்த வஞ்சினங்கள் வியப்பையும், வீரத்தையும் உண்டாக்கின.

ஆசான் அரசனை நோக்கி எழுந்தான்.

ஆர்புனை தெரியலும்
அலர்தார் வேம்பும்
சீர்கெழு மணிமுடிக்(கு)
அணிந்தோ ரல்லால்
அஞ்சினர்க் களிக்கும்
அடுபோர் அண்ணல்நின்
வஞ்சினத்து எதிரும்
மன்னரும் உளரோ
இமய வரம்பநின்
இகழ்ந்தோர் அல்லார்
அமைகநின்
சினமென

"இமயவரம்ப! ஆத்திமாலை சூடிய சோழனையும் வேப்பமாலை சூடிய பாண்டியனையு மல்லவா வடவாரியர் இகழ்ந்ததாய்ச் சொல்லப்பட்டது. உன்னை இகழ்ந்து அவர்கள் உயிர்வாழவும் ஒண்ணுமோ? சினம் தணிக" என்றான்.

இங்ஙனம் அவனது போராண்மையைப் பலர் புகழ்ந்தனர். வடநாடு செல்லும் படைத் தலைவர்கட்குச் சேரன் விருந்து செய்தான். வஞ்சிநாடாளும் சேரவேந்தன் வாகை சூடிவருக என அனைவரும் வாழ்த்தினர்.

நாடக மடந்தையர்
ஆடரங்கு யாங்கணும்
கூடையில் பொலிந்து
கொற்ற வேந்தே
வாகை தும்பை மணித்
தோட்டுப் போந்தையோடு
ஓடை யானையின்
உயர்முகத் தோங்க
வெண்குடை நீழலெம்
வெள்வளை கவரும்
கண்களி கொள்ளும்
காட்சியை யாகென

வஞ்சி நகரத்தின் ஆடரங்குகளிலேவணங்கியகையினராய் நிற்கும் நாடக மகளிர் "வேந்தே! வாகையும் தும்பையும் பனம்பூ மாலையும் சூடி நீ அரச யானையில் அம்பாரி மீதிருந்து பவனி வரும் காட்சியில் எம் வளையல்களைக் கவரும் இயல்பினையாகுக" என வாழ்த்தினர்.

காலாட் படை, குதிரைப் படை, தேர்ப்படை ஆகிய நால் வகைப் படைகளையும் படைத் தலைவர்கள் தலைமை ஏற்று அணிவகுத்து நடத்திச் சென்றனர். வஞ்சி நகரை விட்டகன்று குடகடலின் வழியாக நிலம் நடுங்க, மலை முதுகு நெளியக் கடலெனத் திரண்டு நீலகிரிச் சாரலை அணை வரும் வந்தடைந்தனர்.

அரச யானையின் மீதமர்ந்த சேரன் அதை விட்டுக் கீழ் இறங்கி நிலத்தில் கால் வைத்தான். மெய்க்காப்பாளர் அடியீடு ஏத்தப் பெருமிதமாய் நிமிர்ந்து அடி எடுத்துவைத்து நகர்ந்து கூடாரத்திலே பொருந்திய அமளி மீது வந்து அமர்ந்தான்.

..பொது மேடை..

பொன்னி'யின் அன்பர்கள் நாட்டு நடப்பு, உலக நிகழ்ச்சி எதைப்பற்றியும் தத்தம் கருத்துரையை இப்பகுதிக்கு எழுதி அனுப்பலாம். ஒரே ஒரு நிபந்தனைதான். உங்கள் கருத்துரை ஒரு 'கார்டுக்குள்' அடங்கிவிட — வேண்டுமென்பதுதான் அந் நிபந்தனை —

சுந்தரம் பள்ளி
2-11-49

★ சஞ்சீவிச் சாலை

தங்கள் 25-10-49 பொன்னி இதழைக் கண்டு மகிழ்ச்சியடைந்தேன். அதில் 'இளமைப்பித்தனின்' 'சஞ்சீவிச் சாலை' ஒரு சிறந்த எழுத்தோவியம். வேடதாரிகளுக்கு ஒரு அதிர் வேட்டு! வெளியுருவை மெய்யென நம்பி ஏமாறும் பாமரர்களின் கண்களைத் திறக்க உதவும் சஞ்சீவி! உண்மையில் இன்றைய உலகில் நடமாடும் ரிஷிகளும், சுவாமிகளும் எழுத்தாளர் 'இளமைப்பித்தன்' அவர்கள் காட்டும் வெளிப்பூச்சுக் காரர்களே! அவர்களுக்குச் சாராயம் மட்டும் சஞ்சீவியல்ல! 'பக்' என்று ஒரு 'தம்' அடிக்கக் கஞ்சாத் தழை; காய்ந்து இறுகிய பாலைக் குடித்ததால் ஏற்பட்ட பெருஉடலைத் தழுவி இன்பமளிக்க ஒரு ஆரணங்கு! மோகன நேரத்தில் யாவற்றையும் மறந்து 'சொர்க்க வாசலைக்' காணப் புளிப்பேறிய 'பீப்பாய்ச் சாராயம்!' இத்தனைக்குமிடையே 'ருத்திராட்சக்' கையும் 'சிவோகம்' என்ற போலி உச்சரிப்பும்! 'தலைப்பின் கீழ் தலைப்பு' என்று 'இளமைப்பித்தன்' எழுதியிருக்கும் பகுதி கிரம்பவும் பொருட் செறிவு கொண்டது இம்மாதிரியான கதைகளைப் படித்துக் களிக்க மட்டுமின்றி மூளைக்கு வேலையும் அறியாமைக்கு அழிவும் தேடித் தரும் வகையில் வெளியிட்டுப் பொன்னி நல்லாள் என்றும் தொண்டு புரிவாள் என நம்புகிறேன்.

பெ. சுந்தரமூர்த்தி

○●○

குளக்குடி
31-10-40

மாதர் பணி

தமிழ் நாட்டுப் பெண்களுக்கு விழிப்பையும் வீரத்தையும் ஊட்டிய இயக்கம் சுயமரியாதை இயக்கம்தான்! விதவைக்கு மணத்தை யூட்டியதும், நீலாவதி—இராமசுப்பிரமணியம்— மரகதவல்லி — முருகப்பா—மஞ்சுளாபாய்—வைசு போன்றவர்களைத்தமிழ்நாட்டுமாதர்களுக்கு எடுத்துக் காட்டாக இருக்கச் செய்ததும் சுயமரியாதைக் கழகம் தான். ஆகவே பொதுவுடைமை இயக்கத்தில் மாதர்கள அதிகப் பங்குகொண்டு புதிய சினைவை உருவாக்கியது போலத் திராவிட முன்னேற்றக் கழகத்தில் பெண்கள் சேர்ந்து புதிய திராவிடத்தை உருவாக்க வேண்டும். சாதி ஒழிப்பை விரைவாகச்செய்ய வேண்டும். பேச்சுத் திறமையுள்ள பெண்களுக்கு மேடையில் இடம் கொடுக்க வேண்டும். எழுத்து வன்மையுள்ள பெண்களுக்கு இயக்கத் தாள்களில் இடம கொடுக்க வேண்டும். செயலாற்றும் திறமையுள்ள பெண்கள் வீடுகளில் உள்ள படித்த பெண்களுக்குப் பகுத்தறிவு நூல்களைப் படிக்கக் கொடுக்க வேண்டும். அந்த அந்தத் தெருவில் உள்ளசிறுவர் சிறுமிகளை ஒன்று சேர்த்துத் திராவிட முன்னேற்றச் சிறுவர் மன்றம் அமைத்து நமது சீர்திருத்தத்தாள்களில் வரும் கதைகள், சிறுநாடகங்கள்; பாடல்கள், விளையாட்டுகள் முதலிவற்றைக் கற்பிக்க வேண்டும்.

ச. பொருட்செல்வி

○●○

அத்தும்நடி
1-11-49

புதுமைக் குரலெடுப்போம்

தமிழகத்தின் தலைசிறந்த ஏடுகளில் 'பொன்னி' எனும் கன்னியும் ஒன்று. அவள் தமிழைப்போல! தமிழ், எந்தக் காலத்தும் வளமை குன்றாததல்லவா! அதுபோல் தான் அவளும், என்றும் அழகு மாறாதவள்; இளமை மாறாதவள்; வளமை மாறாதவள்! அவள் வாழ்க! அவளது 'சீரிளமைத் திறம் வியந்து, செயல்மறந்து வாழ்த்துதும்'! நான் 'பாரதிதாசன் பரம்பரை'யிலே வந்த கவிஞன். என்னைப் போன்ற கவிஞர்களைத் தமிழுலகிற்கு அறிமுகப் படுத்துதலைத் தலையாய கடனாகக் கொண்டு, அதன்படி நடந்தும் உள்ளது, பொன்னி! ஆகவே, நான் "பொன்னியின் புதல்வன்" என்றுகூடப் பெருமையோடு சொல்லிக் கொள்வேன்! 'பாரதிதாசன் பரம்பரை'க் கவிஞர்களெல்லாம் பொன்னியின் புதல்வர்கள் தாம்! எந்தாய் வாழ்க! பொன்னி வாழ்க! இந்நிலையில் உங்களுக்கு ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். புரட்சிக் கவிஞரின் பாதையிலே, நாட்டை வளம்படுத்த, அறிவியலில், சமூகத்தில், ஆக்கத்தில், விழிப்பை யூட்ட, மேனமேலும், பொன்னியில் வளர்ந்த பாரதிதாசன் பரம்பரைக் கவிஞர்களான நாங்கள், புதுமைக் குரலெடுத்துப் பாடுவோம் என்று உறுதி கூறிக் கொண்டு என் கருத்துரையை நிறுத்திக் கொள்கிறேன்!

தமிழழகன்

பாரதிதாசன் பரம்பரை

○●○

சென்னை
29-10-49

மூன்றே புலவர்கள்

"தமிழ் மொழிக்குத் தனிச்சிறப்பை நல்கும் மூன்று புலவர்களை மட்டும் குறிப்பிடுக" என்று யாரேனும் என்னைக் கேட்டால், நான் தயங்காது தொல்காப்பியர், திருவள்ளுவர், இளங்கோவடிகள் ஆகிய மூவரையே குறிப்பிடுவேன். கவிஞர் பாரதியார் ஒரு பாட்டிலே திருவள்ளுவர், இளங்கோவடிகள், கம்பர் ஆகிய மூவரையும் குறிப்பிட்டுவிட்ட படியால், அதையே எல்லோரும் கிளிப்பிள்ளை போன்று திருப்பித்திருப்பிக் கூறி வருகிறார்கள், கவிஞர் பாரதியார் இவ்வாறு கூறியதற்குக் காரணம் யாதாயினும் ஆதுக! தொல்காப்பியரை மறந்து கம்பரை வரவழைத்துக் கொள்ளுதல் நன்மை தருவதன்று. தமிழுக்குக் "கதி" யாவார் கம்பரும திருவள்ளுவரும் என்று இன்னொருவர் கூறி மறைந்தார். இவர் எவ்வாறு இளங்கோவடிகளைத் துறந்து கம்பரை நம்பினரோ நானறியேன். கம்பனின் அன்பர்கள் வேண்டுமானால் கம்பனுக்கு நான்காவது இடத்தை நல்கலாமேயொழிய, மூன்றே பேர்களைக் குறிப்பிடும் போது கம்பனுக்கு இடமில்லை என்பதை அவ்வன்பர்கள் அறிய வேண்டுகின்றேன்.

கோ. முத்து

○●○

திருநெல்வேலி
29-10-49

தமிழ்வளர்க்கும் இதழ்

நேற்றிரவு ஒரு கனாக் கண்டேன். ஆழி நடுவில் சிறு தீவு ஒன்றில் அரை உயிரோடு கிடக்கிறேன் நான். அலைகள் விண்ணைத் தொடுவன போன்று எழுந்து விழுகின்றன பேரொலியுடன். சரிந்த மாடமாளிகைகளும், எரிந்த செடி கொடிகளுமே எனக்குத் தென்படுகின்றன. நில அதிர்ச்சியோ, அணுசக்தியின் பேயாட்டமோ நிகழ்ந்திருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. உயிர்ப் பூண்டே, அநேகமாக உலகில் அற்றுப் போயிற்றோ என்ற ஐயம் எழுகிறது எனக்கு. எட்டுத்தொகையும், பத்துப் பாட்டும், பதினெண்கீழ்க் கணக்கும், ஏன் எல்லாத் தமிழ் நூல்களும் காவியங்களும் அழிந்து ஒழிந்து போயின. தமிழ் நூல்கள் ஏதாவது காணக்கிடைக்குமா என்று தணியாத வேட்கையோடு தீவை வலம்

வருகிறேன். தூரத்தில் இருவர் ஏதோ சில பத்திரிகைகளை ஏந்திய வண்ணம், காரசாரமான உரையாடலில் ஈடுபட்டிருத்தல் கண்டு, அங்கே செல்கிறேன். அவர்கள் புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் என்றும், அவர்களின் கரங்களில் விளங்கியவை, அம்மாமித் தமிழ் இதழ்கள் இரண்டு என்றும் காண்கிறேன். அவர்களின் ஒருவன், மற்றவனிடம், "இது ஒரு தமிழ்ப் பத்திரிகை என்று போடப்பட்டிருக்கிறது...... அப்படியானல் தமிழர்களுடைய மொழிக்கு எடுத்துக் காட்டு இவ்விதழ்கள் என்று எழுதிக் கொள்வோமா?" என்று கேட்கிறன். மற்றவன் "சே. இது உண்மைத் தமிழல்ல. தமிழுக்கு உலைவைக்க அன்று தோன்றிய ஏடுகள் தாம் இவை. தமிழ் தனிப் பண்பு வாய்ந்தது. தமிழ் மொழிக்கு எடுத்துக் காட்டாக இவ்வேடுகளை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன்." என மறுக்கின்றன்.

முதல்வனே, "அவ்வாறு கூற உனக்கு ஆதாரம் என்ன இருக்கிறது? இதுதானப்பா, உண்மைத் தமிழ்" என்று கூறுகிறன். சில நிமிடங்கள் கழிகின்றன. விண்ணிலே ஒரு செம்புள்ளி தென்படுகிறது. வரவர அது தாழ்கிறது. இறுதியில் காற்றின் சுழற்சியால் கீழே வந்து வீழ்கிறது. அது ஒரு 'பொன்னி' இதழ்! தமிழனின் முகத்திலே மகிழ்ச்சி நடனமிடுகிறது.

அவன், "பாரப்பா இதை. இது தான் உண்மைத் தமிழுக்கு எடுத்துக் காட்டு. தமிழிலக்கியத்தின் சின்னம்." என்று கூறி மற்றவன் கையில் தருகிறன். அவனும் புரட்டிப் பார்த்துவிட்டு ஒப்புக்கொள்கிறன். "தமிழ் நாட்டில் தமிழ் அழிக்கும் இதழ்களின் நடுவில் தமிழ் வளர்க்க இந்த இதழ் அன்று எழுந்திராவிட்டால் இன்று தமிழின் பெருமை என்னவாயிருக்கும்!" என்று நினைக்கும் போது, மகிழ்ச்சியால் கண்களில் நீர் துளித்தது. துடைத்தேன். கனவில் நடந்தது போலக் காலத்தின் சுழற்சியிலும் நடக்குமோ...?

திருவரங்கன்

○●○

கூனம்பட்டி
1-11-49

பாரதியின் லட்சியம் எங்கே?

"சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ்முழக்கம் செழிக்கச் செய்வீர்!" என்று பாடிய "பாரதி"க்கு "மணிமண்டபம்" அமைத்தனர் ஏராளமான பொருட் செலவில் அரசியலாரும், தமிழ் நாட்டின் முக்கியஸ்தர்களாகக் கருதப்படும்பத்திரியாசிரியர்களும், ஏனையோரும். ஆனல்-அவர்தம் கருத்தை— லட்சியத்தை-நாட்டிலே –நடைமுறையில்நடத்தி-தமிழகமெங்கும் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்ய மறந்துவிட்டனர். இதற்குச் சான்று திருச்சி மாவட்டத்திலே -அரசியல் அலுவலங்களிலே தமிழ் மூலம் ஆட்சி நடத்துவது அவ்வளவு வெற்றியளிக்க வில்லை என்பது தான். "அதிகாரிகள் அவ்வளவு தேர்ச்சி பெறவில்லை" என வருந்துகிறர் பொதுப்பணி அமைச்சர். கல்வி அமைச்சர் மாதவமேனனே "இந்தியை நான்காம் வகுப்பிலேயே மாணவர்களுக்குப் பாடம் வைத்தாலென்ன?" என்று கேட்கிறர் நம்மை. சீதாராம ரெட்டியாரோ "ஹிந்தி பயிலாவிடில் உத்தியோகம் பார்க்கும் தகுதி உங்களுக்கில்லை" என்று பயமுறுத்துகிறர் "தமிழக அரசாங்கக்கவி" இராமலிங்கனுரோ "ஹிந்தி நன்கு பயிலுங்கள், என்தமிழ் நாட்டு மாணவர்களே" என அன்புடன் வேண்டுகோள்விடுக்கிறர். இதுதான் "பாரதி"யின் லட்சியமா? இக்கருத்தைத் தாங்கள் 25—10—49 இதழ் தலையங்கத்தில் அரசியலாருக்கு எடுத்தியம்பியதற்குத் தங்களுக்குத் தமிழர்களின் நன்றி! ஆங்கில மாணவர்கள் "பல்கலைக் கழக" நியதிக்காக வேற்றுமொழி கற்பினும், படிப்பை விட்டபின் அதை மறந்து விடுகின்றனர்.

அவர்களை "வேற்று மொழியை நன்கு பயின்றாலென்ன?" என்று கேட்பின் "உலக மக்கள் அனைவரும் எங்கள் மொழியைக் கற்றுக் கொள்ளும் போது நாங்கள் எதற்காக வேற்றுமொழி பயிலவேண்டும்?" என்று உண்மைச் செருக்குடன் உரைக்கின்றனர். உண்மை, வெறும் புகழ்ச்சியிலே; அமெரிக்கப் பள்ளி ஒன்றில் நுழைந்த நேருவை மாணவன் ஒருவன் "நாங்கள் ரஷ்யாவுடன் சண்டையிட்டால் நீங்கள் எங்களுடன் சேர்வீர்களா?" என்று கேட்டானாம். என்னே அவனின் நாட்டுப்பற்று! இவையனைத்தும் நம் அமைச்சர்கள் அறிந்திருப்பர். எனினும் "சாலப்பலப்பல நற்பகற் கனவில் தன்னை மறந்த லயம் தன்னில்" இருக்கின்றனரே யன்றி நம் நாட்டை—இழந்து விட்ட நம் பண்டைப் பெருமையை—மங்கிவரும் நம் தமிழர் நாகரிகத்தை மீண்டும் உன்னத நிலைக்குக் கொண்டுவர எண்ணுவதில்லை. ஆனால் இவைகளை உணர்ந்து தமிழகத்தை முன்னணிக்குக் கொணரும் நற்பணியிலீடுபட்டிருக்கும் தங்களுக்குத் தமிழர்களின் நன்றி!

ம. சி திருமலைசாமி

○●○

குடந்தை
24-10-49

ஆக்கம்தரும் நல்லாள்

தங்களின் "பொன்னி" தமிழ் நாட்டை மட்டிலும் வளப்படுத்தும் பொன்னியாறு போன்றில்லாது, நம் நாட்டிலும் அயல் நாடுகளிலுமுள்ள பழமைப் பாசி படர்ந்ததும் புராணச் சேற்றையுடையதுமான ஆயிரமாயிரம் தமிழர்களின் இதய குளங்களில் பெருக்கெடுத்தோடித் தப்புரவு செய்து புதுமை வழங்கொழிக்கச் செய்கின்றாள். அவளது மொழியிலே மோகம், பார்வையிலே பாசம், நடையிலே நாட்டம், எழிலிலே இன்பம் கொள்ள உண்மைத் தமிழன் எவனும் தயங்க மாட்டான். எதிர்கால இன்பத்திரா விடத்தில் சிந்தனைச் சிற்பிகளை, அறிஞர்களை உலவச் செய்ய இற்றை நாளிலிருந்தே நல்லாக்கந் தருபவள் "பொன்னி" நல்லாள் எனக் கூறுதல் மிகையாகாது. கல்லூரியில் பயிலும் கட்டிளங் காளையரின் கருத்தைக் கவர்ந்து அவர்தம் கருத்தோவியங்களைக் கவிதைகளாகவும், கதைகளாகவும், கட்டுரைகளாகவும் தமிழகத்திற்கு வாரி வழங்குகிறாள். அதன் மூலம் எண்ணற்ற இளம் எழுத்தாளர்களை, புதுமைக் கவிஞர்களை நாட்டின் நற்றொண்டிற்குப் பயன் படுத்துகின்றனள். தோழர்கள் நா. பாண்டுரங்கன், தில்லை வில்லாளன், மு. அண்ணாமலை போன்றோரின் எண்ணக் குவியல்களை வழங்கி வைகைத்தைக் கண்டுக் குறும்புக் குறுநகை புரிகிறாள். பிரசாரம் மூலம் மட்டுமின்றி எழுத்து வன்மை போன்ற பல்வேறு துறைகளிலும் தொண்டு செய்ய வேண்டிய இன்றியமையாமையை உணர்த்துவாள் போன்று தோழர்கள் மு. கருணாநிதி, டி. கே. சீனிவாசன் முதலியோரது எழுத்து வண்ணங்களை அணியாகக் கொண்டு பவனி வருகிறாள். பெரியார் திருமணத்தால் தாக்குண்ட எண்ணற்ற இதயங்களுக்கு நல்வழி காட்டினாள். அதுபோழ்து அவள் ஏந்திவந்த கருத்துக் கருவூலங்களுடன் அவளை நெருங்கிய பொழுது வானத்து நீர் கண்ட வாடிய பயிர் போன்றும், காதலியை நெருங்கித் தண்ணொளும் தன்மையைப் பெறும் காதலன் போன்றும் எம்மைக் கழிபேருவகையில் ஆழ்த்தினள். மணவிழா பற்றிய கருத்து வேற்றுமையிலே 'விளம்பர விரும்பி'களின் பட்டியலிலே 'பொன்னி' இடம் பெறுவாள் என 'ஆருடம்' கணித்த 'செய்ந்நன்றி மறவாத சிலர்க'ளின் முகத்தில் கரி பூசினாள். இது போன்றே எவ்வெவற்றிலும் வாய்மையை வாழ்த்தி, வெண்மையை வெறுத்து, உண்மையைக் கண்டு உரைப்பதன்மூலம் உண்மை அறி

ஞர் ஏறுகளை இருகைநீட்டி வரவேற்கும் ''பொன்னி'' வாழ்க! பரவுக அவள்தரும் இன்பம்!! நின்று நிலவுக அவள் தம் இளமை எழில்!!!

இரா. இலக்குவன்

○●○

காக்கிநாடா
30-9-49

வாரம் இருமுறை

ஆரம்பத்திலிருந்து இன்றுவரை தமிழ் மணம்குறையாது, தமிழகத்தின் தலையாய பத்திரிகைகளில் ஒன்ருக எண்ணப்பட்டு எழிலோடு விளங்கும் ''பொன்னி''யின் சிறப்புக்கு அதன் பொறுப்பாளர்களே தான் காரணம். அப்பொன்னி மலரின் அழகும் மணமும் முன்னிலும் அதிகமாவது அதன் வளர்ச்சிக்கும்-தமிழ் மக்களின் அறிவு வளர்ச்சிக்கும்-ஓர் அறிகுறி. மேலும் ''கண் திறக்குமா?'' தொடர்ந்து வருவதில்லையே? காரணம் என்னவோ? சிறு கதைகள் அவ்வவ் விதழிலேயே முடிந்து விட்டால் ஒவ்வொரு ''பொன்னி'' இதழும் பூரணப் பொலிவுடன் விளங்கும். உலகம் விஞ்ஞானப் பாதையில் முன்னேறும் காலத்தில் தமிழரும் அவ்வப்போது ஆங்காங்கே கண்டுபிடிக்கும் அதிசயங்களை, ஆராய்ச்சிகளை, விஞ்ஞான முற்போக்கை அறிய ஆவல் கொள்ளல் இயற்கை. எனவே அவர்கள் ஆவலையும் ''பொன்னி'' அறிய வேண்டும். நாட்டின் சிக்கல்களை – நாட்டிலுள்ள பல கட்சியினரின் போக்குகளைத் தமிழரும் அறியும் வண்ணம் அரசியல் விமரிசனம் என்று ஒரு பகுதி ஒதுக்கினல் நன்ருயிருக்கும். மற்றும் இப்பொழுது ''பொன்னி'' மாதம் இருமுறை வருகிருள். ''வாரம் ஒரு முறையாவது அவள் தன் இன்முகங் காட்டி இன்புறச் செய்ய மாட்டாளா?'' என்று ஏங்குகிறது என் மனம். தன்னேரில்லாத தமிழ் மொழியின் தன்னேரில்லாத இதழாய்ப் பொன்னி விளங்கவேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

கோபாலகிருட்டினன்

பேட்டை
20-10-49

எழுத்துச் சீர்திருத்தம்

உயிரனைய ஒப்பற்ற செவ்விய தீந்தமிழ் மேன்மேலும் மேன்மையுற, இற்றை ஞான்று இருந்தமிழ் எழுத்துக்களில் சிலவற்றைச் சீர் திருத்தவும், புதிய ஒலிக் குறிப்புகள் சிற்சில ஏற்படுத்தவும் வேண்டியது இன்றியமையாத தாகும், இப்பொழுது வழக்கத்திலுள்ள 'ஈ' என்ற எழுத்து, 'இ' என்றஎழுத்தை விட அவ்வளவு சிறந்ததன்று.

ஏனெனில், ஆராயுங்கால் உயிர் எழுத்துக்கள் 'அ' முதல் 'ஐ' முடிய (இஞ்ஞான்று 'இ' எழுத்து நீங்கலாக) 12-ம், ஆய்தமும் சுழியை அடிப்படையாகக் கொண்டிருத்தலால் இது போழ்துள்ள 'ஈ' என்ற எழுத்து 'இ' என்பதாகத் தான் இருந்திருக்குமென்பது தெற்றென விளங்கும். மேலும் 'விடுதலை' செய்தித்தாளில் காணப்படும் எழுத்துத் திருத்தங்களும் அறிவுக்குப் பொருந்துவனவாக உள்ளன.

இன்னும் சில மாற்றங்களும் உண்டு. அம்மட்டோ! தமிழிடை ஜ, ஹ (வ. மொ) ஜே. எச், (ஆங்கிலம்) ஜிம், ஹே (அரபு) இன்னேரன்ன சில ஒலிக்குறிப்புகளை அமைத்தல் இன்றியமையாது வேண்டற்பாலது. என்றென்றும் திசைச் சொற்களை ஒலிக்குறிப்புக்காக அங்ஙனமேயோ அல்லது மாற்றியோ வழங்குதல் வழுவன்றெனினும் நன்றன்று. நிற்க. அரசியலார் அமைத்துள்ள தமிழ் எழுத்துச் சீர்திருத்தக் குழுவில் பெரும்பான்மையான பேரறிஞர்கள் இல்லை. எனவே இனியாவது அரசியலார் கட்சி, மத வேறுபாடு இவற்றைக் களைந்து பல சிறந்த சொல்லேருழவர்களையும் அக்குழுவில் சேர்த்துத் தமிழ் தழைத்தோங்க அரும்பணி ஆற்றுவர் என்று எண்ணுகின்றேன்.

செ. முகம்மது அபூபக்கர்

---

* பரிசுபெற்ற கடிதம்: சுந்தரமூர்த்தி, சுரந்தம்பள்ளி, காகங்கரை போஸ்ட் [வடஆற்காடு] ரூ. 5/— மணியார்டர் செய்யப்பட்டது

ஏழையின் இதயம்!

ரா. வேங்கடசாமி

புகைவண்டி புறப்படுவதற்குச் சிறிது நேரந்தான் இருந்தது. அப்பொழுது அவன் அவசர அவசரமாக உள்ளே நுழைந்து இருக்க இடம் தேடினான். தாங்கள் இடந்தேடி உட்கார்ந்துவிட்ட பெருமிதத்தில் அங்கிருந்தவர்கள் அவனைப்பார்த்த பார்வை — அதிலேதான் எவ்வளவு ஏளனம் கலந்திருந்தது! கோட்டையைப் பிடித்துவிட்ட வீரன் தன் முன் கைவிலங்குடன் நிற்கும் பகை மன்னனைப் பார்க்கும் பார்வைபோல் இருந்தது அவர்கள் பார்வை!

அவனுக்கு இருக்க இடங் கிடைக்கவில்லை. கதவோரத்தில் இருந்த முழு இடத்திலும் கால் நீட்டிப் படுத்திருந்த கிழவரைத்தான் அவன் எழுப்ப வேண்டியிருந்தது.

"இடம் இல்லையென்றால் தூங்குகிறவனுக்குத்தான் தொல்லைகொடுப்பதா?" என்று கிழவர் சீறினார்.

"இருக்கத்தான் இடமே யொழியப் படுத்துக்கொள்ள இல்லை தெரியுமா?" என்று அவன் சட்டம் பேசத்தொடங்கினான். கிழவர் பேசாமல் எழுந்து முடங்கிக்கொண்டு உட்கார்ந்தார்.

கையில் இருந்த பெட்டியை இடத்திற்குக் கீழ்வைத்துவிட்டு, கலைந்திருந்த தலையைக் கையால் கோதிவிட்டுக்கொண்டான். புகைவண்டி ஓடும் வேகத்தில் உள்ளே புகுந்தடித்த காற்று, அவன் கைக்கு வேலைகொடுத்தவண்ணம் இருந்தது.

சில்க் ஜிப்பா, அதன்மேல் ஒய்யாரமாகப் பாம்புபோல் நெளிந்துகொண்டு படுத்திருந்த சரிகை போட்ட மேல் துண்டு, சரிகைபோட்ட சேலம் குண்டஞ்சி வேட்டி — இது அவன் உடை. காதில் கடுக்கன் — கையில் மோதிரம் —நெற்றியில் சந்தனப்பொட்டு இவை அவனை அழகு படுத்திக்கொண்டிருந்தன.

இரண்டாம வகுப்பு வண்டியில் ஏறவேண்டியவன இடம் கிடைக்காமல் மூன்றாம வகுப்புக்கு வந்துவிட்டானே என்று தான அந்த வண்டியில் உள்ளவர்கள் நினைத்தார்கள். எல்லோருடைய கவனத்திற்கும உரியவனாகிவிட்டான்.

அவன் மற்றவர்களைப் பற்றிச் சட்டை செய்யாமல், அலட்சியமாகத் தன் சட்டைப் பையில் இருந்த சிகரெட் ஒன்றை எடுத்துக் கொளுத்தி

..

ஞன். அவன் புகைவிட்ட மாதிரிகூட அவர்களுக்குப் புதுமையாகத் தோன்றியது. இப்படிப்பட்ட சமயங்களில் பணக்காரன் என்ருல், அவன் மற்றவர்களுக்குமுன் பார்வைக்கு வைக்கப்பட்ட பதுமைமாதிரி தான்.

வண்டி புறப்படும் வரை நாற்காலிக்குக் கீழ்ப் படுத்திருந்த பிச்சைக்காரன் ஒருவன் எழுந்துதன் பல்லவியைத் தொடங்கிவிட்டான்.எல்லோருடைய கவனமும் இப்போது அவன் பக்கம் திரும்பியது.

கண்கள் குருடு!

குட்டநோய்!

அவன் அருகில் வரும்போது எழும்பிய கெட்ட நாற்றம் மூக்கைத் துளைத்தது. "போ போ!" என்று விரட்டினர்கள். அவன் எல்லோரிடமும் கை நீட்டியாகிவிட்டது. கடைசியாகச் சிகரெட்டை உறிஞ்சிக் கொண்டிருந்த அவன்தான் பாக்கி.

குருடனுக்கு அது எங்கே தெரியப்போகிறது! ஒரு மூலையில்போய் உட்காரப்போனுன். அப்போதுதான் ஒரு பெரிய மனிதர், "கடைசியிலே உட்கார்ந்திருக்கிருர் பாரு, அவர்கிட்டேப் போ. ஏதாவது கிடைக்கும்" என்று வழி காட்டி அனுப்பினர். தான் நன்மை செய்யாவிட்டாலும வேறு ஆட்களைக் காட்டிவிடும் மனிதர்கள் இருக்கிருர்களல்லவா? அவர்களிலே ஒருவர் அவர்.

சில்க் ஜிப்பாக்காரன் பிச்சைக்காரனைப் பார்த்தான்.

திடீரென்று அவன் முகத்தில் ஒரு மாற்றம்!

பிச்சைக்காரன் தட்டுத் தடுமாறிக்கொண்டு வந்து அவனிடம் கைநீட்டினுன். கொஞ்சங்கூடச் சிந்திக்காமல், பாதி கருகி நெருப்போடிருந்த சிகரெட்டைப் பிச்சைக்காரன் கையில் வைத்து அழுத்திவிட்டான் அந்த ஆசாமி!

"ஆ!" என்று பிச்சைக்காரன் அலறினுன். "அட பாவி!" என்று எல்லோரும் முணுமுணுத்தார்கள்.

"பழிக்குப்பழி!" என்று கூறி "ஹ ஹ ஹா" வென்று சிரித்தான் ஜிப்பாக்காரன்.

குருட்டு விழிகளில் நீர் கக்கிக்கொண்டு உட்கார்ந்திருந்த பிச்சைக்காரக் கிழவன், இந்தக் குரலைக் கேட்டதும் "வீரப்பனு?" என்று கத்தினுன்.

ஆம். அது வீரப்பன்தான்!

ஃ

வேலாயுதம் பிள்ளை பெரிய மனிதர். கணக்கப்பிள்ளை வேலை முதற்கொண்டு காய்கறி வாங்கிவரும் வேலையுட்பட எல்

லாவற்றையும் அவர் வீட்டில் வீரப்பன் தான் செய்துவர வேண்டும். இவைகளுக்காக அவன் பெற்ற சம்பளமோ பதினைந்து ரூபாய்!

வேலாயுதம்பிள்ளைக்கு வியாபாரத்தில் நல்ல வரும்படி வந்துகொண்டிருந்தது. மகளையும், மனைவியையும் நகையாலே இழைத்து மகிழ்ந்தார். தம் பிடிகூடத் தருமம் செய்யமாட்டார். இது அவருடைய தனிக் குணம்.

சிறுவனாக இருந்தபோது அவர் வீட்டுக்குவந்த வீரப்பன் இப்பொழுது இளைஞனாக மாறி விட்டான். சொந்த அத்தை மகளைத் திருமணமும செய்து கொண்டான். தனியாக இருந்தபோது எப்படியோ பதினைந்து ரூபாயில் காலத்தைக் கடத்திவந்தான். ஆனால் இப்போது இரண்டுபேர்.

முதலாளியிடம், "எனக்குக் கொஞ்சம சம்பளத்தைக் கூட்டிப் போட்டாப் பரவாயில்லேங்க" என்று தன் தேவையைக் கூறினான்.

"பதினஞ்சு ரூபாயே அதிகம். அதுக்கு மேலே தரமுடியாது. இஷ்டமானா இரு, கஷ்டமானாப் போயிரு" என்று கணடிபபாகப் பேசினார் அவர்.

முதல்நாள் பேசாமல்போய் விட்டான், வீரப்பன.

இரண்டாம் நாள் மறுபடியும் பேச்சைத் துவக்கினான். "டே, சும்மா சும்மா தொந்தரவு செய்தாக் கோபந்தான வரும்" என்றார். வீரப்பன் பதில் பேசவில்லை.

பின்னொருநாள் மெதுவாகப் பேச்சைஇழுத்தான். "ஏண்டா கொழுப் பேறிப் போச்சோ— இருந்தா இரு இல்லாட்டிப் போன்னு அன்னிக்கே சொல் லிட்டேனேடா. சும்மா நச்சு நச்சுன்னு தொந்தரவு செய் யாதே"

"இருக்கும் இருக்கும்! பதினைந்து ரூபாய்க்கு, உங்களுக்கு இவ்வளவு வேலை யாருங்க செய்வா? நான் போகமாட்டேனுங்கிற நினைப்பிலே நீங்க பாட்டுக்கு பேசிக்கிட்டே போறீங்களே"

"ஏண்டா எதிர்த்தா பேசறே! டேய் யார்ரா அங்கே? இந்தப் பயலே கம்பத்திலே கட்டிக் கையிலே நெருப்பையள்ளிக் கொட்டுங்கடா!" என்று முழக்கினார் வேலாயுதம் பிள்ளை.

வீரப்பனைப் பயமுறுத்துகிறார்என்று நினைத்துக்கொண்டு நின்றனர் மற்ற வேலையாட்கள்.

"ஏண்டா நிக்கிறீங்க? கட்டிப்போட்டுக் கையிலே நெருப்பை அள்ளிப் போட்டுத் திமிரை அடக்காமே!" என்றார்.

ஆட்கள் அவர் ஆணையை நிறைவேற்றினார்கள்.

வீரப்பன் கையிலே நெருப்பு. துடித்துக் கொண்டிருந்தான அவன். நகைத்துக்கொண்டிருந்தார் வேலாயுதம பிள்ளை.

அந்த நொடியிலேயே வேலாயுதம பிள்ளையின் உடலைக் கிழித்தெறிந்து விடலாமா? என்று நினைத்தான் அவன அவனால் முடியுமா? பணத் திற்தமுன் பாட்டாளிமகன என்ன செய்ய முடியும்?

"கழுதை இனிமே சம்பளம் கூட்டச் சொல்லாது. கட்டை அவிழ்த்து விடுங்கடா" என்றார் வேலாயுதம் பிள்ளை.

அவன் இனிமேல் நல்ல பிள்ளையாகிவிடுவான் என்றுதான் அவர் நினைத்தார். ஆனால் ஊரைவிட்டே வெளியேறிவிட்டான் வீரப்பன்.


அதற்குப் பின் ஓடிவிட்ட மூன்று நான்கு ஆண்டுகள் எத்தனையோ மாறுதல்களையுண்டாக்கிவிட்டன. வேலாயுதம் பிள்ளை நடத்திய வேடிக்கை விளையாட்டுகள் இப்போது ஒன்றுக்குப் பத்தாகப் பயன் தந்துகொண்டிருக்கின்றன. குட்ட நோய் அவருக்குத் தோழனாயிற்று. சினிமாப் படம் எடுக்க முயற்சி செய்ததில் இருந்த பணமெல்லாம் கரைந்து விட்டது. மனைவியும் மக்களும் காலராவுக்குப் பலியாயினர்.

வீரப்பனோ, வடநாட்டு வாணிபத்தில் வாழ்வு பெற்றான். வாழ்வில் மாறுதல் — ஆனால், அன்று நெருப்புப்பட்ட கையில் ஏற்பட்ட தழும்பு மாறவில்லை. அதுபோலவே அவன் உள்ளத்தில் இருந்த பழிவாங்கும் எண்ணமும் மாறவில்லை.

ஃ

வண்டி அடுத்த நிலையத்தில் வந்து நின்றது. வீரப்பன் அங்குதான் இறங்க வேண்டும். கண்களில் நீர்பெருக்கெடுக்க வேலாயுதம் பிள்ளையின் பரிதாப நிலையைப் பார்த்தான். அவர் இன்னும குனிந்த தலை நிமிராமல் உட்கார்ந்து கொண்டிருந்தார். வீரப்பன் அவர் கையில் ஒரு முழு ரூபாயை வைத்துவிட்டு இறங்கிப் போய்விட்டான்.

"ஏழையின் இதயம் என்றும் இரக்கமுள்ளதுதான்" என்று பிச்சைக்கார வேலாயுதத்தின் வாய் முணுமுணுத்தது. ●



விளம்பரத்தைப் பார்ப்பவர்:— சரிதான், சரிதான்! நாடகம் இன்றைக்கு ஒரே கல் மயமாக இருக்கும் போலிருக்கே!

துன்பக் கதை

○ சிறுகதை : டி. கே. சீனிவாசன்

எதிர்வீட்டிலிருந்து காற்றில் மிதந்து வந்த நாதஸ்வரத்தின் இசை என் காதுகளைத் தாக்கியது. ஜன்னல் வழியாக வெளியே பந்தலைப் பார்த்தேன். யாராரோ பெரிய மனிதர்கள்—தம்பதிகளை வாழ்த்தியருள அழைப்புக் கொடுத்து வரவேற்கப்பட்டவர்கள் — தங்கள் சொந்தக் கதைகளைப் பேசிக்கொண்டு உட்கார்ந்திருந்தார்கள்.

"அறுபது வயதுக் கிழவனுக்கும் இருபதுவயதுக் குமரிக்கும் திருமணமாமே"—ஊர் முழுதும் பேசிக்கொண்ட இந்தக் கேலிப் பேச்சு என் காதுகளுக்குள்ளேயே தங்கித் திரும்பத் திரும்ப ஒலித்துக்கொண்டிருந்தது.

"கற்சிலையைச் சுற்றிக் கவர்ச்சிகரமான சேலையைக் கட்டி வைத்தால் அதைப் பார்க்கும் எந்தப் பெண்ணுக்காவது மன மயக்கம் உண்டாகிவிடுமே" என்ற சந்தேகம் என்னை அறியாமலே எழுந்தது.

"பக்தி மனப்பான்மை இருக்கும் வரையில் எந்தவிதமான பாதகமும் நேர்ந்துவிடாது" என்று என் மனதில் எங்கோ மறைந்திருந்த சமுதாய அமைப்பு சமாதானங் கூறியது.

"அப்போதுதான் பூத்த புது மலரை அர்ச்சனைக்கென்று பிய்த்துச் சின்னாபின்னப் படுத்துவதுதான் பக்தியா?" என்று அறிவு எதிர்த்துக் கேட்டது!

திருமணக்கோலத்தில் இருக்கும் என் சக்குவின் உருவம் மன அரங்கில் தோன்றியது. செவ்விதழ்களும் சிரித்த முகமும்! பட்டுப்போன்ற கன்னங்களும் பட்டால் விடாதுபற்றிக் கொள்ளும் பார்வையும்! என்னென்னவோ கற்பனைகள் என் சிந்தனையிலிருந்து தெறித்துச் சிதறின. அவள் ஒரு சிலையாகவோ சித்திரமாகவோ இருந்திருந்தால் உலகம் அந்த அழகைப்பார்த்து ரசித்துக்கொண்டாவது இருந்திருக்கும். உயிரும் உணர்ச்சியுங் கொண்ட பெண்ணாயிருப்பதால் தான் அவள் வாழ்வை இன்று உருக்குலைக்கிறது.

கடுங் கோடையும் குளிருமே நிறைந்த என் வாழ்க்கைப் பாலைவனத்தில் என்னைத் தன்னந் தனியே தவிக்கவிட்டுச் செல்லுகிறாள் அவள் என்பதை நினைத்தபோது உலகம் தலைகீழாகச் சுழலத் தொடங்கியது எனக்கு. நான் விட்டுப் பிரிந்த இறந்த காலம் என் மனதைச் சுற்றிச்சூழ்ந்து கொண்டது. தென்றலாகத் தொடங்கிய சிந்தனை மெல்ல மெல்ல வளர்ந்து புயலாக வீசத் தொடங்கிற்று. என் இதயக் கடல் குமுறிக்கொந்தளித்தது!

"அப்பவேகுடிச்சிருந்தா அந்தப்பால் கெட்டுப்போயிருக்காதுல்ல" என்று வேலைக்காரி சொல்லிக்கொண்டிருந்தது என் காதுகளில் விழுந்தது!

௨

நான் என்று தொடங்கி எழுதப்படும் பெருமபாலான கதைகளில் எப்படியோ சோகத்தின் சாயல் படிந்து விடுகிறது. துர்ப்பாக்கியம் மிகுந்த என் வாழ்வு மட்டும் அந்த விதிக்கு விலக்காக இருக்குமா? வாழ்க்கையை வசந்தமாகவே விரும்பி வரவேற்றேன். ஆனால் கடுங்கோடையே என்னைச் சுற்றிக் கவிந்துகொண்டு வாட்டி வதைத்தது. அந்தக்கோடையிலே இளைப்பாற்றிக்கொள்ளக்குளிர் தருவோ, தருநிழலோ, நிழல் கனிந்த கனியோ என் நினைவுக்கெட்டிய தூரம் வரை தட்டுப்படவே யில்லை!

சிறுவயதில் ஏதாவது ஒரு காரணத்துக்காக நான் தவருமல் என் அப்பாவிடம் அடி வாங்கிக்கொண்டே யிருப்பேன். அப்போதெல்லாம் என் தாய் நான் அடிபடுவதைத் தடுக்காவிட்டாலும் "ஐயோ பாவம்" என்று அனுதாபங்காட்டக்கூட மாட்டாள். "இத்தனை அடி வாங்கியும் இன்னும் சொரணை வரவில்லையே" என்று ஏசித்தான் காட்டுவாள்.

அன்று வலியின் வேதனை தாங்கமாட்டாமல் திண்ணையில் உட்கார்ந்து அழுதுகொண்டிருந்தேன். "எங்கேயாவது ஓடிப்போய்விடலாமா?" என்ற எண்ணம் என்னைத் தன்பால் திருப்பிக் கொண்டிருந்தது. அதனால் அழுகை மட்டும் ஓயவில்லை. "வலிச்சுதா?" என்ற குரல் கேட்டு நிமிர்ந்து பார்த்தேன். எதிர் வீட்டுச் சக்கு என்னெதிரே நின்றுகொண்டிருந்தாள். அவள் பார்வையில் நிறைந்திருந்த கனிவு, குரலில் கலந்திருந்த குழைவு இரண்டுஞ்சேர்ந்து என் அழுகையை மேலும் அதிகமாக ஆக்கின.

"சக்கு" என்றேன்.

"ஏன்?" என்று கேட்டுக் கொண்டே என்னருகில் வந்து உட்கார்ந்தாள்.

"ஒருவேளை நான் பேய்க்கும் பிடாரிக்கும் பிள்ளையாகப் பிறந்திருப்பேனோ?" என்று வெகு நாட்களாக எனக்கிருந்த சந்தேகத்தைக் கேள்வி உருவில் வெளியிட்டேன்.

உடனே வாய்விட்டு உரத்துச்சிரித்தாள் அவள். எனக்கு என்ன தோன்றியதோ தெரியவில்லை. ஓங்கி விட்டேன் ஒரு அறை அவள் கன்னத்தில். "ஐயோ" என்றலறியே விட்டாள் சக்கு. "டேய்" என்ற என் அப்பாவின் அழைப்பு உள்ளேயிருந்து கேட்டது. எங்கேயாவது ஓடித்தப்பித்துக் கொள்ளலாமா என்று எண்ணம ஏற்பட்டது எனக்கு. அப்படித்தான ஓடினுலும திருமபி வந்துதானே ஆக வேண்டும். அப்போது ....! நடுங்கிக் கொண்டே உள்ளே நுழைந்தேன். பிறகு......?

வழக்கமாகக் கிடைக்கும் அதே தண்டனை தான்!

இந்தத் தடவை நான் திண்ணையில் வந்து உட்கார்ந்த போது சக்குவின் மேல் ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. அவள் மட்டும் அழுதிருக்காவிட்டால்.........! அவளோடு பேசுவதே இல்லை என்று உறுதி செய்து கொண்டேன்.

"இப்படியாகும்னு தெரிஞ்சிருந்தா நான் அழுதே இருக்க மாட்டேனே."

நிமிர்ந்து பார்த்தேன். சக்குவின் கண்கள் அன்பும் அனுதாபமும் நிறைந்து காட்சி அளித்தன. அவள் கன்னம் இன்னும் சிவந்து தான் இருந்தது. பட்டுப்போயிருந்த என உள்ளத்தில்கூடச் சிறிது கலக்கந் தோன்றியது. "வலிச்சுதா?" என்று கேட்டேன். பேசாமல் தலையைக் கவிழ்த்துக்கொண்டாள் அவள். குனிந்து அவள் முகத்தைப் பார்த்தேன். குறும்புங் கேலியும் அதிலிருந்து கூத்தாடின!

உதிர்ந்துபோகும் தாரகையைப்பறறியிழுத்துக் கொண்டிருக்கும் வானத்தைப்போலத் தீய்ந்து கருகிக்கொண்டிருக்கும் என் வாழ்வு பாழாகாமல் காத்துவந்தாள் சக்கு. உலகிலேயே எனக்காகக் கண்ணீர் விட்ட ஒரே ஜீவன் அவள். அவள் உருவை என் உள்ளம் விரும்பி வரவேற்காத நாளே கிடையாது.

"சக்கு, என்னையே கல்யாணம் பண்ணிக்கிறியா?" என்று பல தடவைகளில் அவளைக் கேட்டிருக்கிறேன். அப்போதெல்லாம் அவள் வாய் திறந்து எந்தவித பதிலும் சொல்வதில்லை. அன்பும் ஆசையும் நிறைந்த பார்வையால் என் முகத்தைப் பார்ப்பாள். பின்பு தலையைக் கவிழ்த்துக்கொள்ளுவாள். அவ்வளவுதான்!

திரையில் ஓடிக்கொண்டேயிருந்த படத்தை "இடைவேளை" என்ற அறிவிப்போடு திடீரென நிறுத்தியதைப் போலக் கட்டுக்காவல் இல்லாது திரிந்த சக்குவுக்கு எதிர்பாராமல் சிறைவாசங் கிடைத்தது. நான் தனியாள் ஆனேன். சூழ்நிலை வேறு என்னைச் சுற்றி நின்று வேட்டையாடத் தொடங்கியது. எட்டுந் தூரத்தில் தானிருந்தாள் என் சக்கு. ஆனால் எட்டாப் பொருளாக எனக்காகிவிட்டாள். அவளுக்கு மட்டும் என் நிலை தெரிய நேர்ந்தால்......!

3

திருமணமாகிச் சக்கு தன் கணவன ஊருக்குப் போய்விட்டாள். என் வாழ்க்கைப் புத்தகத்தின் ஏடுகளை நான் புரட்டாமல் அவைகள் தாமாகவே புரண்டுகொண்டே சென்றன. காலப்போக்கில் ஏதோ ஒரு மாறுதல் என் உடலிலும் உள்ளத்திலும் தோன்றத்தொடங்கியது. பாரதியார் பாடல்களில் "கண்ணன் பாட்டுக்களை" விட "கண்ணம்மா பாட்டுக்கள்" தாம் என் கருத்தை அதிகமாகக் கவர்ந்தன. இதுவரையில் சுற்றி நின்று நிழல் தரும் சோலை தான் பெண் என்று நினைத்திருந்தேன். இப்போதுதான் நான் அந்தச் சோலையில் கீதம் பாடித்தேன் குடிக்கும் வண்டு என்ற உண்மை எனக்குத் தெரிய வந்தது. அழகும் அலங்காரமும் நிறைந்த அந்தப்புரங்கள், கட்டிலறைகள், கண்ணாடிக்கு

முன் நின்று உடைமாற்றுங் கட்டங்கள் இவைகளாகவே நிறைந்திருக்கும் கதைகளையும் நாவல்களையும் தேடிப் பிடித்துப் படிக்கத் தொடங்கினேன்.

பூப்போலப் பாதுகாத்திருக்க வேண்டிய என் மென்மையான உள்ளத்தைச் சிறு வயதிலேயே கசக்கி நசுக்கித் தீய்த்துவிட்டதால் என மனதில் இருந்த உயர்ந்த பண்புகள் எல்லாம் வற்றி வறண்டே போய்விட்டன. தெளிந்த நீரோடையில் எதிர்நீச்சுப் போடும் மீன் குஞ்சுகளைப் போல என் உள்ளத்தில் உடல் வேட்கையால் தோன்றும் உணர்ச்சிகள் துள்ளி விளையாடத் தொடங்கின! என்னைவிட ஏழெட்டு வயது மூத்த பெண்கள்மேல் கூடக் 'காதல்' கொண்டிருக்கிறேன். ஆனால் அவர்கள் மட்டும் 'நானேக்குங் கால் நிலத்தையும் நோக்காக் கால் என்னையும்' பார்ப்பதேயில்லை!

பெண்கள் அழுதால் உலகமே ஓடிவந்து அவர்களுக்கு ஆறுதல் கூறுகிறது. ஆனால் ஆண்கள் அழுதால் கையாலாகாதவன் என்று ஏசித்தான் காட்டுகிறார்கள். கெட்டு நாசமாகப்போன நான் என்னைத் தொல்லைப் படுத்திய சூழ்நிலையை விட்டு ஓடினேன். எங்கெங்கோ திரிந்தேன். எங்கேயும் என்நிலைதான் இருந்தது. எல்லோரும் நானாகவே தெரிந்தார்கள்.

கடைசியில் எப்படியோ சக்கு இருந்த ஊருக்கே வந்து சேர்ந்தேன். என்னைச் சக்கு வரவேற்றபோது அவள் உருவம் எனக்குக் கலக்கத்தை உண்டாக்கி விட்டது. மெருகு கலைந்திருந்த அவள் தோற்றம் என்னைத் துடிதுடிக்கச் செய்தது. அங்கே நான் தங்கியிருந்த அன்று முழுவதும் சேறும் சகதியுமாகவே என் மனதில் குழம்பிக் கொண்டிருந்தன.

"சீ! அவளையா அப்படி நினைப்பது?" என்று என் மனதில் எழுந்தது ஒரு எண்ணம்.

"அவள் என்ன? அவளும் ஒரு பெண்தானே!" என்ற சமாதானமும் கூடவே தோன்றியது.

"உனக்கு அவள் செய்த உதவிக்கு நீ செய்யும் கைம்மாறு இதுதானா?" என்று என்னிடம் கொஞ்ச நஞ்சம் எஞ்சியிருந்த நல்ல பண்புகள் என்னைப் பார்த்துக் கேட்டன.

"பழுத்த பழத்தைச் சுற்றி வேலியமைத்துக் கொண்டு அதைப் பறிக்காமல் அழுகவிடுவதை விட........." என்னையே தேற்றிக் கொண்டேன்.

இரவு படுக்கப் போவதற்கு முன் பால் கொண்டு வந்து கொடுத்தாள் சக்கு.

"சக்கு" என்றேன்.

மௌனமாக என் முகத்தை உற்றுப் பார்த்தாள்.

'வாழ்வில் இருள் படிய விட்டுக் கொண்டே யிருப்பது அறியாமை யல்லவா?" என்று கேட்டேன்.

பெருமூச்சும் சிரிப்புமாக என்னைப் பார்த்தாள். அவள் முகத்தில் வெட்கமோ வேதனையோ இல்லை. அலட்சியமும் வெறுப்பும் நிறைந்த ஒரு தோற்றம்!

"இருள் என்பது என்ன? உலகத்தின் நிழல்தானே! உலகம் என்ன அவ்வளவு கொடுமையானதா, அதன் நிழல் கூட வேதனை தரும் அளவுக்கு?" என்று பதிலளித்தாள் அவள்.

காய்ந்து சருகாகிக் கொண்டிருந்த மலரான அவளைப் பார்க்க என்னால் சகிக்கவில்லை. அந்த மலர்ச்செடிக்கு மட்டும் நீர் வார்த்துக் காப்பாற்றினால் ...! சிவந்த மணம் நிறைந்த இதழ்களும் ஜீவ சக்தியும் நிறைந்து விடுமே! மெல்ல அவள் கையைப் பற்றினேன். என் கைகள் நடுங்கிக் கொண்டேதான் இருந்தன. என்னையே கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தாள் அவள். அந்தக் கைகளைப் பிடித்திழுத்தேன். ஓங்கி ஒரு அறை என் கன்னத்தில்! வேகமாகத் திரும்பி வெளியே நடந்து போனாள் சக்கு! வலியேதுந் தோன்றவில்லை எனக்கு. ஆனால் அவளைப் பின்தொடரும் நெஞ்சுரம் மட்டும் உண்டாகவில்லை. எங்கோ என் மனதின் ஒரு மூலையில் சக்கு மறுபடியும் வந்து "வலிச்சுதா?" என்று கேட்கமாட்டாளா என்ற ஆசைமட்டும் தோன்றியது!

அமைதி நிறைந்த அந்த இரவில் என் நிம்மதியைக் கெடுத்துக் கொண்டிருந்தன அந்தப் பாழுங் கனவுகள்! வெகுநேரம் என்னால் அயர்ந்துறங்கவே முடியவில்லை. எப்போது அயர்ந்தேன் என்பது தெரியவில்லை. நான் எழுந்தபோது விடிந்து வெகுநேரமாகியிருந்தது. வேலைக்காரி நானிருந்த அறையைக் கூட்டிக் கொண்டிருந்தாள்.

"மணி என்ன இருக்கும்?" என்று அவளை நான் கேட்டபோது உண்மையிலேயே இரவில் நடந்த அந்த விஷயம் வெளியில தெரிந்து விட்டதா என்று அறியவேண்டும் என்ற ஆவல்தான் எனக்கிருந்தது.

"என் ஐயா! ராத்திரி பாலைக் குடிக்காமெ அப்படியே வச்சிட்டிங்களே. கெட்டுப் போயிருக்கே இப்போ" என்று சொல்லிவிட்டுப் பால் பாத்திரத்தை எனக்குக் காட்டினாள் அவள்.

மேஜை யருகே சென்ற எனக்கு அதிலிருந்த கடிதந்தான் கண்களில் பட்டது. எடுத்துப் படித்தேன்.

"அன்புள்ள.........

ஒழுங்கு, ஒழுக்கம், கட்டுப்பாடு இவற்றின் எல்லையை விட்டுக் கவனித்தால் கூட உன் செயல் நல்லதல்ல. எத்தனையோ முறைகள் உனக்கு ஆறுதல் அளித்திருக்கிறேன். அப்போதெல்லாம் நான் குளிர்ச்சி நிறைந்த அருவியாக இருந்தேன். ஏக்கம் நிறைந்த இதயமும் தூக்கம் வராத இரவுகளும் என்னை இப்போது ஒரு எரிமலையாக ஆக்கிவிட்டன. க்ஷயரோகத்தால் தினம் தினம் கொஞ்சம் கொஞ்சமாகச் செத்துக் கொண்டேயிருக்கிறேன். நான் கெட்டாலும் பரவாயில்லை, உன்னைக் கெடுப்பது மட்டும்......

நீ இங்கிருந்தால் ஒருவேளை எனக்கும் அந்த மயக்கம் ஏற்படலாம். ஆகையால் விடிந்ததும் என் பார்வையில் படாமலே போய்விடு.

அன்புள்ள
சக்கு"

செம்பில் இருந்த பாலை எடுத்து வெளியே கொட்டினேன். பேசாமல் பையை எடுத்துக் கொண்டு தள்ளாடித் தள்ளாடி நடந்து சென்றேன். நிராசையால் சாம்பலான என் உணர்ச்சிகள் என்னைத் தள்ளி கொண்டே சென்றன.

"அப்பவே குடிச்சிருந்தா அந்தப் பால் கெட்டுப் போயிருக்காதுல்ல" என்று வேலைக்காரிசொல்லிக்கொண்டிருந்தது என் காதுகளில் விழுந்தது!